# கீதமடி நீ எனக்கு

இந்துமதி



20212
363030З

# 1

கார் கூனூரை நெருங்கியபோது ஆர்த்தி, அனுவின் மடியில் தூங்கி விழுந்தாள்.

''வண்டியை ஒரு ஓரமாக நிறுத்துங்களேன், ராஜ். ஆர்த்தியைப் பின் சீட்டில் படுக்கவைக்கிறேன்''.

நடராஜ் காரை ஓர் ஓரமாக நிறுத்திவிட்டுக் கீழே இறங்கி அனுவின் பக்கம் வந்தான். கதவைத் திறந்து ஆர்த்தியின் தூக்கம் கலையாமல் அவளை வாங்கித் தன் தோள் மீது சார்த்திக் கொண்டான். அனு கசங்கிப் போயிருந்த ஷிபான்புடவையைச் சரிப்படுத்திக்கொண்டு கீழே இறங்கி, பின் கதவைத் திறந்து ஆர்த்தியின் சின்ன டன்லப்பில்லோ தலையணையை சீட்டில் போட்டான். நடராஜ் அவளை ஒரு ரோஜாப் பூமாலையை அலுங்காமல் சீட்டில் வைப்பது போல் படுக்க வைத்தான். ஆர்த்தியின் முகத்தில் விழுந்த அவளது பாப் செய்யப் பட்ட கூந்தலை ஒதுக்கி விட்டபோது ஆர்த்தி முகத்தைச் சுளித்தவாறு புரண்டு படுத்தாள்.

''ஓ, ஸ்லீப் பேபி...'' என்று மெதுவாகத் தட்டிக் கொடுத்துவிட்டுப் பனிக்காற்று அதிகம் வீசவே, கார் கண்ணாடியைத் தூக்கிவிட்டுக் கதவை மூடினான்.

திரும்பக் கார் கிளம்பியது. இப்போது ஆர்த்தி தூங்கி விட்டது இருவருக்கும் வசதியாக இருந்தது. நடராஜ், கரத்தை நீட்டி அனுவைத் தன் அருகில் இழுத்தான். அனு அவன் தோளில் தன் தலையைச் சரித்துக் கொண்டாள்.

"ரொம்பக் குளிருகிறது' இல்லையா அனு?"—அவன் ஒரு கையால் ஸ்டியரிங்கைப் பிடித்து, மறு கையால் அவளது இடையை அணைத்துக் கொண்டே கேட்ட போது கண்களை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தாள் அவள். அந்தப் பார்வையில் உணர்ச்சி வசப்பட்ட ராஜ் குனிந்து அவள் நெற்றியில் முத்தமிட்டான்.

"ஐய, என்ன ராஜா இது?" என்று செல்லமாகச் சிணுங்கிக் கொண்டே அவனைப் பார்த்த அனு குபீரென்று சிரித்தாள்.

"என்ன அனு...?"

"ஸீ யுவர் லிப்ஸ்..."

"மைன்...?"

அவள் தன் ஹாண்ட் பாக்கைத் திறந்து சின்ன காம்பேக்ட்டை எடுத்து அவன் முகத்திற்கு நேரே காட்டினாள். அந்தக் கண்ணாடியில் தன் இதழ்களில் ஒட்டிக்கொண்டிருந்த அவளது நெற்றிப் பொட்டைப் பார்த்துச் சிரித்தான் அவன். அவள் தன் புடவைக்கு மேட்ச் ஆகிற மாதிரி ஆரஞ்சு நிறத்தில் அழகாகப் பொட்டு வைத்துக் கொண்டிருந்தாள். அது இப்போது கோணலாகக் கலைந்து பாதி அவன் இதழ்களில் ஒட்டிக்கொண்டு விட்டது.

"ஸாரி அனு. உன் பொட்டைக் கலைத்து விட்டேன்."

அவள் பதிலளிக்காமல் புன்னகையோடு தன் கைக்குட்டையால் அவன் உதட்டைத் துடைத்துவிட்டாள். ராஜ் தொட்டால் சிவந்துவிடும் நிறம். அதற்கு ஏற்றாற்போல் இயற்கையிலேயே அவன் இதழ்கள் லேசாகச்சாயம் பூசின மாதிரி சிவந்திருக்கும்.



இப்போது அந்த ஆரஞ்சு நிறமும் சேர்ந்துவிடவே லிப்ஸ்டிக் போட்ட மாதிரி இருந்தது. அனு அவன் முகத்தையே பரவசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். பெண்களைப்போல் மென்மை நிறைந்த முகம் அவனுடையது. முன் நெற்றியில் வந்துவிழும் சுற்றை முடி. கருமையாக அடர்ந்த கண் இமைகளுக்குக் கீழ் குறுகுறுவென்று கவர்ந்திழுக்கும் காந்தப் பார்வை. செதுக்கி வைத்தாற் போன்ற அளவான மூக்கு. கம்பீரமான நல்ல உயரம். பரந்து விழுந்திருந்த அகலமான தோள்கள்...

"என்ன அனு அப்படிப் பார்க்கிறாய்?"

ஒரு வளைவில் லாகவமாகத் திருப்பி காரை ஓட்டிக் கொண்டே கேட்டான் ராஜா. ஒவ்வொரு திருப்பத்திலும் அனு அவன் மீது சரிந்தாள்.

"ஒன்றுமில்லை ராஜ்..." என்றாள் அனு, தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டே.

"சரி, நான் இப்போது என்ன நினைத்துக் கொண்டிருக்கிறேன் என்று சொல்லு, பார்க்கலாம்..."

"எப்போது ஊட்டி வரும், ஓட்டலுக்குப் போய் நன்றாகச் சாப்பிடலாம் என்று நினைத்துக் கொண்டிருப்பீர்கள்."

"ஏய், சாப்பாட்டுராமன் என்று நினைத்தாயா என்னை?" என்று செல்லமாகத் தலையால் அவள் தலையில் முட்டினான்.

"வலிக்கிறது ராஜ்" என்று போலியாக தடவிவிட்டுக் கொண்டே, "என்ன ராஜ் நினைத்துக் கொண்டீர்கள்?" என்று கேட்டாள் அவள்.

"ஊஹூம், சொல்லமாட்டேன்."

"சொல்லுங்கள் ராஜ், ப்ளீஸ்..."

''நான் சொல்ல வேண்டுமானால் நீ ஒன்று செய்ய வேண்டுமே...''

''என்ன?''—ஆர்வத்தோடு அவன் முகத்தைப் பார்த்தாள் அவள். அவன் அவள் தோள்மீதிருந்த தன் கையை எடுத்து ஆள்காட்டி விரலை மட்டும் உதட்டில் வைத்துத் தலையைச் சாய்த்துக் கெஞ்சுகிற மாதிரி அவளைப் பார்த்தான் அவள் புரிந்து கொண்டாள்.

''ஹேய், என்ன ராஜ் இது...நடு ரோட்டில் எல்லாம்?'' என்று சிணுங்கினாள் அவள்.

''இங்கே யார் நம்மைப் பார்க்கிறார்கள்? அப்படியே பார்த்தால் பார்த்துவிட்டுப் போகட்டுமே!''

''போங்கள் ராஜ்...ஊஹூம்...'' என்று நாணத்தோடு தலைகவிழ்ந்தாள் அவள்.

''ப்ளீஸ் அனு...'' அவள் முகத்தை நிமிர்த்தினான் அவன். கடைசியில் ராஜாவின் ஆசை நிறைவேறியது, கைக்குட்டையைத் தன் இதழ்களில் ஒற்றியவாறு கேட்டாள் அனு:

''சரி, இப்போது சொல்லுங்கள். என்ன நினைத்துக் கொண்டிருந்தீர்கள்?''

''சொன்னால் சிரிக்கக் கூடாது.''

''மாட்டேன் ராஜ்.''

''இந்த மாதிரி நிறைய ஹேர்பின் பெண்ட்ஸ் வர வேண்டுமென்று நினைத்துக் கொண்டேன்,''

அனுவிற்குப் புரியவில்லை;

''எதற்கு ராஜ்?''

அவள் கேட்டபோதே ஒரு வளைவு வந்தது.



வேண்டுமென்றே நடராஜ சற்று வேகமாக வளைத்துத் திருப்பினான். அந்த வேகத்தில் அனுவின் உடல் அவன் மீது நன்றாகச் சரிந்தது. அவளை அதே நிலையில் அணைத்துக் கொண்டு ''இதற்குத்தான்...'' என்றான் அவன், குறும்புப் பார்வையுடன்.

''ஹேய், என்ன ஒரே கே மூடில் இருக்கிறாற்போல இருக்கிறதே இது நம் ஹனிமூன் ட்ரிப் இல்லை ராஜ்''

''இல்லை என்று யார் சொன்னது? இது நம் ஸெகண்ட் ஹனிமூன் ட்ரிப் டார்லிங்...''

இருவருக்கும் திருமணமானவுடனேயே ஹனிமூனுக்காக ஊட்டிக்கு வந்தது ஞாபகத்திற்கு வந்தது. புதிதாகத் திருமணமானவர்கள் காதலித்துத் திருமணம் செய்து கொண்டவர்கள் கேட்க வேண்டுமா? துடிப்பும், துள்ளலும், கலகலவென்ற சிரிப்பும் காரில் ஒரே அமர்க்களம். இந்த ஏழு வருடங்களில் அவர்கள் திரும்ப இப்போதுதான் ஊட்டிக்கு வருகிறார்கள். அப்போது வந்ததற்கும் இப்போது வருவதற்கும் அதிக மாற்றம் இல்லை. இந்த ஏழு வருட தாம்பத்திய வாழ்க்கையில் நடராஜ், அனுவிற்கு இடையே இருந்த அன்பும் ஆசையும், பாசமும் நாளுக்கு நாள் அதிகமாயிற்றே தவிர குறையவில்லை. அவர்களது ஜோடிப் பொருத்தத்தையும், ஒற்றுமையையும், பார்ப்பவர்கள் நல்ல அதிசயத் தம்பதிகள் என்று வியந்து கொள்வதுண்டு. உண்மையிலேயே அனுராதாவும், நடராஜும் அதிசயத் தம்பதிகள்தான். இத்தனை வருடங்களாகியும் இன்னும் புதுமணத் தம்பதிகள் மாதிரி எப்போதும் ஒரே கும்மாளந்தான். அவர்கள் இருவரும் ஒன்றாக ஓர் இடத்தில் இருந்தால் அந்த இடம் நிறைந்திருக்கும்.

ஒருவரை விட்டு ஒருவர் பிரிந்திருக்கவே மாட்டார்கள். ஒரு நாளைக்கு ஓராயிரம் முறைகளாவது 'அனு

அனு' என்று அவனை வாயார அழைத்து விடுவான்
நடராஜ். அவளும் 'ராஜ் ராஜ்' என்று அவனையே சுற்றி
வந்து கொண்டிருப்பாள். வீட்டில்தான் இப்படி
என்றில்லை. தொழிற்சாலையிலும் அதே நிலைமைதான்.
எப்படி என்று கேட்கிறீர்களா? அனு அவனைப் போலவே
அந்தத் தொழிற்சாலையின் மற்றொரு டைரக்டர்
மட்டுமல்ல. நடராஜின் அந்தரங்கக் காரியதரிசியும்
அவள்தான். இந்த ஏற்பாடு இருவருக்குமே பிடித்
திருக்கது. தொழிற்சாலை வேலை நேரமான அந்த எட்டு
மணி நேரத்தில்கூட ஒருவரை ஒருவர் பிரிந்திருக்க
வேண்டியதில்லை அல்லவா? அனு எப்படி அவனுக்கேற்ற
அழகும், அன்பும் பொருந்திய மனைவியாக இருந்
தாளோ, அதே போல் பொறுப்பும் திறமையும் மிகுந்த
காரியதரிசியாகவும் விளங்கினாள். நடராஜிற்குத் தன்
மனைவியைப் பற்றிச் சொல்ல முடியாத பெருமை.
அனுவை மனைவியாக அடைந்ததே பெரிய அதிஷ்டம்
என்று நினைத்தான்அவன். அதே மாதிரிதான் அனுவும்
அவனைப் பற்றி நினைத்துக் கொண்டிருந்தாள். நடராஜ்
தனக்குக் கணவனாகக் கிடைக்க எவ்வளவு பாக்கியம்
செய்திருக்கவேண்டும் என்று நினைத்து அடிக்கடி
பரவசப்படுவாள் அவள்.

"என்ன யோசனை அனு?" என்று அவள்
மௌனத்தைக் கலைத்தான் நடராஜ்.

"இல்லை ராஜ். போன முறை ஊட்டிக்கு வந்தபோது
நாம் இரண்டே பேர்கள்தான். ஆர்த்தி நம்மோடு
இல்லை. அதை நினைத்துக் கொண்டேன்."

"இப்போது ஆர்த்தி மட்டும்தானே வருகிறாள்
அனும்மா அடுத்த முறை பாரேன்! ஒரு ராஜா பயலும்—"
"போங்கள் ராஜ்..." என்று இடையே குறுக்கிட்ட
அனு, நாணத்தால் சிவந்துப்போன தன் முகத்தை
மறைத்து கொள்ள அவன் தோளிலேயே முகத்தைப்



புதைத்துக் கொண்டாள். அந்த நாணத்தை ரசித்துப்
புன்னகையோடு அவள் கூந்தலை வருடியபடி கேட்டான்
நடராஜ்.

"ஆர்த்திக்கு ஆறு வயதாகி விட்டது என்பது
ஞாபகம் இருக்கட்டும் அனு. உன்னை மாதிரியே
உனக்குப் பரிந்து பேச ஒரு பெண் கிடைத்துவிட்டாள். நீ
என்னைத்தான் ஏமாற்றிக் கொண்டே வருகிறாய். என்
பக்கம் சேர்ந்து கொள்ள ஒரு குட்டிப் பயல் வேண்
டாமா?"—அவன் குரலில் உண்மையான ஏக்கம்
நிழலாடியது.

அனு பேசவில்லை.

"என்ன அனு, பேசாமல் இருக்கிறாய்? இனிமேலும்
நீ என்னை ஏமாற்றக்கூடாது டார்லிங். பாவம். அப்பா,
அம்மா கூடத் தம் பேரனைப் பார்க்க வேண்டுமென்று
எவ்வளவு ஆசையாகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்
தெரியுமா?"

அனுவிடமிருந்து அதற்கும் பதில் வராமற் போகவே
ராஜா அவள் முகத்தைத் திருப்பினான். அவள் காதருகே
குனிந்து, 'அவனுக்கு என்ன பெயர் வைக்கலாம்
அனும்மா!' என்று இரகசியமாகக் கேட்டபோது,
மற்றொரு 'போங்கள் ராஜா' வைச் சொல்லி விட்டுத்
தன் கரங்களால் முகத்தை மூடிக் கொண்டுவிட்டாள்
அவள். அந்த முகம் குங்குமமாகச் சிவந்துபோய்
விட்டது.

அனுவிற்கும் ராஜாவைப் போலவே தனக்கு ஒரு
மகன் பிறக்க வேண்டும் என்ற ஆசைதான். ராஜா
ஆர்த்தியைக் கொஞ்சுவான். அவளது கன்னங்களில் தன்
ஆசையெல்லாம் கொட்டி முத்தமிட்டு விட்டு, "அனு,
ஆர்த்திமீது எனக்கு ஏன் இவ்வளவு ஆசை தெரியுமா?
அவள் உன்னைப்போலவே இருக்கிறாள், அதனால்தான்"

என்பான். அப்போதெல்லாம் அவனைப் போலவே ஒரு மகன் இருந்தால் தானும் பதிலுக்கு அப்படிச் சொல்லலாமே என்ற ஏக்கம் தோன்றும் அவளுக்கு. ஆனால் என்ன காரணமோ தெரியவில்லை. ஆர்த்தி பிறந்து ஆறு வருடங்கள் ஓடிவிட்டன. அப்படி ராஜாவிடம் அவள் பெருமைப்பட்டுக் கொள்ளும் சந்தர்ப்பம் மட்டும் வரவே இல்லை. திடீரென்று அனுவிற்கும் ஓர் எண்ணம் தோன்றியது. திருமணமாகி ஊட்டிக்கு வந்து தங்கிவிட்டுப் போனதும்தான் ஆர்த்தி அவள் வயிற்றில் உதித்தாள். அதன்பின் இதுவரை ஒன்றுமில்லை. இப்போது திரும்ப ஊட்டிக்கு வருகிறாள். ஒருவேளை... ஒருவேளை... திரும்பிப் போனதும்...?

''ராஜா...'' என்று அவனை மெதுவாக அழைத்தாள் அவள்.

''ம்...''

''இப்போதும் ஒட்டலில் நமக்கு அதே அறை கிடைக்குமா?''

''அந்த அறை இல்லாவிட்டால் வேறு அறை''.

''இல்லை ராஜ். எனக்கு அதே அறைதான் வேண்டும்''

நடராஜ் அவளைப் புன்னகையோடு திரும்பிப் பார்த்தான்.

''அந்த அறையில் என்ன ஸ்பெஷாலிடி டார்லிங்''.

''ஏதே ஒரு சென்ட்டிமெண்ட்டல் ஃபீலிங்''.

''போனமுறை எந்த அறையில் தங்கினோம் என்பதே எனக்கு நினைவில்லையே அனு.

''எனக்கு நினைவிருக்கிறது ராஜ். ஐந்தாம் நெம்பர் அறை. அதை மறக்கமுடியுமா?''



''எதை?'' என்று கேட்டுவிட்டுக் குறும்பாக அவளைப் பார்த்தான் அவன்.

''யூ டர்ட்டி டெவில்'' என்று செல்லமாக அவனைக் கோபித்துக் கொண்டாள் இவள்.

தாஸப்பிரகாஷ் ஒட்டலில் போய் நின்றது கார். வண்டியை விட்டு இறங்கிய நடராஜ், 'ஒன் மினிட் அனு'' என்று ரிசப்ஷனை நோக்கி நடந்தான். அனு திரும்பி ஆர்த்தியைப் பார்த்தாள். இன்னமும் அவள் உறங்கிக் கொண்டுதான் இருந்தாள். 'பாவம்' குழந்தைக்குப் பசியோ என்னவோ?' என்று நினைத்துக் கொண்டாள். நெடு நேரமாக உட்கார்ந்து கொண்டே வந்ததால் கால்கள் வலிக்கவே காரை விட்டு இறங்கிக் காரின் மீதே சாய்ந்து நின்று கொண்டாள். பகல் பன்னிரண்டு மணிக்கு மேலாகியும் வெயில் வரவில்லை. இன்னமும் குளிர் நடுங்கியது. அப்போது சீஸனுமில்லை. ரேஸ் சமயமுமில்லை. அதனால் ஊட்டி அதிக மனித சந்தடியே இல்லாமல் அமைதியாகத் தோற்றமளித்தது. அது அவளுக்குப் பிடித்திருந்தது. எதிரே இருந்த ரேஸ்கோர்ஸையும், தூரத்தில் கரிய மேகங்கள் சூழ்ந்து கொண்டிருப்பதைப் போல் தெரிந்த மலைத்தொடர்களையும் பார்த்துக்கொண்டிருந்த அனு, ராஜா வருகிறானா என்று பார்க்க ஒட்டல் பக்கம் திரும்பினாள். கையில் ரூம் சாவியைச் சுழற்றியபடி முன் நெற்றியில் விழுந்து புரளும் கேசத்தை மறு கையால் அலட்சியமாக ஒதுக்கி விட்டுக்கொண்டே கம்பீரமாகக் காரை நோக்கி நடந்து வந்து கொண்டிருந்தான் நடராஜ்.

''அனு, நீ கேட்ட அதே அறை கிடைத்து விட்டது. ரூம் நெம்பர் ஃபைவ்.''

''இப்போது சீஸன் இல்லையே ராஜ். அதனால் சுலபமாகக் கிடைத்து விட்டது'' என்று அவனுக்குப் பதில்

கூறினாலும் இவரிடம் நான் கேட்டு இது வரை எந்தப் பொருள் கிடைக்காமற் போயிருக்கிறது?' என்று பெருமிதத்தோடு மனத்தில் நினைத்துக் கொண்டாள் அனுராதா. கூடவே நெஞ்சில் 'ஆனால்...?' என்றோர் ஏக்கம் கவிந்தபோது கண்கலங்கி நின்றாள் அவள்.

## 2

தூங்கிக் கொண்டிருந்த நடராஜைத் தட்டி எழுப்பினாள் ஆர்த்தி.

''ஹாய் ஆர்த்தி டார்லிங், என்னடா கண்ணா?'' என்று உறக்கம் முற்றிலும் கலையாத நிலையில் அவளை அள்ளி அணைத்துக் கொண்டான் நடராஜ்.

''எங்கே, அப்பாவிற்கு ஒரு கிஸ்!''

ஆர்த்தி சடாரென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். நடராஜ் எழுந்து உட்கார்ந்து அவள் கன்னத்தில் முத்தமிட முயன்றான். ஆர்த்தி தன் கரங்களால் இரண்டு கன்னங்களையும் மூடிக் கொண்டு அவனை உர்ரென்று பார்த்தாள். அவளுக்குத் தன்மீது கோபம் என்பது அப்போதுதான் அவனுக்குப் புரிந்தது.

''என்னடா கோபம் உனக்கு?''—அவன் அவளை அருகில் இழுத்தான்.

''உங்க பேச்சு காய். இனிமேல் பேசவே மாட்டேன்.''

''நீ பேசாவிட்டால் நான் அழுவேன். நான் என்னம்மா தப்பு பண்ணினேன்!''



''பின்னே என்னப்பா? ஊட்டிக்குப் போனதும் முதல்லே ஹார்ஸ் ரைடிங் என்று ப்ராமிஸ் பண்ணிவிட்டு ஜம்மென்று படுத்துத் தூங்கினால்?''

''ஓஹோ, அந்தக் கோபமா? இதோ ஐந்தே நிமிடங்களில் டிரஸ் பண்ணிக் கொண்டு கிளம்பிவிடுகிறேன். முதலில் ஹார்ஸ் ரைடிங்தான். ஓகே.''

''ஓகே'' என்று தலையாட்டினாள் ஆர்த்தி. அவசரமாகக் கட்டிலை விட்டிறங்கினான் நடராஜ்.

''டாடி கிஸ்...''

''எஸ் டியர்'' என்று சிரித்துக் கொண்டே குனிந்தான் அவன்.

''நீங்கதான் மறந்துவிட்டுப் போகிறீர்களே...''

''தப்பும்மா, தப்பு போட்டுக் கொள்ளட்டுமா?''

ஆர்த்தி சிரித்துக் கொண்டே அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள, நடராஜும் அவளது கன்னங்களில் முத்தமிட்டான்.

ஆர்த்தி, அவனும் அனுவும் கலந்த கலவை. அனுவைப் போல் அவளுக்கும் அழகான பெரிய கண்கள், செண்பகப்பூ நாசி, செப்புப் போன்ற இதழ்கள். ஆனால் அனுவைப் போல் தாழம்பூ நிறமில்லை அவள், நடராஜைப் போல் சிவப்பு ரோஜா இதழ்களின் நிறம். அனுவின் முகத்திலிருக்கும் அமைதி அவள் முகத்தில் இருக்காது. நடராஜின் முகத்தில் இருக்கும் குறுகுறுப்பும், குறும்புத்தனமும் அவள் முகத்திலும் கூத்தாடும். அவளை அவளது பள்ளி ஆசிரியைகளெல்லாம் ஆப்பிள் சீக்ஸ் என்றுதான் அழைப்பார்களாம். அதை வந்து அனுவிடமும் இவனிடமும் அவள் கூறும்போது பார்க்க வேண்டுமே—அந்த முகத்தில் பொங்கும் பெருமையை. அந்த ஆப்பிள் சீக்ஸில் குனிந்து இன்னொரு முறை முத்தமிட்டான்.

''ஓ. சீக்கிரம் டாடி...''

''இதோ...''

நடராஜ் திரும்பியபோது ஜன்னல் அருகே நின்று கொண்டிருந்த அனுவைப் பார்த்தவன், அப்படியே பிரமித்து நின்றுவிட்டான். அவனுக்குப் பிடித்த காப்பர் சல்ஃபேட் நிற ராஜஸ்தான் புடவை. அதே நிற ஜாக்கெட். தளரப் பின்னிவிட்ட கூந்தலோடு அழகுத் தேவதையாகக் காதருகில் மலர்ந்த ஒற்றை ரோஜாவுடன் நின்று கொண்டிருந்தாள் அவள். அந்தத் தோற்றத்தில் அனுவைக் கண்டவுடன் ஏற்பட்ட கிளர்ச்சியுடன் அவளை நெருங்கினான் அவன்.

''யு லுக் வொண்டர்ஃபுல் டியர்'' என்று அவளை அணைத்துக் கொள்ள முயன்றான்.

''போச்சு, நீங்க இப்ப எங்கே கிளம்பப் போகிறீர்கள்?'' என்று ஆர்த்தி விளையாட்டாக சலித்துக் கொண்டதும், அனுவும், நடராஜும் சேர்ந்து சிரித்தார்கள்.

''சீக்கிரம் முகம் கழுவிக் கொண்டு வாருங்கள் ராஜா குழந்தை எவ்வளவு நேரமாகக் காத்துக் கொண்டிருக்கிறாள் தெரியுமா?'' என்றாள் அனு.

''இதோ, ஒரே நிமிடம் அனு'' என்று பாம்பே டையிங் டவலோடு நகர்ந்தான் அவன்.

பாத்ரூமிலிருந்து திரும்பி வந்தபோது அவனுக்கேற்ற உடைகளைத் தயாராக எடுத்து வைத்திருந்தாள் அனு. மூவரும் கீழே இறங்கி வந்தபோது மாலை மூன்று மணி இருக்கும். காமன் டைனிங் ஹாலில் ஒருவருமில்லை. ஹோட்டல் முழுதுமே வெறிச்சென்றுதான் இருந்தது. காபி மட்டும் குடித்துவிட்டு அவர்கள் நேராக போட் ஹவுஸை அடைந்த போது பனி இலேசாக விழத் தொடங்கி



விட்டது. காரிலிருந்து இறங்கியதும் அங்கே இருந்த ஒரே குதிரையை நோக்கி ஓடத் தொடங்கினாள் ஆர்த்தி. பின்னால் மெதுவாகச் சேர்ந்து நடந்து வந்தார்கள், அனுவும், நடராஜும். அவர்கள் நெருங்குமுன்பே ஆர்த்தி, குதிரை மீது ஏறி உட்கார்ந்து, ''ஹாய் டாடி'' என்று கையாட்டினாள். நடராஜ் குதிரைக்காரனை நெருங்கி, ''ஜாக்கிரதை அப்பா. குழந்தை விழுந்துவிடப் போகிறாள். எத்தனை ரவுண்ட் கேட்கிறாளோ அத்தனை ரவுண்ட் அழைத்துப் போய்க் கடைசியில் எங்களிடம் கொண்டுவந்து விட்டுவிடு'' என்றான்.

''ஆர்த்திமா, ஜாக்கிரதை! வாரை கெட்டியாகப் பிடித்துக்கொள்'' என்று ஆர்த்தியின் கன்னங்களில் முத்தமிட்டாள் அனு.

''மம்மி பை—டாடி பை...'' என்று முகத்தில் பொங்கி வழியும் உற்சாகத்தோடு கூறினாள் ஆர்த்தி. அவள் மனத்தில் தான் ஜான்சிராணி என்றே எண்ணம். அனு, அவள் குதிரை மீது போவதையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள்.

''நீயும் ஒரு ரவுண்ட் போகிறாயா அனும்மா?'' என்று கேட்டான் நடராஜ்.

''வேண்டாம் ராஜ். நான் என்ன குழந்தையா? நாம் போட்டிங் போவோமே?''

''ஓகே!''

இருவரும் போட் ஹவுசை நோக்கி நடந்தார்கள். அனு குளிரில் உடலைச் சிலிர்த்துக் கொள்வதைக் கவனித்த நடராஜ், அருகே போய் அவள் தோளில் கை போட்டுத் தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டான்.

''குளிருகிறதா அனு!''

அவனது கனிவான கேள்வியில் அவளுக்குக் குளிரெல்லாம் பறந்து போய்விட்ட மாதிரி இருந்தது. அதுவும் அவன் அருகே அவளை அணைத்துக் கொண்டு நடக்கும் போது எப்படிக் குளிரும்? போட்டில் போக நடராஜ் கட்டணத்தைச் செலுத்திவிட்டு வந்தான். முதலில் அவனே ஏறியதும் அனு ஏற கைகொடுத்து உதவி செய்தான். அவனே துடுப்பை வலிக்க ஆரம்பித்தான்.

''பகல் முழுவதும் டிரைவ் செய்து கொண்டு வந்து விட்டு இப்போது நீங்களே ஏன் ரோ செய்ய வேண்டும் ராஜ்? கையெல்லாம் வலிக்குமே! படகுக்காரனையாவது வரச் சொல்லியிருக்கலாம்'' என்றாள் அனு. கவலையுடன்.

''அவன் வந்தால் நம் தனிமை பாழாகிவிடும் டார்லிங்'' என்று பதிலளித்தான் நடராஜ். அது உண்மை தான் என்று தோன்றியது அனுவிற்கு.

''இருந்தாலும் உங்கள் கை வலிக்கப் போகிறதே என்று—''.

''என்னோடு, உன்னை உட்கார வைத்துக் கொண்டு போகும்போது கை வலிக்குமா அனு?'' என்று நறுக்கிட்டுக் கேட்டான் நடராஜ்.

''போங்கள் ராஜ். எப்போதும் உங்களுக்கு விளையாட்டுதான்.''

''உன்னிடம் விளையாடாமல் வேறு யாரிடம் விளையாடுவதாம்?'' என்று கேட்டவன், ஒரு விநாடி கழிந்து, ''எனக்கு ஆர்த்தியைப் பார்த்தால் பொறாமையாக இருக்கிறது அனும்மா'' என்றான். அனு திடுக்கிட்டு அவனைப் பார்த்தாள்.

''ஆர்த்தி மீது உங்களுக்குப் பொறாமையா? என்ன சொல்கிறீர்கள் ராஜ்?''



''ஏ... சற்று முன்பு நீ என்ன செய்தாய்?''

''என்ன செய்தேன்?''

''ஆர்த்தி குதிரை மீது ஏறிக்கொண்டதும்...''

''ஓ... அதுவா?''

''அதேதான். ஆர்த்திக்கு நினைத்தபோது நினைத்த நேரத்தில் கிடைக்கிறது. ஆனால், எனக்கு? உன்னை ஓராயிரம் முறை கொஞ்ச வேண்டும். நீ, போங்கள் ராஜ், இப்போது இல்லை, அப்புறம் என்று பிகு பண்ணிக் கொள்ளவேண்டும், நான் ஆர்த்தியாக இருந்தால்...''

அனு குபீரென்று சிரித்து விட்டாள்.

''இதற்கா இவ்வளவு பீடிகை? ஐயோ, ராஜா... நான் என்னவோ என்று பயந்து விட்டேன்.''—அவள் சிரிக்கும் அழகில் மயங்கி அவளையே பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜ். அவர்கள் ஏரியின் நடுவரை போய்த் திரும்புவதற்குள் ஆர்த்தி குதிரையை விட்டு இறங்கிவந்து கரையில் நின்று கையாட்டினாள்.

''குழந்தை தனியாக இருக்கிறாள் ராஜ். திரும்பலாமா?''

நடராஜ் படகைத் திருப்பினான். கரையை நெருங்கியதும் ஆர்த்தி குதித்தாள்.

''நான் டாடி, நானும் ஒரு ரவுண்ட் டாடி.''

நடராஜ் படகிலிருந்தே கை நீட்டி அவளைத் தூக்கிப் படகில் உட்கார வைத்துக் கொண்டான். படகின் ஆட்டத்திற்கு நடுவே தடுமாறிக் கொண்டே நடராஜிடமும் அனுவிடமும் மாறி மாறி ஓடினாள்.

சிறிது தூரம் போகும்போதே மழைத் தூறல் மெதுவாக 'டப்டப்' என்று விழ ஆரம்பித்தது.

''டாடி, மழை... கரைக்குப் போகலாம்'' என்றாள் பயந்து கொண்டே. மழையைக் கண்டாலே ஆர்த்திக்குப் பிடிக்காது.

''மழை பலமாக வருவதற்குள் கரைக்குப் போய்க் காருக்கும் போய்விடலாம் ஆர்த்தி. பயப்படாதே.''

அவர்கள் காருக்குள் ஏறி அமர்வதற்கும் மழை சோவென்று கொட்டுவதற்கும் சரியாக இருந்தது. ஸ்வெட்டர், மஃப்ளர் எல்லாம் இருந்தும் ஆர்த்தியின் பற்கள் 'டகடக'வென்று அடித்துக் கொண்டன.

''கண்ணாடியைத் தூக்கி விடு ஆர்த்திம்மா...'' என்றாள் அனு. கண்ணாடியை மூடிய பின்பும் ஆர்த்தி நடுங்கிக் கொண்டுதான் இருந்தாள்.

இரவு உணவை முடித்துக்கொண்டு படுக்கப் போன ஆர்த்தி, உடனே தூங்கிவிட்டாள். கம்பளியை இழுத்து அவளை நன்றாகப் போர்த்திவிட்டபின் அறைக்கதவை மூடித் தாளிட்டுவிட்டுக் கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த நடராஜின் அருகே வந்து உட்கார்ந்தாள் அனு. கை நீட்டி அவளை மார்பில் சாய்த்துக் கொண்டான் நடராஜ்.

''ராஜ்... ராஜ்...'' என்று மேலே பேச முடியாமல் திணறினாள் அனு.

''என்ன அனும்மா, என்னடா டார்லிங்...?'' என்று அவள் கன்னத்தைத் தடவியபோது அது கண்ணீரில் நனைந்திருப்பதைக் கண்டு பதறிப் போனான் நடராஜ்.

''என்ன அனு?'' என்று அவன் துடிப்போடு கேட்டதும், அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு பேச முடியாமல் திணறினாள் அவள்.

''ரா...ஜ். உங்களை விட்டுப் பிரிந்து எப்படி நான் இருக்கப் போகிறேன்? ஒரு வருடம் என்னால் எப்படி



இருக்க முடியும் ராஜா?'' என்று அவள் குமுறிய அந்த நேரத்தில் நடராஜின் நெஞ்சமும் உருகிக் கரைந்தது. அவனும் அந்தப் பிரியை நினைத்து உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தாலும் அனு அழுதபோது அவனால் தாங்கவே முடியவில்லை. அவளை இறுகத் தழுவிக் கொண்டு, ஆறுதல் சொல்ல முயன்றான். ஆனால் சொற்கள் வெளிவரவில்லை, தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டன.

# 3

இரவு முழுதும் நடராஜ் தூங்கவே இல்லை. ஒரு விநாடி கூட தூங்கவில்லை. தன் தோளில் முகம் புதைத்துச் சிறு குழந்தை மாதிரி கண்ணீர்விட்ட அனு அவனைத் தூங்கவிடவில்லை. அப்போது அவளை அணைத்து, ''இப்படிக் குழந்தை மாதிரி அழலாமா டார்லிங்? ஆர்த்திகூட உன்னைவிடத் தேவலாம் போல் இருக்கிறதே! நீதானே எனக்கே தைரியம் கூறினாய்; 'ஒரு வருடம்தானே ராஜ், ஒரே மாதமாய் ஓடிப் போய்விடும்' என்று கூறி நீதானே இந்தப் பயணத்திற்கு ஏற்பாடு செய்தாய். நீ வேண்டாம் என்று ஒரு வார்த்தை சொல் அனு, இப்போதே என் லண்டன் பிரயாணத்தைக் கைவிட்டு விடுகிறேன்'' என்று அவன் சொன்னபோது அனுவின் அழுகை ஓரளவு குறைந்தது. அவன் மேலும் ஏதேதோ கூறி, 'நோ டியர், நோ'' என்று கண்ணீரைத் துடைத்துச் சமாதானப்படுத்தியதும் அவளுடைய கண்ணீர் முற்றிலும் அடங்கிப் போய்விட்டது.

''சாரி ராஜ். குழந்தைத்தனமாக நடந்துகொண்டு விட்டேன். சந்தோஷமாக இருக்கவந்த இடத்தில

உன்னைத் துயரத்தில் ஆழ்த்தும்படி நடந்துகொண்டு விட்டேன். இனிமேல் இப்படி அழமாட்டேன் ராஜ்...'' என்றபோது தனக்காகத் தன்னைத் துயரத்தில் ஆழ்த்தக் கூடாதே என்பதற்காகத் தன் மனத் துயரத்தைக் கூட அடக்கிக்கொள்ளும் அவளது அன்பு...

''ஓ! அனு டார்லிங், ஹௌ லக்கி ஐயாம்...'' என்று உருகிப் போனான் நடராஜ். அதன் பின் அவளை உற்சாகப்படுத்த ஏதேதோ பேசினான். அவளுக்காக நடராஜும் ஏதேதோ ஒப்புக்குப் பேசினானே தவிர, அவன் நெஞ்சில் நீறுபூத்த நெருப்பாகக் கனன்று கொண்டிருந்த அந்த வேதனை மெதுவாக எரிய ஆரம்பித்தது.

தான் அவனுடைய நெஞ்சக் கனலை ஊதி எரியவிட்டு விட்டதை உணராமல் அவன் தோளில் பூங்கொடியாகப் படர்ந்து தூங்கியும் போனாள் அனு.

அவளது தூக்கத்தைக் கலைக்காமல் மெள்ள அவளது தலையைத் தூக்கித் தலையணையில் வைத்துவிட்டு, இரவு முழுதும் தூக்கம் வராமல் எதையெதையோ சிந்தித்தபடி படுத்துக் கொண்டிருந்தான் நடராஜ். தன் மார்பின் மீது வாழைத் தண்டாக விழுந்து கிடந்த அனுவின் கரத்தை மெதுவாக விலக்கிவிட்டு எழுந்து உட்கார்ந்தான்.

கட்டிலின் அருகே இருந்த நைட் டேபிளிலிருந்து தன் கைக் கடிகாரத்தை எடுத்து மணி பார்த்தான். அந்த இருளில் பச்சை நிறத்தில் பளபளத்த முட்கள் மணி ஆறு இருப்பதைக் காட்டிக் கொண்டிருந்தன. மணி ஆறாகியும் இருள் கரியரைத்துப் பூசின மாதிரி படர்ந்திருந்தது.

கட்டிலை விட்டிறங்கி, செருப்பை மாட்டிக் கொண்டு ஜன்னல் அருகே போனான் நடராஜ். திரையை விலக்கிக் கண்ணாடி ஜன்னலைத் திறந்தான். வெளியே பனி



மழை கொட்டிக் கொண்டிருந்தது. ஊட்டி முழுதுமே பெரிய வெள்ளைப் போர்வையை நன்றாக இழுத்துப் போர்த்துக் கொண்ட மாதிரி புகை மூட்டமாய் மூடுபனி. எதிரே இருந்த ரேஸ் கோர்ஸ், ஹோட்டல் கார்டன், மலைச் சிகரங்கள், ஓங்கி வளர்ந்திருந்த யூகலிப்டஸ் மரங்கள் எதுவும் தெரியவில்லை. ஜன்னலைத் திறந்ததால் பனிக் காற்று உள்ளே வாரி அடிக்கவே, உடலைச் சிலிர்த்துக் கொண்ட நடராஜ், உள்ளே திரும்பிப் பார்த்தான். கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த அனுவும், ஆர்த்தியும் குளிர் தாங்காமல் உடலை ஒடுக்கிக் கொள்வதைக் கவனித்தவுடன் அவசர அவசரமாக ஜன்னலை மூடி, திரையை இழுத்துவிட்டான்.

ஆர்த்தி போர்வை விலகியது கூடத் தெரியாமல் கட்டிலில் சுருட்டிப் போட்ட ரோஜா மாலையாகக் கிடந்தாள். அவள் படுத்துக் கொண்டிருந்த கோலத்தைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்ட நடராஜ், அருகே போய் அவளது கவுனை இழுத்துச் சீராக்கி, தலையணை மீது ஒழுங்காகப் படுக்க வைத்துக் கம்பளியைப் போர்த்தி விட்டான்.

''டா...டி...'' என்று அந்த ஆழ்ந்த உறக்கத்திலும் அவனை அழைத்து, உருத் தெரியாமல் ஏதோ முனகிக் கொண்டே அவள் புரண்டு படுத்தபோது, நடராஜின் நெஞ்சம் விம்மித் தணிந்தது. ஆறு வயது கூட நிரம்பாத அந்தச் சிறுமியின் பாசம் அவனை உலுக்கியது. அவனில்லாமல் அவள் எப்படி இருக்கப் போகிறாள்? படுக்கையை விட்டு எழுந்திருக்கும் போதே டாடி என்று அழைத்துக் கொண்டேதானே எழுந்திருப்பாள்? பள்ளிக்குப் போகும்போதும், திரும்பி வந்த உடனேயும், மாலையில் இனிமையாகப் பொழுதைக் கழிக்கும் போதும், இரவு உறங்கும்போதும் அவளுக்கு அவன்தான் வேண்டும். அப்படிப்பட்டவள் அவனை விட்டுப் பிரிந்து ஒரு வருடம் எப்படி இருக்கப் போகிறாள்? 'அப்பா

எங்கேம்மா' என்று அனுவைத் துளைத்தெடுத்து விடுவாளே!

பெருமூச்சுடன் தன் கட்டிலின் விளிம்பில் வந்து உட்கார்ந்தவன், அருகில் படுத்துக் கொண்டிருந்த தன் மனைவியின் முகத்தைக் கண் கொட்டாமல் பார்த்தான். கழுத்து வரை மூடியிருந்த கறுப்புக் கம்பளிக்கு வெளியே அனுவின் முகம் முழுநிலவு உதயமாகி வெளியே வருவதைப் போலிருந்தது. அந்த நிலவில் கரியால் கோடிழுத்த மாதிரி புருவங்களும், கண் இமைகளும்...

''அனு...'' என்று பரவசத்தோடு முணுமுணுத்துக் கொண்டே அந்த முகத்தை நோக்கிக் குனிந்த போது—

''பாவம் அனு. இரவு முழுதும் அழுதழுது தூங்கவே யில்லை' என்ற எண்ணம் தோன்றி அவன் செய்கையைத் தடுத்தது. அவளது தூக்கத்தைக் கலைக்க மனம் வரவில்லை அவனுக்கு. இலேசாகத் தொட்டால் கூடப் போதும், அனு எழுந்து விடுவாள். அவ்வளவு மென்மையான தூக்கம் அவளுடையது. உறக்கம் மட்டுமில்லை. உடல், மனம் எல்லாமே தொட்டால் உதிர்ந்துவிடும் ரோஜா மலரைப் போல மென்மையானதுதான்.

தனக்குள் எழுந்த கிளர்ச்சியை அடக்கிக்கொண்டு அந்த முகத்தைக் கனிவோடு பார்த்துக் கொண்டே இருந்தான் அவன். பார்க்கப் பார்க்க அனுவை அப்போதுதான் புதிதாகப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை. அவனே ஆறடிக்கு இருப்பான். நல்ல உயரம். அனு அவனது தோளுக்கு வருவாள். கொடி போன்ற கவர்ச்சிகரமான உடல், களையான முகம். அந்த முகம், அந்தக் கண்கள், அந்த உடல்—'இவ்வளவு அழகா என் மனைவி' என்று வியந்தான் நடராஜ். எத்தனையோ முறை இப்படி அவள் தூங்கும்போது அந்த முகத்தைப் பார்த்துத்



தனக்குள் பரவசப்பட்டிருக்கிறான். ஒவ்வொரு முறையும் தோன்றும் அதே வியப்புதான் இப்போதும் அவன் மனத்தில் தோன்றியது, என்றும் சிரஞ்சீவியாகப் புத்தம் புதிதாக ஒளிரும் அவளுடைய அழகு.

''ஐ லவ் யூ அனு...'' என்று வாய்விட்டு மெதுவாகக் கூறிக்கொண்டே எழுந்து போய், ஜன்னல் அருகே போடப்பட்டிருந்த நாற்காலியில் சாய்ந்தான்.

அவன் கண்கள் கலங்கின. உயிருக்கு உயிராக நேசிக்கும் இவர்களைப் பிரிந்து ஒரு வருடம் எப்படி இருக்கப் போகிறேன்?'' என்ற எண்ணம் தோன்றி அவன் இதயத்தை அந்தக் கேள்வி பாரமாய் அழுத்தியது.

திருமணமானதிலிருந்து இதுவரை அனுவைப் பிரிந்து அதிகம் போனால் பத்து நாட்களுக்கு மேல் அவன் எங்கும் இருந்ததில்லை, தொழிற்சாலை விஷயமாக டெல்லி, கல்கத்தா என்று எங்கு போனாலும் அதிக நாட்கள் தங்குவதில்லை. அப்போது அனு கூடவே வரவேண்டும். அனு வந்தால் ஆர்த்தி வரவில்லையே என்ற குறை அவனுக்கு ஏற்பட்டுவிடும்.

''ஆர்த்தியைப் பார்க்காமல் எப்படியோ இருக்கிறது அனு'' என்று அவளிடம் வாய் ஓயாமல் கூறிக்கொண்டிருப்பான்.

அதைப்பார்த்து அனுவே வியந்திருக்கிறாள். 'நமக்குக் கூட அப்படி இல்லை; இவர் என்னவோ இப்படித் தவித்துப் போகிறாரே' என்று எண்ணிக் கொள்வாள்.

''இன்றில்லாவிட்டால் ஒரு நாள் யார் வீட்டுக்கோ போகப் போகிறவள்தானே அவள்? அதை மறந்து இப்படி உருகாதீர்கள்'' என்று அவனைச் சீண்டுவாள்.

''அப்போது பார்த்துக் கொள்ளலாம். நான் வீட்டோடு இருக்கும் மாப்பிள்ளையாகத்தான் பார்ப்

பேன், என் மகளுக்கு!'' என்று அவளை மடக்குவான் அவன்.

அனு வர இயலாமற் போய்விடும் சந்தர்ப்பங்களில் இருவருமே எதோ ஒருவரைவிட்டு ஒருவர் யுகம் யுகமாய்ப் பிரியப் போகிற மாதிரி, பிரிந்திருந்த மாதிரி கலங்கிப் போவார்கள். அவன் எங்கே இருந்தாலும், எத்தனை வேலைகளுக்கிடையேயும் அவள் நினைவு வந்துவிட்டால் எதுவும் ஓடாது அவனுக்கு. உடனேயே டிரங்கால் போட்டு அவளோடு பேசிவிட்டுத்தான் வேறு வேலையைக் கவனிப்பான்.

''டார்லிங், ஐ மிஸ் யூ ஸோ மச்!'' என்ற அவளது குரலைக் கேட்டு அப்போதே சென்னைக்குப் பறந்து போய்விட மாட்டோமா என்றிருக்கும் அவனுக்கு.

அப்படிப்பட்டவன் இப்போது அவளையும் ஆர்த்தியையும் விட்டு விட்டு ஒரு வருடம் இங்கிலாந்தில் காலம் தள்ள வேண்டுமானால்....?

முதலில் அவனுடன் வருவதாகவே இருந்தது. அவர்களும் வரப்போகிறார்கள் என்ற எண்ணத்தில்தான் இந்தப் பயணத்திற்கே அவன் சம்மதித்தான்.

அவர்கள் வரமுடியாமல் இடையில் ஒரு தடங்கல் ஏற்படும் என்று முன்பே தெரிந்திருந்தால் தனக்குப் பதிலாக வேறு யாரையாவது அனுப்ப ஏற்பாடு செய்திருப்பான். இப்போது பிரயாணத்தைத் தள்ளிப் போடவோ, வேறு யாரையும் அனுப்பவோ முடியாத ஓர் இக்கட்டான நிலை.

அந்த • நிலையிலும் 'இப்போதுகூட இந்தப் பிரயாணத்தை ரத்து செய்துவிட்டால் என்ன' என்று அவன் மனம் ஒரு நிலையில் இல்லாமல் தவித்துக் கொண்டிருந்தது.



ஆனால், அனுதான், ''ஒரு வருடம்தானே ராஜா, ஒரு மாதமாக ஓடிவிடும்!'' என்று அலைபாயும் அவன் மனத்திற்கு ஆறுதல் கூறி அவனைத் தேற்றினாள். அவன் மனம் அலைபாயும் போதெல்லாம், ''நீங்கள்தான் போக வேண்டும். இந்தத் தொழிற்சாலை வேலைகள் எல்லாம் உங்கள் கையால் தான் நடக்க வேண்டும்'' என்று தைரியமும் நம்பிக்கையும் அளிப்பாள்.

ஆனால் அவளே சில சமயங்களில், பலவீனமான சில நேரங்களில் ''உங்களைவிட்டு என்னால் இருக்கவே முடியாது ராஜா! என்றுகூறி அழும்போது அவனுக்கு இந்தப் பயணம்—எங்கோ பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருக்கும் லண்டன் மாநகரம்—அவர்கள் ஆரம்பிக்கப் போகும் புதுத் தொழிற்சாலை இவை எல்லாவற்றின் மீதும் எல்லையற்ற வெறுப்பு ஏற்பட்டு விடுகிறது.

''நீங்கள் தூங்கவில்லையா ராஜ்?'' என்ற அனுவின் குரல் மெதுவாக சன்னமாக ஒலித்தது. அவள் எழுந்து வந்து தனக்குப் பின்னால் நின்று கொண்டிருக்கிறாள் என்பதை அப்போதுதான் கவனித்தான் அவன். பின்னாலிருந்தே அவள் கழுத்தைச் சுற்றித் தன் கரங்களை வளைத்தாள் அனு. அவளது கரங்களைப் பற்றிக் கொண்டு தன் முகத்திற்கு நேராகக் குனிந்திருந்த அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தான். ஒரு விநாடி இமைக்காமல் பார்த்துக்கொண்டே இருந்தான்.

''ஏன் ராஜ், நீங்கள் தூங்கவே இல்லையா?'' என்று அவனது சிவந்திருந்த கண்களைப் பார்த்துவிட்டுத் திரும்ப அதே கேள்வியைக் கேட்டாள் அனு. அவன் 'இல்லை' என்று தலையாட்டினான்.

''ஏன் ராஜா?'' என்று கனிவோடு கேட்டு, மென்ன அவன் கன்னங்களை வருடினாள் அவள்.

"உன்னைப் பார்த்தால் எனக்கு இப்போது கோபமாக வருகிறது, அனு. நீ தானே இந்தப் புதுச் தொழிற்சாலையைத் திறக்க வேண்டுமென்று தொந்தரவு செய்தாய். அதனால் தான் நான் பல ஆயிரம் மைல்களுக்கப்பால் பிரிந்திருந்து ஒரு வருடத்தைத் தள்ள வேண்டிய சங்கடமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது."

அனுவிற்கு அவனது உணர்ச்சிகள் புரிந்தன. மனம் நெகிழ்ந்து போனாள் அவள்.

"எனக்கு ஆதரவாக ஆறுதல் கூறவேண்டிய நீங்களே இப்படி வருத்தப்பட்டால், நான் என்ன செய்வது ராஜா? நீங்கள் திறமைசாலி. ஒரு வருட வேலையை ஆறே மாதத்தில் முடித்துக் கொண்டு வந்து விடுவீர்கள், அதன்பின் நீங்கள் இந்த அனுவை விட்டு எங்கே போகப் போகிறீர்கள். இல்லை, அனுதான் உங்களைப் போக விட்டு விடுவாளா? அப்பாவின் நெடுநாளைய ஆசையைப் பூர்த்தி செய்யவேண்டுமென்ற எண்ணத்தில்தான் நான் அந்தத் திட்டத்தைப் பற்றிய பேச்சை எடுத்தேன். அதற்காக நீங்கள் இவ்வளவு வருத்தமும், கவலையும் அடைய வேண்டி வரும் என்று தெரிந்திருந்தால் சொல்லியே இருக்கமாட்டேன்."

அவளது குரலில் இருந்த தழுதழுப்பையும், வருத்தத்தையும் உணர்ந்த நடராஜனின் உள்ளம் துணுக்குற்றது.

"ஓ நோ, எனக்கு மட்டும் மாமாவின் ஆசையை நிறைவேற்ற வேண்டுமென்ற எண்ணமில்லையா அனு? ஆனால், உன்னை விட்டுப் பிரிய வேண்டுமென்ற ஏக்கத்தில் ஏதேதோ பேசிவிட்டேன். நீ சொல்வதுபோல் ஒரு வருட வேலையை ஆறே மாதத்தில் முடித்துக் கொண்டு என் அனுவைப் பார்க்க ஓடி வந்துவிட மாட்டேனா? உன் மனம் புண்படும்படி ஏதேதோ கூறி விட்டேன். ஐயாம் சாரி அனு...ரியலி சாரி" அனு அவன்



வாயைப் பொத்தினாள், அவள் கண்களில் கண்ணீர் ததும்பி விட்டது.

"ரா...ஜா..." என்று கூறி அவன் தோளில் முகத்தைப் பதித்துக்கொண்ட போது அவனுடைய கண்களும் கலங்கியிருந்தன.

# 4

சேலத்தில் மற்றொரு தொழிற்சாலை திறக்க வேண்டுமென்ற எண்ணத்தை ஏற்படுத்தியவளே அனுதான். இங்கு அனுவின் பெயரில் ஒரு பெரிய தொழிற்சாலை கட்ட வேண்டுமென்று நிலம் வாங்கிப் போட்டிருந்தார் அனுவின் தந்தை. ஆனால் அவர் உயிரோடு இருந்தவரை அந்த ஆசை நிறைவேறவே இல்லை, அப்பாவின் அந்த ஆசையை எப்படியாவது பூர்த்தி செய்துவிட வேண்டுமென்ற எண்ணம் அனுவின் மனத்தில் நெடுநாளாக இருந்து வந்தது. அதை ஓரிரு முறை ராஜாவிடம் சொல்லியும் இருக்கிறாள். ராஜாவும் 'ஆகட்டும் அனு' என்று பதிலளித்தானே தவிர, அதில் தீவிரக் கவனம் ஏதும் செலுத்தவில்லை.

அனு விடவில்லை. ஒரு நாள் அவன் சற்று ஓய்வாக இருந்தபோது, "ராஜா, சேலத்தில் நம் எலக்ட்ரோட் தொழிற்சாலையின் மற்றொரு பிளாண்ட் போடுவதைப் பற்றி யோசித்தீர்களா? அப்பாவின் நெடுநாளையக் கனவு அது. அதை எப்படியாவது நாம் நிறைவேற்றி விட வேண்டும் ராஜ்" என்று திரும்பக் கேட்டதும்தான் நடராஜுக்கு புதுத் தொழிற்சாலையின் மீது கவனம் திரும்பியது.

மறுநாள் காலை உணவின்போது அனுவை வைத்துக் கொண்டே தன் தந்தை சிவராமனிடம் அதைப்பற்றிக்

கூறினான். அவரும் அதை உற்சாகத்தோடு வரவேற்றார். ''ஆமாம் ராஜா, ராமலிங்கமும் இதைப்பற்றி என்னிடம் எத்தனையோ முறை பேசி இருக்கிறான், அதற்கு அவன் ஆசைப்பட்டபடியே அனுவின் பெயரையே வைத்து விடுவோம்'' என்றார் அவர். ராஜாவிற்கும் 'அனுராதா பிரைவேட் லிமிடெட்' என்ற பெயர்தான் பொருத்தமாக இருக்கும் என்று தோன்றியது. அவனைப் பொறுத்த வரை அனு அவனுக்கு அதிர்ஷ்டத்தைத் தேடித் தருபவள். சிவராமனுக்கும் அனுவினால் தான் முதற் தொழிற்சாலையே நன்றாக நடப்பதாக ஒரு நம்பிக்கை.

அனுவின் அப்பா இராமலிங்கமும், அவரும் தஞ்சாவூரைச் சேர்ந்தவர்கள். இருவருமே சின்ன வயதிலிருந்து ஒன்றாகப் படித்து ஒன்றாக விளையாடியவர்கள், இருவரும் இரு பெரிய கம்பெனிகளில் லீகல் அட்வைசர்களாக இருந்து பெற்ற அனுபவத்தினால் தாங்களே சொந்தமாக ஒரு தொழிற்சாலையை அமைக்க வேண்டும் என்று எண்ணினர். கடைசியில் இரண்டுபேரும் கூட்டுச் சேர்ந்து லண்டனில் இருந்த எலக்ட்ரோட் தொழிற்சாலையின் கொலாபரேஷனுடன் அம்பத்தூரில் சின்னதாக அதே எலக்ட்ரோட் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்தனர். அப்போது ராஜாவும், அனுவும் படித்துக் கொண்டிருந்தனர். நடராஜ் பி. இ. மூன்றாவது வருடமும், அனு பி. யு. சி யிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். படிப்பை முடித்துவிட்டு இருவருமே தங்கள் தந்தைமார்களுக்கு உதவியாக இருக்க வேண்டுமென்று தொழிற்சாலைக்கு வர ஆரம்பித்ததிலிருந்து தொழிற்சாலை எல்லா விதங்களிலும் முன்னேறிக்கொண்டே வந்தது.

நடராஜ், தொழிற்சாலையின் ஒர்க்ஸ் மானேஜராக நியமிக்கப்பட்டான். அனு இரண்டு மானேஜிங் டைரக்டர்களுக்கும் அந்தரங்க காரியதரிசி. நடராஜும், அனுவும் ஒருவரோடொருவர் போட்டி போட்டுக்



கொண்டு தொழிற்சாலையின் முன்னேற்றத்தில் மிகுந்த அக்கறையோடு பாடுபட்டனர்.

தொழிற்சாலை ஆரம்ப காலக் கஷ்டங்களையும், நஷ்டங்களையும் தாண்டி நல்ல நிலைமையை எட்டிப் பிடித்துக்கொண்டு இருந்தபோது ராமலிங்கம் திடீரென்று மாரடைப்பால் இறந்துவிடவே, அனு, கம்பெனியின் மற்றொரு மானேஜிங் டைரக்டர் என்ற பொறுப்பை ஏற்றுக் கொள்ளவேண்டியதாயிற்று. அதிலும் அனு அந்த வீட்டு மருமகளாக வந்ததிலிருந்து விற்பனை இரண்டு மடங்காக, இரண்டிலிருந்து நான்கு மடங்காக உயர்ந்து கொண்டே போக, தொழிற்சாலையும் பெரியதாக வளர்ந்துகொண்டே போயிற்று. சிவராமனுக்கு 'எல்லாம் அனுவின் கைராசி; அவள் வீட்டிற்கு வந்த வேளைதான்' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை. அனுவின் பெயரால் எதைச் செய்தாலும் அது செழிக்கும் என்ற எண்ணம் மட்டுமல்லாமல் ராமலிங்கமும் சேலத்தில் இடம் வாங்கிப் போடும்போதே ''இங்கே அனுவின் பெயரால் ஒரு தொழிற்சாலை கட்டவேண்டும் சிவராமா'' என்று கூறியிருந்ததாலும், புதுத் தொழிற்சாலைக்கு 'அனுராதா பிரைவேட் லிமிடெட்' என்று பெயர் வைக்க வேண்டும் என்றார் அவர். ஆனால் அனு அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. ''வேண்டாம் மாமா, உங்கள் பெயரையும், அப்பா பெயரையும் சேர்த்து 'சிவலிங்கம் பிரைவேட் லிமிடெட்' என்றுதான் பெயர் வைக்க வேண்டும்'' என்று பிடிவாதம் பிடிக்கவே கடைசியில் அவளது பிடிவாதமே வெற்றி பெற்றது.

சிவலிங்கம் பிரைவேட் லிமிடெட்டும் முதல் தொழிற்சாலையைப் போலவே லண்டன் தொழிற்சாலையின் கூட்டு முயற்சியுடன் ஆரம்பிக்க ஒப்பந்தமாயிற்று. தொழிற்சாலைக் கட்டடம் பிரம்மாண்டமாகக் கட்ட ஆரம்பிக்கப்பட்டது. சிவராமன், அம்பத்தூர் தொழிற்சாலையைக் கவனித்துக் கொண்டு புதுத் தொழிற்சாலையின் பொறுப்பு முழுவதையும் அனுவிடமும், நடராஜ்

டமும் ஒப்படைத்து விட்டார். அவ்வப்போது தேவைப் பட்ட ஆலோசனைகளை வழங்குவதோடு வாரம் ஒரு முறை காரில் சேலம் வந்து கட்டடத்தைப் பார்வையிட்டு விட்டுப் போவார்.

நடராஜும், அனுவும்தான் சேலத்திற்கும் சென்னைக்கும் அலையாய் அலைந்தார்கள். பார்க்க வேண்டியவர்களைப் பார்த்து எல்லா ஏற்பாடுகளையும் செய்வதற்குள் அவர்களுக்குப் போதுமென்றாகி விட்டது. வேளைக்குச் சாப்பாடு இல்லை, நல்ல தூக்கமில்லை. இருவரும் இளைத்துக் கறுத்துப் போவதைப் பார்த்து நடராஜின் தாய் தங்கம்மாள், "அனு இப்படி அலைந்து உடம்பைக் கெடுத்துக் கொள்கிறாயேம்மா. ராஜா, ஃபேக்டரியும் வேண்டாம் ஒன்றும் வேண்டாம். முதலில் உடம்பைக் கவனிடா" என்பாள். இருவரும் சிரித்துக் கொண்டே அவளுக்குச் சமாதானமாகப் பேசி 'ஆகட்டும்' என்று தலையாட்டுவதோடு சரி. திரும்ப அந்த அலைச்சல்தான்.

ஒருவாறாகத் தொழிற்சாலைக்கு அரசாங்கத்திட மிருந்து பெறவேண்டிய லைசென்ஸ்களையும், மற்ற அனுமதிகளையும் பெற்றாகிவிட்டது. கட்டட வேலை களும் பாதி நடைபெற்றுக் கொண்டிருந்தபோதுதான் லண்டனிலிருந்து அந்தத் தொழிற்சாலை மானேஜிங் டைரக்டர் மிஸ்டர் ஹோம்ஸ் கடிதம் எழுதியிருந்தார். உற்பத்தி செய்வதற்குத் தேவையான இயந்திரங்களைத் தயாரித்து அனுப்பவும், சில அடிப்படை விஷயங்களில் பயிற்சி பெறவும் பொறுப்பும், நம்பிக்கையும் நிறைந்த ஒருவரை அனுப்பிவைக்க வேண்டும். குறைந்தது ஒரு வருட காலம் இங்கு இருந்து மிஷினரிகளைக் கப்பலில் ஏற்றியவுடனேயே அவரைத் திருப்பி அனுப்பிவிடுவதாக வும் கடிதம் வந்தவுடன் சிவராமன் யோசித்துவிட்டு முடிவில் நடராஜையே போய்வரச் சொன்னார்.



நடராஜ் அனு இருவரையும் சேர்த்து அனுப்புவதற்கு ஏற்பாடு செய்தார்.

உடனே அனு லண்டனுக்குக் கடிதம் எழுதிப்போட்டு விட்டாள். தங்கள் பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடு களைக் கவனித்துக் கொண்டிருந்தபோதுதான் சிவராமன், தொழிற்சாலையிலேயே மயங்கி விழுந்துவிட்டதாகச் செய்தி வந்தது. அனுவும், நடராஜும் அப்போது பாஸ்போர்ட் ஆபீசில் இருந்தார்கள்.

செய்தி கிடைத்ததும் உடனே பதறிக்கொண்டு வீட்டிற்கு வந்தபோது குடும்ப டாக்டர் சிவராமனைப் பரிசோதித்துக் கொண்டிருந்தார். அதற்குள், "ஒன்றும் பயமில்லையே டாக்டர்?" என்று அனுவும் நடராஜும் மாறி மாறி அவரைக் கேட்டு விட்டார்கள். நடராஜின் தாய் அவர் கட்டிலின் அருகே பேசக்கூட நா எழாத வளாக நின்று கொண்டிருந்தாள்.

"பயப்படும்படி ஒன்றுமில்லை மிஸ்டர் நடராஜ். மைல்ட் ஹார்ட் அட்டாக்தான். அவருக்கு இப்போது பரிபூரண ஓய்வு தேவை. கம்ப்ளீட் பெட்ரெஸ்ட் வேண்டும். நான் தினமும் வந்து பார்க்கிறேன்" என்று டாக்டர் கூறியதைக் கேட்டதும்தான் எல்லோருக்கும் உயிர் வந்தது.

டாக்டர் தினமும் சிவராமனை வந்து பார்த்துக் கொண்டிருந்தார். 'அப்பாவை இந்த நிலையில் விட்டு விட்டு எப்படிப் போவது?' என்று நடராஜனே குழம்பிக் கொண்டிருந்தான். அப்போது சிவராமன் அவனை அழைத்து, "ராஜா... அனுவை இங்கே விட்டு விட்டு நீ மட்டும் லண்டனுக்குப் போய் வாப்பா. அனு இங்கே இருந்தால் அவள் தொழிற்சாலைகளை கவனித்துக் கொள்வாள், நான் படுக்கையில் இருந்தபடி அவளுக்கு ஆலோசனைகளைக் கூறிக்கொண்டிருப்பேன். மற்ற விஷயங்களில் உதவி செய்ய நான் 'சரலணா இன்டஸ்ட்ரி'

னிருந்து சேதுராமனை வரச்சொல்கிறேன். அனு இருந்தால் உன் அம்மாவிற்கும் ஆறுதலாக இருக்கும். இரண்டு பேரும் ஒன்றாகப் போய்விட்டால் இந்த நிலைமையில், பாவம், அவள் தடுமாறிப் போய்விடுவாள் ராஜா...'' என்றபோது, நடராஜ் பதில் பேச முடியாமல் மௌனமாக நின்றான். அனு இல்லாமல் அவன் மட்டும் போவதா? அந்த நினைவே அவனுக்குக் கசந்தது.

''என்ன ராஜா பேசாமல் இருக்கிறாய்?''

''இல்லை அப்பா. உங்களுக்கு உடம்பு இப்படி இருக்கும்போது நான் மட்டும் எப்படிப் போக முடியும்? அதனால் வேறு யாரையாவது அனுப்பலாமே...''

''வேண்டாம் ராஜா. நீதான் போக வேண்டும். மிஞ்சிப் போனால் ஒரு வருடம். அதற்குள் எனக்கு ஒன்றும் ஆகிவிடாது. இரண்டு மாதங்கள் பெட்டில் இருந்தால் எல்லாம் சரியாகிவிடும். என்னைப் பற்றிக் கவலைப்படாதே.''

நடராஜ் அப்போதும் தயங்கியபடி நின்றிருந்தான். அவன் தயக்கத்தைப் புரிந்துக் கொண்டார் சிவராமன். அனுவிற்கும், அவனுக்கும் இடையிலுள்ள அன்பின் பிணைப்பைப் பார்த்துப் பெருமைபட்டுக் கொண்டிருப்பவராயிற்றே அவர்! இதுகூடப் புரியாமற் போகுமா?

''எனக்கு உடல்நிலை சற்று தேறியதும் உடனே அனுவையும், ஆர்த்தியையும் அனுப்பி வைக்கிறேன் நடராஜா. அவள் உன்னோடு ஒரு மாதமோ, இரண்டு மாதங்களோ இருந்து விட்டு வரட்டும்'' என்று அவர் கூறியபோது அதற்கு மேல் சரி என்று சம்மதிப்பதைத் தவிர வேறு வழியே இருக்கவில்லை நடராஜுக்கு.

நேராக அனுவிடம் போய்த் தன் குமுறலையெல்லாம் கொட்டினான். அவள் பொறுமையாக கேட்டுவிட்டு ''அப்பா சொல்வதுதான் சரி ராஜ் இதை நாமே



யோசித்துப் பார்த்திருக்க வேண்டும். அப்பா படுத்துக் கொண்டதிலிருந்து அம்மா எப்படிக் கலங்கிப் போயிருக்கிறார்கள் என்று நீங்கள் கவனிக்கவில்லையா ராஜ்? அம்மாகூட என்னிடம் மறைமுகமாக 'நீ இருந்தாலாவது கொஞ்சம் தைரியமாக இருக்கும் அனு' என்று இரண்டு மூன்று முறை கேட்டுக் கொண்டு விட்டார். இங்குத் தொழிற்சாலைகளைக் கவனிக்கவும், அப்பாவின் அருகில் அவருக்கு ஆறுதலாக இருக்கவும், அம்மாவிற்கு தைரியமாக இருக்கவும் நான் இங்கே இருக்க வேண்டுமென்று உங்களுக்குத் தோன்றவில்லையா ராஜ்? நம்மைப் பற்றி மட்டுமே சுயநலமாகச் சிந்தித்துக் கொண்டிருக்கலாமா? அப்பா வாய்திறந்து இதுவரை நம்மை ஒன்றும் கேட்டதில்லை. இப்போது கேட்கும்போது அதைத் தட்டலாமா ராஜ்?'' என்று பொறுப்பு உணர்ச்சியுடன் நிதானமாக எடுத்துக்கூறி அவன் மனதை மாற்ற முயன்றாள்.

''நானும் போகவில்லை,வேறு யாரையாவது அனுப்பி விடலாம் அனு...'' என்று குழந்தை மாதிரி அவளுக்குப் பதில் அளித்தான் அவன்.

''இது மிகவும் பொறுப்பு வாய்ந்த ஒரு நபர் செய்ய வேண்டிய வேலை இல்லையா ராஜ்? எல்லாவற்றையும் யோசித்துப் பார்க்கும்போது நீங்கள் போவதுதான் சரி என்று தோன்றுகிறது.''

''உன்னை விட்டு விட்டா அனு?'' என்று பரிதாபமாக அவளைப் பார்த்தான் அவன்.

''ஒரே வருடம்தானே ராஜ்! அதுவும் நடுவில் அப்பா தான் என்னை அனுப்பி வைக்கிறேன் என்று சொல்லியிருக்கிறாரே? அப்பா சற்று எழுந்து நடக்கட்டும், மறுநாள் விமானத்தில் நான் பறந்து வந்து விடுகிறேன். உங்களை விட்டு என்னால் மட்டும் இருக்க முடியுமா ராஜ்?'' என்று கெஞ்சிக், கெஞ்சி அவனை ஒருவழியாக இந்தப் பயணத்திற்குச் சம்மதிக்க வைத்தாள் அனு.

நடராஜின் பிரயாணத்திற்கு வேண்டிய எல்லா ஏற்பாடுகளும் தயாராகி விட்டன. அவன் கிளம்பப் பத்து நாட்கள் இருந்தபோது, "அனு, நான் போவதற்கு முன் நான்கு நாட்கள் ஊட்டிக்குப்போய் நிம்மதியாய் இருந்து விட்டு வரலாமா என்று கேட்டான். அவன் விருப்பப்படித் தான் அவர்கள் இப்போது ஊட்டிக்கு வந்திருந்தார்கள்.

அவர்கள் வந்த மறுநாளே ஊட்டியில் மழை பிடித்துக் கொண்டுவிட்டது. இரண்டு நாட்களாகியும் விடாத அடை மழை.

மனைவியோடும், குழந்தையோடும் சந்தோஷமாகச் சில நாட்கள் இருந்துவிட்டுப் போகலாம் என்று வந்த நடராஜுக்கு அந்த மழை அலுப்பைத் தந்தது. ஆனால் அவனைப் பொறுத்தவரை அவன் உலகம் அனுதான். அவள் அருகே இருந்தால் அதுபோதும் அவனுக்கு. அனுவும் ராஜாவோடு இருக்க வேண்டும் என்பதைத்தான் விரும்பினாள் அதனால் அவர்கள் இருவரும் மழையைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால் ஆர்த்திக்குத்தான் மழைபெய்ய ஆரம்பித்த உடன் ஊட்டி போரடித்துவிட்டது. வெளியே எங்கும் போக முடியவில்லை. அவளோடு விளையாடவும் ஒருவருமில்லை. எத்தனை நேரம் ஓட்டலுக்குள்ளேயே மேலேயும் கீழேயும் சுற்றிவந்து கொண்டிருப்பாள்?

"ஊருக்குப் போகலாம் அப்பா..." என்று நடராஜைத் துளைத்தெடுக்க ஆரம்பித்தாள்.

இதோ மழை நின்றுவிடும் ஆர்த்திம்மா, நாம் ஹார்ஸ் ரைடிங் போகலாம். பொட்டானிகல் கார்டனுக்குப் போகலாம்" என்று அவளைச் சமாதானப்படுத்தி மேலும் இரண்டு நாட்களைக் கடத்திவிட்டான். மழை ஓய்வதாக இல்லை. ஆகவே அவர்கள் ஊட்டியைவிட்டுக் கிளம்ப வேண்டியதாயிற்று.

# 5

விமானம் பத்தாயிரம் அடி உயரத்தில் பறந்து கொண்டிருக்கிறது. உங்கள் காப்டன்...என்று ஏதோ சொல்லிக்கொண்டிருந்தாள் விமானப் பணிப்பெண். எதிலும் மனம் செல்லவில்லை நடராஜிற்கு. சீட்டில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்தான். அவன் தூங்கவில்லை. ஆனால் தூங்குகிற மாதிரி இருந்தான். பக்கத்து சீட்டிலிருந்த செளத்ரி, தன்னை அறிமுகப் படுத்திக் கொண்டதிலிருந்து தொண தொணவென்று பேசிக்கொண்டே வந்தார். அவரிடமிருந்து தப்பித்துத் தன் மனம் போன போக்கில் அமைதியாகச் சிந்திக்க வேண்டும் என்று மிகவும களைத்துப்போன மாதிரிக் கண்களை மூடிக்கொண்டான்.

"ஆர் யூ டயர்ட் மிஸ்டர் நடராஜ்? தென் யு கேன் டேக் ரெஸ்ட்" என்று சொல்லிவிட்டு செளத்ரி, தான் கொண்டு வந்த 'லவ் மெஷினி'ல் ஆழ்ந்து போனார்.

நடராஜிக்கு நிம்மதியாக அனுவைப்பற்றிய நினைவில் அமிழ்ந்து போக நேரம் கிடைத்தது. அன்று காலையிலிருந்து அனு, அனுவாக இல்லை. தான் ஒரு குழந்தைக்குத் தாய், படித்துப் பட்டம் பெற்றவள் என்பதையெல்லாம் மறந்து விட்டாள். அவள் ஆர்த்தியாக, ஏன், ஆர்த்தியைவிடச் சின்னவளாக, சிறு குழந்தையாகவே மாறிவிட்டாள். "ராஜ் இன்று உங்களுக்கு எல்லாம் நான்தான் செய்யப் போகிறேன்" என்று அவனையும் குழந்தையாக்கி விட்டாள்.

"இப்படித் தலைவாரிக் கொள்ளுங்கள் ராஜ் அழகாக இருக்கிறது" என்று அவன் தலையைத் தானே வாரிவிட்டு அதை பல கோணங்களில் நின்று அழகு பார்த்

தான். நடராஜ் டையைக் கட்டிக்கொள்ளப் போனான். "ஹேய், நான் நாட் போடறேன்" என்று ஓடிவந்து அழகாக நாட் போட்டு கோட்டை எடுத்து அவன் கைகளில் மாட்டித் தானே பட்டனையும் போட்டாள். சற்று தள்ளி நின்று, "நீங்கள் இன்று ஜம்மென்று இருக்கிறீர்களே, புது மாப்பிள்ளை மாதிரி" என்றபோது அவள் கண்கள் கலங்கி விட்டன.

"அ...னூ..." என்று குரல் தழுதழுத்த அவளை இழுத்து அணைத்துக்கொண்டான் நடராஜ். அதற்கு மேல் இருவராலும் தங்கள் உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்த முடியவில்லை. அனுவின் கண்ணீர் அவனது கோட்டை நனைத்தது.

"ராஜ்...ராஜ்...ஐ வில் மிஸ் யு ஸோ மச்...ஸோமச் டார்லிங்...ஈச் அண்ட் எவ்ரி மினிட் ஐயாம் கோயிங் டு ஃபீல் யுவர் அப்ஸென்ஸ் டியர்..."

அவள் தன் கரங்களை அவன் கழுத்தில் மாலையாகப் போட்டு அவன் காதருகில் கண்ணீருக்கிடையே தடுமாறிக்கொண்டே கூறியபோது, நடராஜினால் பேசவே முடியவில்லை. துக்கம் அவன் தொண்டையை அடைத்தது.

"அனு...அனு டார்லிங்..." என்று மேலே சொல்ல வந்ததைக்கூட சொல்ல முடியாதவனாக உருகிக்கரைந்து போனான் அவன்.

ஏர் போர்ட்டிற்கு வந்தபின், "வரட்டுமா அனு!" என்ற ஒரே வார்த்தைதான் கேட்க முடிந்தது அவனால். (ஆனால் கண்களின் சந்திப்பில், விரல்களின் அழுத்தத்தில் இருவரும் இரகசியமாக ஓராயிரம் வார்த்தைகள் பேசி விட்டனர்.)

அனுவிடம் வெளிப்படையாகக் காட்டமுடியாத அன்பையெல்லாம் சேர்த்து ஆர்த்தியை அள்ளி



அணைத்துக்கொண்டு அவள் கன்னங்களில் முத்தங்களாகப் பொழிந்தான் அவன்.

"என்னை விட்டுவிட்டுப் போறியாப்பா?" என்று மனத்தின் ஏக்கம் கண்களில் கண்ணீராகக் கலங்கி நிற்கக் கேட்டாள் அவள்.

"இல்லேம்மா, உன்னைவிட்டு விட்டுப்போக என்னால் முடியுமா? என் மனசு இங்கேதான் சுற்றிக்கொண்டிருக்கும். நீ அழக்கூடாது கண்ணா. நீ அழுதால் நானும் அழுவேன்...என்று கண்ணீரில் பளபளத்த அவள் கண்களை மென்மையாகத் துடைத்துக்கொண்டே கூறினான் நடராஜ். ஆர்த்தி மேலும் விசும்பினாள்.

"நீ எனக்கு லெட்டர் போடுவியா கண்ணம்மா?"

"ஓ" என்று தலையாட்டினாள் அவள்.

"தினமும் போடறேன் அப்பா."

அவளை இறுகத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான் நடராஜ்.

"உனக்குப் பெரிய அழகான 'டால்' எல்லாம் வாங்கி அனுப்பட்டுமா டியர், எங்கே, அப்பாவிற்கு ஒரு கிஸ்...!"

"ஆர்த்தி அவன் முகத்தைத் தனக்காகத் திருப்பி இரண்டு கன்னங்களிலும், நெற்றியிலும், பின் அவன் உதட்டிலும் அழுத்தி முத்தமிட்டாள்.

"அவன் வரட்டுமா ஆர்த்தி டார்லிங்...?"

அவள் தலையை மட்டும் ஆட்டினாள்.

நடராஜ் அவளைக் கீழே இறக்கிவிட்டுத் தன் தாயிடம் விடைபெற்றுக் கொண்டான்.

''உடம்பைப் பார்த்துக்கோ ராஜா. அடிக்கடி லெட்டர் போடு'' என்று கூறுவதற்குள் அவள் கண்களில் கண்ணீர் ததும்பி விட்டது. அதைப் பார்த்த நடராஜும் கலங்கி விட்டான்.

''அப்பாவை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள் அம்மா. அவருக்கு ஒன்றுமிருக்காது. பயப்படாதே. நான் அடிக்கடி கடிதம் எழுதுகிறேன். நீயும் பதில் போடும்மா...'' என்று கூறிக்கொண்டிருக்கும் போதே, ''யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ், யுவர் அட்டென்ஷன் ப்ளீஸ்'' என்று விமானம் புறப்படப் போவதை அறிவித்த வுடன் நடராஜ், நண்பர்களிடம் விடைபெற்றுக்கொண்டு கடைசியாகத் திரும்ப அனுவிடம் ஓடிவந்தான். அனு அப்போது ஆர்த்தியைத் தூக்கி வைத்துக் கொண்டிருந் தாள். ஆர்த்தியை அணைத்து முத்தமிடும் சாக்கில் இருவரையும் ஒன்றாகச் சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''வருகிறேன் அனு.''

அவள் நீர் நிறைந்த விழிகளோடு தலையாட்டி னாள்.

''பை...ஆர்த்திம்மா...''

''பை...பை டாடி.''

விமானத்தின் கடைசிப் படியில் நின்று கடைசியாகத் திரும்பிப் பார்த்தபோது அவன் இதயம் கனத்தது. துக்கம் குமுறிக்கொண்டு வந்தது. உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக்கொண்டு தன் சீட்டில்போய் உட்கார்ந்து பெல்ட்டைப் போட்டுக் கொண்டான்.

விமானம் பறக்கும் உயரம், வெட்ப தட்ப நிலை எல்லாவற்றையும் அறிவித்தபின் லைஃப் ஜாக்கெட்டை உபயோகிக்க வேண்டிய விதத்தைப் பற்றிய வழக்கமான



டெமான்ஸ்ட்ரேஷனை வழங்கிக் கொண்டிருந்தாள் ஏர்ஹோஸ்டஸ். நடராஜ் அவை எதையும் கவனிக்க வில்லை. அவன் மனம் 'அனு அனு' என்றே அலறிக் கொண்டிருந்தது.

அனுவை முதன்முதலாக அவன் சந்தித்ததும் இந்த மீனம்பாக்கம் விமான நிலையத்தில்தான், அப்போது அவன் லண்டனிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தான். முதற் தொழிற்சாலை விஷயமாக போர்ட் ஆஃப் டைரக்டர்ஸ் மீட்டிங் லண்டனில் நடைபெற்றது. அதை முடித்துக் கொண்டு மீனம்பாக்கத்தில் வந்து இறங்கிய போது அவனுக்காக சிவராமன், ராமலிங்கம் இருவருமே காத்துக்கொண்டிருந்தனர். ராமலிங்கத்தின் அருகில் நின்று கொண்டிருந்த அனுவின் மீதுதான் அவன் பார்வை முதலில் படிந்தது. 'யார் இந்த அழகுத் தேவதை' என்று நினைத்துக் கொண்டே அவர்களை நெருங்கினான் அவன். வழக்கமான விசாரிப்புக்கு பின் ராமலிங்கம் அனுவை அவனுக்கு அறிமுகப்படுத்தினார்.

''என் டாட்டர் அனுராதா ராஜா...''

நடராஜ் ''ஹலோ'' என்றபோது அவள் அழகாகக் கை குவித்தது அவனுக்குப் பிடித்திருந்தது.

'எத்தனையோ நாட்கள் நாம் ராமலிங்க மாமாவின் வீட்டிற்கு போயிருக்கிறோம். அப்போதெல்லாம் இவளைப் பார்க்கவே இல்லையே, என்று அவன் யோசித்துக் கொண்டிருந்தபோது அதற்குப் பதிலளிப்பது போல் ராமலிங்கமே பேசினார்.

''இத்தனை நாட்கள் பெங்களூரில் அவள் தன் தாத்தா பாட்டியிடம் தங்கிப் படித்துக் கொண்டிருந்தாள் ராஜா. அவளுடைய அம்மா போனபோது அவளுக்கு எட்டு வயது. அதிலிருந்து அவளைத் தங்களோடு அழைத்துக் கொண்டு போய் தாயற்ற குறை தெரியாமல் வளர்த்தது.

படிக்க வைத்தது எல்லாம் அவர்கள்தான். இப்போது படிப்பை முடித்துவிட்டு உங்களுக்கு உதவியாக இருக்கப் போகிறேன்' என்று இங்கு வந்துவிட்டாள். பிடிவாதம் பிடித்துத் தினமும் தொழிற்சாலைக்கு வந்து கொண்டிருக்கிறாள்.''

நடராஜ் அவளைத் திரும்பிப் பார்த்து அழகாகப் புன்னகை செய்தான். அந்தப் புன்னகையில் அவள் தன்னையே பறிகொடுத்ததைப் போல்; அவன் அவளது அழகில் தன் நெஞ்சை பறிகொடுத்து விட்டான்.

பின்னர் அவர்கள் இருவரும் பழகிய விதத்திலிருந்து அவர்கள் மனங்களைப் புரிந்துகொண்ட பெரியவர்கள், விரைவில் நாள் பார்த்துத் திருமணத்தையும் முடித்து வைத்தார்கள். அவர்கள் ஜோடிப் பொருத்தத்தையும், அவர்களுக்கிடையே இருந்த அன்பின் ஆழத்தையும் பார்த்து மனம் நெகிழ்ந்து போய் ராமலிங்கம் அடிக்கடி ''இதைப் பார்த்து சந்தோஷப்பட உன் அம்மா இல்லையேம்மா...'' என்று பெருமூச்சோடு கூறுவதுண்டு. ஆர்த்தி பிறந்த போது அவளைப் பார்த்துக் களிக்க அவரே இல்லை.

தொட்டிலில் பல ஊட்டி ரோஜாக்களை செண்டாகக் கட்டிப் போட்டதுபோல் இருந்த ஆர்த்தியைப் பார்த்ததும் நடராஜின் உள்ளம் சிலிர்த்தது. செக்கச் சிவந்திருந்த அதன் குண்டுக் கன்னங்களில் குனிந்து முத்தமிட்டபோது அவனுக்குள் ஏற்பட்ட உணர்ச்சி இனிமையானது; புதுமையானது. அந்த இனிமையான புது உணர்வில் தன்னை மறந்து அனுவை நெருங்கி அவள் முகத்தில் புரண்ட கூந்தலை ஒதுக்கி விட்டான். கன்னங்களை வருடியபடி ,,எப்படி இருக்கிறாய் டார்லிங்? என்று கேட்டான்.''

''குழந்தை எப்படி இருக்கிறாள் ராஜா?''



''ம்...உன்னை மாதிரியே இருக்கிறாள் அனும்மா. அதே கண்கள், அதே மூக்கு...ரோஜா பூ மாதிரி கலர், எல்லாம் சேர்ந்து அவள் குட்டி அனுதான்.''

அனுவிற்குப் பெருமை பிடிபடவில்லை. அதே சமயத்தில் அவள் கண்கள் கலங்கின. அதைப் பார்த்த நடராஜ், ''என்ன அனும்மா...அவள் உன்னை மிகவும் சங்கடப் படுத்தி விட்டாளா?'' என்று அவளுடைய கலக்கத்தைக் காண முடியாமல் வேதனையோடு கேட்டான்.

''இல்லை'' என்று தலையாட்டினாள்.

''பின் என்ன அனு...எதற்காக இந்த வருத்தம்?''

இவளைப் பார்க்க அப்பா இல்லையே என்று நினைத்துக் கொண்டேன் ராஜ். நம்மைப் பார்க்கும் போதெல்லாம் 'உன் அம்மா இல்லையே அனு...' என்று கூறி வருத்தப்பட்டுக் கொள்ளும் அவரே இப்போது தன் பேத்தியைப் பார்க்க இல்லையே''—அவளது கண்களிலிருந்து கண்ணீர் விழிகளின் ஓரங்களில் வழிந்து தலையணையை நனைத்தது. அவளது உணர்ச்சியைப் புரிந்து கொண்டான் நடராஜ். அவள் முகத்திற்கு நேராகக் குனிந்து தன் கைக்குட்டையால் கண்களைத் துடைத்தபடி ''நோ டார்லிங், நீ இந்த சமயத்தில் இப்படியெல்லாம் மனத்தைப் போட்டு வருத்திக் கொள்ளக் கூடாது. நான் இல்லையா உனக்கு? அப்பாவும், அம்மாவும் இல்லையா? அவர்கள்தான் உன் அப்பா அம்மா, ராமலிங்க மாமா செத்துப்போன அன்று உன்னிடம் வந்து அப்பா என்ன சொன்னார் என்பதை மறந்து விட்டாயா அனு? 'இனிமேல் நான்தானம்மா உனக்கு அப்பா. என்னை உன் அப்பாவாக நினைத்துக் கொள்ள வேண்டும்' என்று சொல்லவில்லையா? அழாதே அனு...நீ என்ன குழந்தையா?'' என்று சொல்லி அவளைத் தேற்றியபோது அவனுக்குத் தன்மீதிருந்த அன்பை காண

அவன் நெஞ்சம் பாகாக உருகிக் கரைந்தது. உணர்ச்சி மிகுதியில் அவன் கரங்களைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள்.

"ராஜ்... நீங்கள் இருக்கும்போது எனக்கு என்ன குறை? நான் மிகவும் கொடுத்து வைத்தவள் ராஜா... மிகவும் கொடுத்து வைத்தவள்..."

அதைக் கேட்ட அவன் உள்ளம் சிலிர்த்தது. நெஞ்சில் அன்பு வெள்ளம் பெருக, "நானும் கொடுத்து வைத்தவன் தான் அனு" என்று கூறி அவளை அணைத்துக்கொள்ள முயன்றபோது "ஷ்...ராஜ்...கொஞ்ச நாளைக்கு இதெல்லாம் கிடையாது..." என்று கொஞ்சலாகப் புன்னகையோடு அவள் கூறியதும், அவன் முகம் ஏமாற்றத்தால் வாடி விட்டாலும், "ஓகே அனு. கொஞ்ச நாட்களை உனக்காகத் தியாகம் செய்கிறேன்..." என்றான் சிரித்துக் கொண்டே.

ஆர்த்தியின் வரவினால் சிலநாட்கள் வரை அனுவைப் பார்க்கும்போதெல்லாம் நெகிழும் தன் மனத்தை அடக்கி வைத்துக் கொண்டிருந்தான் அவன், இப்போது அனு மட்டுமில்லை. ஆர்த்தியையும்கூட விட்டுப் பிரிந்து எத்தனை மாதங்களைத் தள்ள வேண்டும்? நடராஜ் பெருமூச்சு விட்டான்.

பெருட் ஏர்போர்ட்டில் விமானம் இறங்கியதும் 2 பிக்சர் போஸ்ட் கார்டுகளை வாங்கி 'ஐ லவ் யு வித் ஆல் மை ஹார்ட் அனு' என்று அவளுக்கும், 'மை ஸ்வீட் கிஸ் டு யு டார்லிங்' என்பதை ஆர்த்திக்கும் எழுதிப் போஸ்ட் செய்தான். அதன் பின்தான் அவன் நெஞ்சில் இன்னதென்று சொல்ல முடியாமல் அடைத்துக் கொண்டிருந்த இறுக்கம் சற்றுத் தளர்ந்தது. சௌத்ரியுடன் சற்று மனம் விட்டுப் பேச அவனால் முடிந்தது.



லண்டன் ஹீத்ரோ ஏர்போர்ட்டில் அவனை வரவேற்க அந்தத் தொழிற்சாலை மானேஜிங் டைரக்டர் ஹோம்ஸ் வந்திருந்தார். அவனைக் கைகுலுக்கி வரவேற்ற பின் இருவரும் ஹில்டன் ஹோட்டலுக்குச் சென்றனர். அங்கு தான் நடராஜிற்கு அறை ஏற்பாடு செய்திருந்தார்கள். அவனை அறையில் விட்டு விட்டு, "யூ கேன் டேக் ரெஸ்ட் மிஸ்டர் நடராஜ். ஐ வில் கால் ஆன் யு லேட்டர்" என்று சொல்லி ஹோம்ஸ் விடை பெற்றுக் கொண்டு போய் விட்டார்.

நடராஜ் கோட்டையும், டையையும் கழற்றி டிரஸ்ஸிங் டேபிள் மீது போட்டுவிட்டு, சூட்கேஸைத் திறந்தான். மேலாக வைத்திருந்த பெரிய போட்டோ ஃபிரேமை எடுத்துத் திறந்து கட்டிலின் அருகே இருந்த ஸ்டாண்டில் வைத்தான். அதன் ஒரு பக்கம் முழுவதையும் அடைத்துக் கொண்டு அழகாகப் புன்னகை செய்தபடி நின்று கொண்டிருந்தாள் அனு. மறுபக்கத்தில் ஆர்த்தி. கண்ணிமைக்காமல் அந்தப் போட்டோக்களைப் பார்த்துக் கொண்டே இருந்தான். இப்போது இருவரும் கூடவந்திருந்தால் எப்படி இருந்திருக்கும் என்று கற்பனை செய்து பார்த்தான் நடராஜ். அனு முதன் முறையாக வருவதால் அவளுக்கு எல்லாவற்றையும் காட்டி விளக்கம் கூறிக் கொண்டே வந்திருப்பான்! அந்தப் பெரிய பெரிய கட்டடங்களைப் பிரமிப்போடு தன் கண்களை அகல விரித்துப் பார்த்துக் கொண்டே வருவாள் ஆர்த்தி.

நடராஜ் பெருமூச்சு விட்டான். இப்படி எத்தனையோ கற்பனைகளைச் செய்து வைத்திருந்தான் அவன். ஈபிள் டவர் மீது அனுவை அணைத்துக்கொண்டு நிற்க வேண்டும். ஊட்டி குளிரே தாங்காமல் நடுங்கிய ஆர்த்தியை, ஸ்விட்சர்லாந்திற்கு அழைத்துப்போய் 'டாடி' என்று அவனை அணைத்துக் கொள்வதைப் பார்க்க வேண்டும் என்று எத்தனை கனவுகள் கண்டான்! எல்லாம் கனவாகவே போய்விட்டன.

எதையெதையோ நினைத்துக் கொண்டு கட்டிலில் படுத்துக்கொண்டிருந்த நடராஜ், அப்படியே உறங்கியும் போனான். அறையிலிருந்த டெலிபோன் மணி அடிக்கும் சப்தம் கேட்டுத்தான் திரும்பிக் கண் விழித்தான் நடராஜ். ரிஸீவரை எடுத்ததும் இனிமையான குரல் அவன் செவியிற் பாய்ந்தது.

''குட் ஈவினிங் மிஸ்டர் நடராஜ். நான் மிஸ்டர் ஜேம்ஸின் காரியதரிசி மோனிகா பேசுகிறேன். நீங்கள் இன்னும் அரை மணி நேரத்தில் தயாராக இருந்தால் நான் வந்து உங்களைத் தொழிற்சாலைக்கு அழைத்துப் போகிறேன்.''

''தாங்க்யூ மிஸ் மோனிகா. ஐ வில் பி ரெடி...'' என்றான் நடராஜ்.

மோனிகா சொன்ன நேரத்தில் சரியாக வந்துவிட்டாள். அவளோடு சர்ரே கௌண்டியில் இருந்த தொழிற்சாலைக்குப் போனான் நடராஜ். முதற் தொழிற்சாலை விஷயமாக இரண்டு முறைகள் அங்கு வந்திருந்ததால் எல்லோரும் அவனுக்குத் தெரிந்தவர்களாக இருக்கவே அனைவருடனும் கைகுலுக்கிப் பேசிவிட்டு, சிலமணி நேரங்களைத் தொழிற்சாலையில் கழித்துவிட்டு அறைக்குத் திரும்பிய நடராஜிற்கு அந்த ஒரே நாளில் திரும்ப எப்போது இந்தியாவிற்குப் போகப் போகிறோம் என்றாகி விட்டது.

## 6

அன்று சனிக்கிழமை, தொழிற்சாலை இல்லை. கட்டிலில் படுத்துப் புரண்டு கொண்டிருந்தான் நடராஜ். வெளியே எங்கு போகவும் பிடிக்கவில்லை. கட்டிலின் அருகே வைக்கப்பட்டிருந்த பத்திரிகைகள் அநாதையாகச் சிதறிக் கிடந்தன. அவன் இந்தியாவை விட்டு வந்து



கிட்டத்தட்ட இரண்டரை மாதங்களாகி விட்டன. இதற்குள் அனுவிற்குக் குறைந்தது ஐம்பது கடிதங்களாவது எழுதிவிட்டிருப்பான். அனுவும் கடிதம் தவறாமல் அவனுக்குப் பதில் எழுதினாள். முன்னாலேயே நேரத்தைக் குறித்து அவளுக்குக் கடிதம் போட்டுவிட்டு இரண்டுமுறை 'டிரங்கால்' போட்டுக்கூடப் பேசி விட்டான். 'அனு டியர், தயவுசெய்து கடிதங்களைத் தமிழிலேயே எழுதேன். இங்கே தமிழ்ச் சொற்களைக் கேட்கும்போதும், பார்க்கும்போதும் எப்படி இருக்கிறது தெரியுமா?' என்று அவன் ஒரு கடிதத்தில் கேட்டுக் கொண்டதிலிருந்து அனு மட்டுமின்றி ஆர்த்தி கூடத் தனக்குத் தெரிந்த அரை குறைத் தமிழில் கடிதங்களை எழுதலானாள்.

இந்த இரண்டு மாத காலத்தில் அவன் ஹைட்பார்க், மேடம் டுஸ்ஸாட், பிக்பென், பக்கிங்ஹாம் பேலஸ் முதலிய எல்லா இடங்களுக்கும் போய் வந்துவிட்டான். எல்லாம் அவன் முன்பே பார்த்த இடங்கள்தாம். எப்படியாவது பொழுதைப் போக்க வேண்டுமே என்று அவன் திரும்ப அந்த இடங்களை மற்றுமொருமுறை பார்த்து வைத்தான். எங்கே போனாலும் அவனுக்கு அனுவின் நினைவுதான் வரும். ஒவ்வொரு விநாடியும் அவளது பிரிவை எண்ணித் தவித்தான் அவன்.

போஸ்ட் ஆபீஸ் டவர் ரிவால்விங் ரெஸ்டாரண்டில் உட்கார்ந்து தேனீரைச் சுவைத்துக் கொண்டே லண்டன் முழுவதையும் பார்த்தபோது 'அனு கூட இருந்திருந்தால் குழந்தை மாதிரி இதை எப்படி ரசித்திருப்பாள்!' என்று நினைத்தான். டிரஃபால்கர் ஸ்கொயரில் தன் தலை மீதும் தோள்மீதும் பறந்து வந்து உட்கார்ந்த புறாக்களைப் பார்த்ததும் இதைப் பார்த்து அனு கலகலவென்று சிரித்திருப்பாளே என்று எண்ணிப் பெருமூச்சு விட்டான். லண்டன் டவர்மீது ஏறியபோது அங்கு கைகளைச்

கோர்த்துக் கொண்டு நின்ற இளம் ஜோடிகளைப் பார்த்ததும் அவன் ஏக்கம் அதிகமாயிற்று. அதற்குமேல் அவனால் அங்கு நின்று எதையும் ரசிக்க முடியவில்லை. கீழே இறங்கி வந்து விட்டான். ஒருமுறை லண்டன் பாண்ட் ஸ்ட்ரீட்டில் விண்டோ ஷாப்பிங்கிற்காகப் போயிருந்தான். கண்ணாடி ஷோ கேஸில் வைக்கப்பட்டிருந்த ஹாண்ட் பாக்குகளையும், மற்ற அலங்காரப் பொருட்களையும் பார்த்தபோது 'இங்கே அனு நமக்கு எவ்வளவு செலவு வைத்திருப்பாள்' என்ற நினைவில் ஆழ்ந்தவன், அவளுக்காகத் திறந்தவுடன் இனிமையாக இசையைப் பொழியும் காம்பேக்ட் ஒன்றை வாங்கி அதில் அனுவின் பெயரை அழகாகப் பொறித்துத் தரச் சொன்னான்.

வார இறுதியில் கிளம்பி ஸ்விஸ், ரோம், பாரீஸ், என்று ஒவ்வோர் இடமாகச் சென்றான். ஸ்விஸ்சர்லாந்தில் ட்ராலியில் போனபோது அனுவோடு ஒரு முறை ஜயன்ட் வீலில் சுற்றியது ஞாபகத்திற்கு வந்தது அவனுக்கு. அனுவிடம் இந்த மாதிரி குழந்தைத்தனமெல்லாம் அதிகம். குச்சி ஐஸ் க்ரீம் வேண்டும் என்று கேட்டு வாங்கித்தரச் சொல்லி அதைச் சுவைத்துச் சாப்பிடுவாள். ஓர் அழகான பூவையோ, பொருளையோ பார்த்து விட்டால் போதும்; ''ஹௌ லவ்லி ராஜ்...'' என்று அங்கேயே மயங்கி நின்று விடுவாள். அதன்பின் அவளைப் பிடித்து இழுத்துக் கொண்டுதான் வரவேண்டும். அனுவிடம் அவனுக்கு மிகவும் பிடித்தது இந்தக் குழந்தைத்தனம்தான்.

ஒரு முறை பொருட்காட்சிசாலைக்குப் போக வேண்டும் என்று வற்புறுத்தி அவனையும் அழைத்துக் கொண்டு போனாள். அங்கே ஜயன்ட் வீலைப் பார்த்ததும் அதில் ஏறிச் சுற்றினால் தான் ஆயிற்று என்று அடம் பிடித்தாள்.



''நீ வேண்டுமானால் போ அனு. நான் வரவில்லை. இது என்ன குழந்தைத்தனமான ஆசை?'' என்று அவளைக் கேலி செய்தான் அவன்.

''இதில் போகிறார்களே, இவர்களெல்லாம் குழந்தைகளா ராஜ்! நீங்கள் வராவிட்டால் நானும் போகவில்லை'' என்று கூறிவிட்டாள் அவள். அவளுடைய அந்த ஆசையை மறுக்க மனமில்லாமல் அன்று அவனும் உடன்போக வேண்டியதாயிற்று. அது மேலே போய்க் கீழே இறங்கும் போது ''ரா...ஜா...'' என்று பயத்தில் அவனைச் சேர்த்து அணைத்துக் கொண்டு கண்களை இறுக மூடியபடி அவன் தோளில் தலையைச் சாய்த்துக் கொண்டு விட்டாள்.

''பயப்படாதே அனு. ஒன்றுமில்லை. இதோ முடிந்து விடும், நான்தான் பக்கத்தில் இருக்கிறேனே...' என்று அவளுக்குத் தைரியமளித்தான்.

கீழே இறங்கி வந்தவுடன், ''அடேடே, இவ்வளவு தானா உன் தைரியமெல்லாம்?'' என்று சிரித்துக் கேலி செய்து கொண்டே இருந்தான். அந்த நிகழ்ச்சிதான் அப்போது அவனுக்கு நினைவு வந்தது. அதற்கே அவ்வளவு பயந்தாளே, இப்போது கீழே குனிந்து பார்த்தால் தலையைச் சுற்றும் பாதாளமாகப் பள்ளத்தாக்கு. நடுவில் ஒரு கயிற்றில் தொட்டில் மாதிரி ஓடும் இதில், வரும்போது எப்படிப் பயந்திருப்பாள் என்ற எண்ணத்தில் அவன் இதழ்களில் புன்னகை படர்ந்தது.

'ஐ மிஸ் யு ஸோ மச் டார்லிங்...' என்று தனக்குள் சொல்லிக்கொண்டு, அந்த நினைவு தந்த வேதனையில் கண்களை மூடிக்கொண்டு விட்டான் அவன்.

'இரவில் தூங்கும் போதெல்லாம் அருகே நீங்கள் இருப்பதைப் போலவே எனக்கொரு பிரமை. கை நீட்டி தொட்டுப் பார்த்துப் பக்கத்துப் படுக்கை காலியாய்

இருப்பதை உணரும் போது...ஓ, ராஜ்! நீங்கள் எப்போது வரப் போகிறீர்கள்?'' என்று ஏக்கம் சொட்டச் சொட்ட வரும் அவள் கடிதங்களையும் 'டாடி, திரும்பி வரும்வரை உங்கள் பேச்சு நான் காய், பேசவே மாட்டேன். பிராமிஸாகப் பேச மாட்டேன். இந்தத்தரம் ஹிஸ்டரி டெஸ்டில் ஃபெயில், முப்பது மார்க்குகள் தான். அடுத்ததரம் பாஸாகி விடுவேன். ரிப்போர்டில் கையெழுத்துப் போடும் போது அம்மா திட்டினார்கள். நான் அழுதேன், நீங்கள் சீக்கிரம் வந்துவிடுங்கள். நீங்கள்தான் திட்டாமல் ரிப்போர்ட்டில் கையெழுத்து போடுவீர்கள்!' என்று குழந்தைத்தனம் மாறாமல் கோணல் மாணலாகத் தப்புத் தப்பாகத் தமிழில் ஒரு கவர் முழுவதையும் நான்கைந்து வரிகளில் நிரப்பும் ஆர்த்தியின் கடிதங்களையும் ஒராயிரம் முறைகளாவது படித்து விடுவான் அவன். ஆர்த்தி எதிலாவது குறைந்த மார்க் வாங்கி அன்று அவளுக்கு ரிப்போர்ட்டும் வந்திருந்தால் அதை முன்கூட்டியேதெரிந்து கொண்டு விடுவான் நடராஜ். ஆர்த்தி அவனைச் சுற்றிச் சுற்றி வருவாள். ஒரேயடியாய்க் கொஞ்சுவாள். கழுத்தைக் கட்டிக்கொள்வாள். கன்னங்களில் முத்த மிடுவாள்.

''டாடி, யூ ஆர் வெரி நைஸ் டாடி, மை ஸ்வீட் டாடி...'' என்று மடியில் படுத்துக்கொண்டு அவனுக்கு ஸோப் போடும்போது நடராஜ் புரிந்து கொண்டு விடுவான்.

''வாட் பேபி, வாட் ஈஸ் தி மேட்டர்!'' என்று புரிந்து கொள்ளாதமாதிரி கேட்பான்.

''ஒண்ணுமில்லேப்பா. இந்த வாட்டி கணக்கிலே மட்டும் கொஞ்சம் குறைஞ்ச மார்க்குப்பா...'' என்று இழுப்பாள்.

''ஓஹோ, ரிப்போர்ட்டா? அம்மாவிடம் காட்டி விட்டாயா டார்லிங்?''



''இல்லேப்பா,' அம்மாகிட்டே காட்ட வேண்டாம்பா. அடுத்ததரம் நல்ல மார்க் வாங்கறேம்பா...'' என்று தலையை சாய்த்து அவள் கெஞ்சும் அழகில் தன்னை மறந்து விடுவான் அவன்.

''திஸ் ஈஸ் நோ குட் டியர்'' என்று செல்லமாகக் கண்டித்துக் கையெழுத்தும் போட்டுக்கொடுத்து விடுவான். அவள் அவனை ஒரே கட்டாகக் கட்டிக் கொண்டு ''ஓ தாங்க்யூ டாடி, ஹௌ நைஸ் யூ ஆர்! ஐ லைக் யூ ஸோ மச்'' என்று அவனைத் திணற அடிப்பாள்.

அனுவிடம் இந்தக் கொஞ்சல், கெஞ்சல் எதுவும் நடக்காது. அனு அவனையே சில சமயங்களில் கோபித்துக் கொள்வாள். ''நீங்கள் அவளுக்கு ரொம்பச் செல்லம் கொடுக்கிறீர்கள் ராஜ். படிப்பு விஷயத்தில் மட்டுமாவது கொஞ்சம் கண்டிப்பாக இருங்கள்'' என்பாள். ஆனால் ஆர்த்தியிடம் கண்டிப்பாகவிருப்பது என்பது மட்டும் அவனால் இயலாத ஒன்று. அவளும் அப்படிப் பரிதாப மாக முகத்தை வைத்துக் கொண்டு அவனைப் பார்ப்பாள். அந்தக் கண்களையும், முகத்தையும், கன்னங்களையும் பார்க்கும்போது அவனுக்கு அவளைக் கோபித்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணமே மறந்து போய்விடும். அப்படியே நினைவிருந்தாலும், இப்படிச் செய்யாதேடா டார்லிங் என்பதற்குமேல் எது சொல்லவும் மனம் வராது.

ஆர்த்தியின் கடிதங்களைப் படிக்கும்போது வாய் விட்டுச் சிரித்து விடுவான் நடராஜ்.

''மிஸ்ச்சுவஸ் கிட்'' என்று கடிதத்தை நெஞ்சோடு அணைத்து முத்தமிடும் போதெல்லாம் அவளையே அணைத்து அந்த ஆப்பிள் சீக்ஸில் முத்தமிடுகிறாற்போல் ஒரு நெகிழ்ச்சி.

இதே நடராஜ் தொழிற்சாலைக்குப் போனதும் கடமை உணர்ச்சியும், பொறுப்பும் மிகுந்த வேறு நடராஜாக மாறி விடுவான். வேலையில் மூழ்கி இருக்கும் போது வேறு எந்த நினைவுமே வராது அவனுக்கு. இயந்திரங்களோடும், லெபாரெட்டரியில் கெமிகல்களுடனும் ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்காமல் அவன் உழைக்கும்போது பார்க்கவேண்டும். எல்லாவற்றையும் முடித்துக் கொண்டு எவ்வளவு சீக்கிரம் கிளம்ப முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கிளம்பிவிட வேண்டும் என்ற வேகம் அவன் செயல்களில் பிரதிபலிக்கும்.

உடலும், உள்ளமும் சோர்ந்துபோய் மாலை, அறைக்குத் திரும்பும்போதுதான் அவனது தனிமை உணர்ச்சி அவனைக் கொல்லும். உடைகளை மாற்றிக் கொண்டு திரும்ப எங்காவது கிளம்பிச் சென்று விடுவான். இல்லாவிட்டால் அனுவிடமிருந்தும், ஆர்த்தியிடமிருந்தும் வந்த எல்லாக் கடிதங்களையும் எடுத்து வைத்துக்கொண்டு திரும்பத் திரும்பப் படித்து மகிழ்வான். சில நாட்களில் அவனுக்குத் திடீரென்று சூடாக இட்லி, சாம்பார் சாப்பிட மாட்டோமா என்றிருக்கும். கிளம்பி ஸ்ட்ராண்டிலுள்ள இந்தியா ஹவுஸிற்குப் போய் நன்றாக சாப்பிட்டு விட்டு வருவான். இல்லையென்றால் சென்னையிலிருந்து வந்து கேம்பர்லேயில் குடியேறிவிட்ட சாமிநாதன் என்பவரின் வீட்டிற்குப் போவான். அவர் மனைவி நடராஜை அன்புடன் வரவேற்று ரசம், சாம்பாருடன் விருந்து பரிமாறுவாள்.

அப்போதும் சாமிநாதனின் வீட்டிற்குப் போனால் என்ன என்று எண்ணியபடி உட்கார்ந்து கொண்டிருந்தான் அவன். ஆனால் அன்று அனுவின் கடிதம் வரும் என்ற எண்ணத்தில் அந்த நினைவை மாற்றிக் கொண்டு விட்டான். அனுவிடமிருந்து கடிதம் வந்து நான்கு நாட்களாகி விட்டன.



20212
3630303

நான்கு நாட்களும் தொழிற்சாலையிலிருந்து திரும்பியவுடன் முதலில் அவன் கடிதத்திற்காக மெயில் பாக்ஸைத் திறந்து பார்த்துவிட்டு ஏமாற்றத்தோடு அறைக்குள் நுழைந்திருக்கிறான். இன்று எப்படியும் அனுவிடமிருந்து கடிதம் வரும் என்று அவன் உள் மனம் கூறிக்கொண்டிருந்தது. அதேபோல் அவள் கடிதமும் வந்தது. அவசர அவசரமாகக் கவரைப் பிரித்தான். நான்கைந்து பக்கங்களுக்கு எழுதியிருந்தாள் அவள். நடராஜ் கட்டிலில் சரிந்து படித்துக்கொண்டே வந்தான்.

'ராஜ்...நீங்கள் அடிக்கடி கேட்பீர்களே, என் பக்கம் சேர்ந்து எனக்குப் பரிந்து பேச ஒரு ராஜாப் பயல் வேண்டும் என்று. அவனுக்கு என்ன பெயர் வைக்கலாமென்று கேட்டீர்களே, யோசியுங்கள் அவனுக்கு என்ன பெயர் வைக்கலாம்? இன்னும் எட்டு மாதங்கள் இருக்கின்றன. நிதானமாக யோசித்து அழகான பெயராகத் தேர்ந்தெடுங்கள் ராஜ்.' அதற்குமேல் ராஜாவினால் தாங்க முடியவில்லை. அவன் இதயத்தில் மகிழ்ச்சி வெள்ளமாகப் பொங்கியது.

'அனு...ஐ வாண்ட் டு ஸீ யூ தென்' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டான். இப்போது அனு எப்படி இருப்பாள்? கற்பனைப் பண்ணிப் பார்க்க முயன்றான். ஆர்த்தி வயிற்றிலிருந்தபோது அனு எப்படி இருந்தாள்? அந்தத் தாழம்பூ நிறம் இன்னும் வெளுத்திருந்தது. உடல் பூசினாற்போல் பருத்து, முகத்தின் அழகு மேலும் கூடி அப்போது அவளைப் பார்க்க வானத்திலிருந்து இறங்கி வந்த ஒரு தேவதை பூமியில் நடமாடுகிற மாதிரி இருந்தது.

''இது என்ன அனு, நீ மேலும் மேலும் இப்படி அழகாகிக் கொண்டே வருகிறாய்?'' என்று அவளைப் பார்த்துப் பிரமித்துப் போய்க் கேட்டான் நடராஜ்.

''இது என்ன கேள்வி ராஜ்? இப்போது அப்படித் தான் அழகு கூடுமாம்'' என்று நாணத்தோடு பதிலளித் தாள் அவள்.

'அப்படியா? அப்போது நீ எப்போதுமே இப்படி இரேன் அனும்மா...'' என்று கூறிவிட்டு அவளைத் தலை முதல் கால் வரை உற்றுப் பார்த்தான் ராஜா. அந்தப் பார்வையிலிருந்த வேகத்தைத் தாங்கிக்கொள்ள முடியாமல் தலை குனிந்தாள் அவள்.

இப்போதும் அனு அதேபோல் அழகாகத்தானே இருப்பாள்! தங்கத்தேர் ஒன்று வருவது போல் தளர் நடையோடு வருவாள். அந்த நினைவின் குளுமையில் நடராஜின் உள்ளம் சிலிர்த்தது. 'ஐ வாண்ட் டு பி வித் யு டார்லிங்...' ராஜா புரண்டு ஸ்டாண்ட் மீது வைத்திருந்த அவளது போட்டோவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஆர்த்தி பிறப்பதற்கு முன் எந்த வேலை இருந்தாலும் அப்படியே போட்டுவிட்டுத் தொழிற்சாலையிலிருந்து சரியாக ஆறு மணிக்கெல்லாம் வீடு திரும்பி விடுவான் அவன்.

டாக்டரின் ஆலோசனைப்படி அனுவை அவனே தினமும் வாக்கிங்கிற்கு அழைத்துப் போவான். காந்தி சிலை அருகில் உள்ளே காரை நிறுத்திவிட்டு இருவரும் மணலில் வெகுதூரம் நடந்து போய்விட்டு வருவார்கள். மூச்சிறைக்க அனு நடந்து வருவதைப் பார்க்கும்போது அவனுக்குப் பரிதாபமாக இருக்கும்.

''என்ன அனு, கஷ்டமாக இருக்கிறதா?'' என்று அவள் தோளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டே கேட்கும்போது, அன்பு ததும்பும் அந்தக் கேள்வியில் பூரித்துப் போவாள் அவள்.



''நீங்கள் கூட இருக்கும்போது எதுவுமே எனக்குக் கஷ்டமாக இருக்காது ராஜ்'' என்ற அவளது பதிலைக் கேட்டு நடராஜின் உள்ளம் குளிர்ந்து போகும். அதை யெல்லாம் நினைக்க அவன் நெஞ்சம் விம்மியது.

'இப்போது உன்னுடன் இருந்தால்? ஓ! உன்னோடு இருக்க வேண்டிய இனிமையான நாட்களையெல்லாம் இழந்து கொண்டிருக்கிறேன் நான். எனக்கு நீ வேண்டும் அனு. இப்போது இந்த நிலைமையில் உன்னை நான் பார்க்க வேண்டும். இனிமேல் உன்னைவிட்டு என்னால் இருக்கவே முடியாது அனு!' அவனையறியாமல் அவன் கண்கள் கலங்கி விட்டன. தன் கண்களிலிருந்து கண்ணீர் பெருகுவதை உணர்ந்தபோது அவனுக்கே வெட்கமாக இருந்தது. 'சீ, என்ன இது!' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, 'அனுவிற்கு டிரங்கால் போட்டு அவளைக் கன்கிராஜுலேட் பண்ணினால் என்ன' என்ற எண்ணம் தோன்றவே, உடனே ரிஸீவரைக் கையில் எடுத்தான். கால் புக் செய்துவிட்டு சீக்கிரம் லைன் கிடைக்க வேண்டுமென்று கடவுளை வேண்டிக்கொண்டு இருப்புக் கொள்ளாமல் அறையினுள் குறுக்கும் நெடுக்கு மாக நடக்கத் தொடங்கினான். ஆனால் அந்த லைன் கிடைக்க நேரமாகுமென்று ஆபரேட்டர் தன் இனிய குரலில் கூறியபோது நடராஜிற்கு எரிச்சலாக வந்தது. காலை கான்ஸல் செய்துவிட்டுக் காரை எடுத்துக்கொண்டு டெலிகிராபிக் ஆபீசுக்குப்போய் அனுவிற்கு ஒரு வாழ்த்துத் தந்தி கொடுத்தான்.

# 7

டெலிகிராபிக் ஆபீசிலிருந்து வெளியே வந்து காரில் ஏறி அமர்ந்த நடராஜ், உடனே காரை கிளப்பவில்லை. சில விநாடிகள் பேசாமல் அப்படியே உட்கார்ந்திருந் தான். கைகளை ஸ்டியரிங்கில் பதித்து முகத்தை அதில் கவிழ்த்துக் கொண்டான். என்ன என்று விவரித்து

வெளியே சொல்ல முடியாத ஓர் உணர்ச்சி அவனை வாட்டி எடுத்தது. அறைக்குப் போகப் பிடிக்கவில்லை. வேறு எங்கு போவது என்றும் தெரியவில்லை. அந்த விநாடியில் அவனையே அவனுக்குப் பிடிக்கவில்லை. தன்னைத்தானே வெறுத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தான். நெஞ்சைச் சூழ்ந்து கொண்டிருந்த ஏக்கமும், தனிமை உணர்வும் அவனையே பிழிந்து எடுத்தன. அனுவோடு இனிக்க இனிக்க கதைகள் பேசிய இன்பமயமான நாட்கள், ஆர்த்தியின் கன்னங்களில் அவன் பொழியும் அன்பு முத்தங்கள் எல்லாவற்றையும் காலம் காலமாக இழந்து நிற்பதைப்போல் இருந்தது. மனிதர்களற்ற நடுக்காட்டில் அலைந்துதிரிந்து கொண்டிருப்பதைப் போன்ற வேதனை, அப்போதே ஓடிப்போய் அனுவை ஒருதரம் ஒரே ஒருதரம் பார்த்துவிட்டு வர முடியுமானால்?

நடராஜ் பெருமூச்சு விட்டான். எத்தனை நேரம் காரில் உட்கார்ந்து இருக்க முடியும்? அந்த மனநிலையில் அப்போதைய துன்பத்திலிருந்து விடுபட அவனுக்கு ஆறுதலான ஒரு துணை தேவை. மனம் விட்டுப்பேச, வாய் விட்டுச் சிரிக்க முடிந்தால் போதும். நெஞ்சை அடைத்துக்கொண்டு இருக்கும் ஊமை வேதனையில் பாதி கரைந்துவிடும். உடனே போய் ஜெனிஃபரைப் பார்த்தால் என்ன? அந்தச் சிறுமியோடு பத்து நிமிடங்கள் விளையாடிக் கொண்டிருந்தால் தன் மனப் பாரம் ஓரளவு குறையும் என்பதை அனுபவித்து உணர்ந்திருந்த நடராஜ், உடனே ரிச்சர்டின் வீட்டிற்குப் போவது என்று முடிவு செய்து காரைக் கிளப்பினான்.

அந்த மாதிரி வெறுமை உணர்ச்சியில் தவிக்கும் போதெல்லாம் ரிச்சர்டின் வீட்டை நாடிப்போவது அவன் வழக்கமாகிவிட்டது. ''கமான் மை பாய்'' என்று உற்சாகத்தோடு வரவேற்கும் ரிச்சர்டும், 'அங்கிள்' என்று



ஓடிவந்து அவன் கழுத்தை கட்டிக்கொள்ளும் ஜெனிஃபரும் அவன் நெஞ்சத் துயரைத் தீர்க்கும் மருந்தாக இருந்தார்கள். தான் அவனுக்கு ஆறுதலளிக்கிறோம் என்பதை உணராமல் அவனோடு சிரித்துப் பேசி அவனுள்ளத்தில் தனி இடத்தைப் பிடித்துக் கொண்டுவிட்ட ஜெனிஃபரையும், தன் பேச்சு அவன் மனத்திற்கு சாந்தியளிக்கிறது என்பதை உணர்ந்து பக்குவமாகப் பேசி அவனது மன நிலையை மாற்றிவிடும் ரிச்சர்ட்-இருவரையும் சந்திக்காமல் இருந்திருந்தால் புதுத்தொழிற்சாலை எக்கேடும் கெட்டுப் போகட்டும் என்று என்றோ லண்டனைவிட்டு போயிருப்பான் அவன். அப்படி அவனைப் போக விடாமல் தடுத்து நிறுத்தி வைத்துக்கொண்டிருந்த ஒரே சக்தி அவர்கள் நட்புதான்.

எதிர்பாராமல் கிடைத்த நட்புதான் அது. ரிச்சர்டை அவன் சந்தித்ததும் எதிர்பாராத வகையில் நிகழ்ந்தது தான். ரிச்சர்டிற்கு சுமார் அறுபது வயதிருக்கும். ஆறரை அடி உயரமும், அதற்கேற்ற பருமனுமாய் கம்பீரமாக இருப்பார் அவர். வாயில் எப்போதும் ஒரு பைப் புகைந்துக் கொண்டே இருக்கும். கண்ணியமான அவரது கம்பீரத் தோற்றமும், அமைதியை வடிக்கும் சலனமற்ற ஆழமான பார்வையும், நடராஜை முதல் பார்வையிலேயே கவர்ந்து விட்டன. அவருடைய ஒரே மகன் அமெரிக்காவில் சிகாகோவில் இருக்கிறானாம். நடராஜ் அவரை பாரீஸில்தான் சந்தித்தான். 'எல்இன்கா ரெஸ்டாரெண்'டில் உட்கார்ந்து உணவருந்திக் கொண்டிருந்தபோது, எதிரே காலியாய் இருந்த நாற்காலியில் உட்கார அவன் அனுமதியைக் கேட்டார் அவர்.

''ஓ. யூ ஆர் வெல்கம்!'' என்றான் நடராஜ் புன்னகையோடு.

''தேங்க் யூ'' என்று அமர்ந்தவர் நடராஜைப் பார்த்தார்.

''யூ ஆர் ஃபிரம் இண்டியா?''

''எஸ்.''

''மகிழ்ச்சி; எனக்கு இந்தியர்களை ரொம்பப் பிடிக்கும். ஐ லைக் யுவர் ஃபிலாசஃபி. நான் நிறைய புத்தகங்கள் படித்திருக்கிறேன். ஐயாம் டாக்டர் ரிச்சர்ட்'' என்று அவனோடு கைகுலுக்கினார். நடராஜ் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டான். பேசிக் கொண்டே இருவரும் சாப்பிட்டு முடித்தார்கள். அவனது பில்லுக்கும் சேர்த்து அவர் பணம் கொடுத்தபோது ''ஓ, நோ!'' என்று தடுத்தான் நடராஜ்.

''கீப் கொயட் மை பாய்'' என்று உரிமையோடு அவனை அடக்கிவிட்டார் அவர்.

''பாரீஸில் இன்னும் இரண்டு நாட்கள் தங்கி இருப்பேன். வேர்ல்ட் டாக்டர்ஸ் கான்ஃபிரன்ஸ் ஒன்று நடக்கிறது. அதற்காக வந்தேன். வியாழக்கிழமையன்று லண்டனுக்கு வந்துவிடுவேன். வந்ததும் உனக்குப் போன் செய்கிறேன். நீ கட்டாயம் என் வீட்டிற்கு வரவேண்டும். என் மனைவி உன்னைப் பார்த்தால் மிகவும் சந்தோஷப்படுவாள். நீ என் மகன் மார்ஷலை நினைவுபடுத்துகிறாய்'' என்றார் அவர்.

வியாழக்கிழமையன்று தொழிற்சாலையிலிருந்து திரும்பியதும் நடராஜ் அவருக்குப் போன் செய்துவிட்டு அங்கு போனான். 'ஹைஸ்ட்ரீட்'டில் நர்சிங் ஹோமிற்கு மேலேயே சின்ன அபார்ட்மெண்டில் இருந்தார் அவர். நடராஜ் போனபோது அவனுக்காக வாசலிலேயே காத்துக் கொண்டிருந்தார் ரிச்சர்ட். அவரோடு அவர் கரத்தைப் பிடித்துக் கொண்டு ஒரு சிறுமி நின்றிருந்தாள்.



அவளைப் பார்த்ததும் பளிச்சென்று மின்னல் மாதிரி ஆர்த்தியின் நினைவு அவன் நெஞ்சில் பளிச்சிட்டது. அதே உயரம், அதே பருமன், தோள்வரை பாப்செய்யப்பட்டு வழியும் கூந்தல். அதே மாதிரி அகலமான, அழகான கண்கள். ஆனால் ஆர்த்தியைப் போல் கருமையான கோலிக்குண்டு விழிகளில்லை. நீலநிறப் பளிங்குக் கல்லை உருட்டி வைத்தாற் போன்ற விழிகள்.

''கமான் மை பாய்'' என்று உற்சாகத்தோடு ரிச்சர்ட் அழைத்தபோதும் அந்த சிறுமியை விட்டுத் தன் பார்வையை அகற்றாமல் 'ஹலோ' என்றான் பதிலுக்கு. அவனை உள்ளே அழைத்துப்போய் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவர்களோடு பேசிக் கொண்டிருந்தாலும் அவன் பார்வை நொடிக்கு ஒருதரம் அந்தச் சிறுமியின்மீது தாவியது. சோபாவில் ஓர் ஓரத்தில் உட்கார்ந்து அவனைப் பார்ப்பதும், பின் தலையைக் கவிழ்த்துக் கொள்வதுமாக இருந்தாள் அவள். நடராஜ் புன்னகையோடு அந்தச் சிறுமியின் அருகே போய் உட்கார்ந்து அவள் கரத்தைப்பற்றி, முகத்தை நிமிர்த்தி, ''வாட் ஈஸ் யுவர் நேம் பேபி?'' என்று மெதுவாகக் கேட்டான்.

''ஜெனிஃபர்....ஜென்னி...'' என்று அவள் புன்னகை செய்தபோது அந்தப் புன்னகைகூட ஆர்த்தி மாதிரியே இருப்பதைக் கவனித்தான் நடராஜ். உடனே அவளை அப்படியே அள்ளி அணைத்துக்கொள்ள வேண்டும்போல் இருந்தது அவனுக்கு. குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டான்.

''ஓ, இவளை நான் அறிமுகப்படுத்தவே இல்லையே நடராஜ். இவள் என் பேத்தி,'' என்றார் ரிச்சர்ட்.

''உங்கள் பிள்ளையின் மகளா?''

''இல்லை, என் மகளின் பெண்.''

பாரீஸில் அவரை முதன் முதலாகச் சந்தித்தபோது அவர் "எனக்கு ஒரே பையன் தான். அவனும் சிகாகோவில் இருக்கிறான்" என்று கூறியது நினைவிற்கு வந்தது நடராஜிற்கு. இப்போது 'பெண்ணின் மகள்' என்கிறாரே என்ற குழப்பத்தோடு அவரைப் பார்த்தபோது அவர் மனைவி சிரித்துக்கொண்டே, "என்ன அப்படி பார்க்கிறீர்கள்? சொந்தப் பெண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லையே. ஜெனிஃபரின் தாய் எலைன் எங்கள் வயிற்றில் பிறக்காத பெண். ஒரு பெண்ணில்லை என்ற எங்கள் குறையைத் தீர்த்துவைத்தவள், அவள்தான்" என்று விளக்கினார்.

"ஓ" என்ற நடராஜ் ஜெனிஃபரைப் பார்த்து "ஸ்வீட் கேர்ல்" என்றான்.

"அழகு மட்டுமில்லை. மிகவும் கெட்டிக்காரியும் கூட" என்றார் ரிச்சர்ட்.

ஜெனிஃபர் நாணத்துடன் கூடிய புன்னகையோடு தலையைக் கவிழ்த்துக் கொண்டாள்.

பத்து நிமிடங்களுக்குள் ஜென்னி 'அங்கிள், அங்கிள்' என்று நடராஜிடம் நன்றாக ஒட்டிக்கொண்டு விட்டாள். அவள் தன் பள்ளியைப் பற்றிக் கூறினாள். அவளோடு பந்து விளையாடினான். அப்புறம் நடராஜ் அவளை தன் மடியில் தூக்கி வைத்துக்கொண்டு அவளது பொன்னிறக் கூந்தலை வருடிக்கொண்டே ஒரு கதை சொன்னான். அவள் இந்தியாவைப் பற்றியெல்லாம் கேட்டாள். அவளது கேள்விகளுக்கு அழகாகப் பதிலளித்தான் நடராஜ். அவளோடு அந்த வீட்டிலிருந்த சில மணி நேரங்களை இனிமையாகக் கழித்தான் நடராஜ். சென்னையில் அனுவோடும், ஆர்த்தியுடனும் ஒவ்வொரு நாளையும் இதே மாதிரிதானே கழிப்போம்' என்று எண்ணிக் கொண்டான் அவன்.



விடைபெற்றுக் கிளம்பியபோது ஜெனிஃபரின் கன்னங்களில் குனிந்து முத்தமிட்டான்.

"டோண்ட் யூ கிஸ் மி டார்லிங்?" என்று கேட்டபோது ஜெனிஃபர் அவனது இரண்டு கன்னங்களிலும், நெற்றியிலும், பின் உதட்டிலும் அழுத்தி முத்தமிட்டாள். ஆர்த்தியும் அதே மாதிரித்தான் அவனுக்கு முத்தமிடுவாள். கடைசியாக ஏர்போர்ட்டில் "என்னை விட்டுட்டுப் போறியாப்பா?" என்று கண்கலங்கக் கேட்டாளே. அப்போதும் அதே மாதிரிதான் முத்தமிட்டாள். ஜெனிஃபரின் முகத்தில் அவளது மொத்த உருவத்தில் அங்க அசைவுகளில், செய்கைகளில் ஆர்த்தியையே நேரில் பார்ப்பதைப்போல் இருந்தது நடராஜிற்கு.

அதன்பின் நடராஜ் அவளுக்காகவே அடிக்கடி ரிச்சர்டின் வீட்டிற்குப் போனான். ஆர்த்தியைப் பார்க்க முடியாத ஏக்கத்தையெல்லாம் ஜெனிஃபரைப் பார்ப்பதில் தீர்த்துக்கொண்டான். அவளோடு விளையாடுவதில், அவளை அணைத்துக்கொண்டு பேசுவதில் அவன் மனத்தில் சொல்ல முடியாத ஓர் அமைதி ஏற்பட்டது. அவனுக்கு அவள் மீதிருந்த பாசத்தைக் கண்ட ரிச்சர்ட் ஒருநாள், "நடராஜ், உனக்கு அவள் மீதிருக்கும் பாசத்தையும், அன்பையும் பார்க்கும்போது எனக்கு அவள் தந்தை வியாவின் ஞாபகம்தான் வருகிறது. அவனுக்கு இவர்களோடு வாழக் கொடுத்து வைக்கவில்லை. இவளையும் எலைனையும் விட்டு விட்டு வேறு ஒரு பெண்ணோடு வாழ அவனுக்கு எப்படி மனம் வந்ததோ தெரியவில்லை" என்றார்.

ஜெனிஃபர், தந்தையின் அன்பைக் கண்டே அறியாதவள் என்று தெரிந்துகொண்டதிலிருந்து அவள்மீது அவனுக்கு இருந்த பாசம் இரண்டு மடங்காயிற்று. ஆர்த்தியைப் பார்க்க வேண்டுமென்ற நினைவு தோன்றும் போதெல்லாம் தன் வீட்டு நினைவை மறக்க அவன்

ஜெனிஃபரைத் தேடிக்கொண்டு ரிச்சர்டின் வீட்டிற்குத் தான் போவான்.

பெரும்பாலும் மாலை நேரங்களில் ஜெனிஃபர் ரிச்சர்டின் வீட்டில்தான் இருப்பாள். சில நாட்களில் இரவு கூட அங்கேயே தங்கிவிடுவாள். ரிச்சர்ட் அவள் தாய்க்குப் போன் பண்ணித் தெரிவித்து விடுவார். அநேகமாக எல்லா மாலைப் பொழுதிலும் நடராஜ் ஜெனிஃபரை அழைத்துக் கொண்டு எங்காவது போய் வருவான். ரிச்சர்டை சந்தித்ததிலிருந்து நடராஜை அவ்வளவாகத் தனிமை உணர்வு வாட்டவில்லை. ஒவ்வொரு வார இறுதியையும் அவர்களுடனேயே கழிக்கலானான். அவன் எல்லோருமாகச் சேர்ந்து எங்காவது பிக்னிக் போவார்கள். அநேகமாக ஜெனிஃபரும் கூட வருவாள். அவள் வராமற் போக நேரும் சமயங்களில் நடராஜிற்கு ஏதோ மாதிரியாக இருக்கும். ரிச்சர்டும் அவர் மனைவியும் தங்கள் வயதையும் மறந்து உல்லாசமாகச் சிரித்துப் பேசிக்கொண்டிருப்பதைப் பார்க்கும் போதெல்லாம் அனுவின் நினைவு தானாக அவன் மனதில் படரும்.

அதைத் தூண்டி விடுகிறார்போல, "இங்கெல்லாம் இப்படித் தனியாக வரக்கூடாது மை பாய்!" என்று கூறி விட்டுக் குறும்பாகக் கண் சிமிட்டுவார் அவர். அது உண்மைதான் என்று நினைத்துக் கொள்வான் நடராஜ். அதன்பின் அவன் மனத்தில் தோன்றும் ஏக்கத்தை உணர்ந்து அதைப் போக்க ஏதேதோ பேசி அவன் மனநிலையை மாற்றிவிடுவார் ரிச்சர்ட். அதனால் தன் மனம் சரியில்லாதபோது அவரைத் தேடிக்கொண்டு போவது நடராஜின் வழக்கமாகி விட்டது.

அவன் போனபோது அங்கு ஜென்னியைக் காண வில்லை. 'இன்று அவள் வரவில்லை போலிருக்கிறது' என்று நினைத்துக்கொண்டே உள்ளே நுழைந்தான்.



ரிச்சர்ட் ஏதோ புத்தகத்தை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். வாயில் வழக்கம்போல் பைப். அவனைக் கண்டதும், உற்சாகத்துடன் வரவேற்றார்.

நடராஜ் சிரித்துக் கொண்டே அருகில் போய் உட்கார்ந்தான்.

"ஜென்னி வரவில்லையா இன்று?"

"நேற்றிலிருந்து ஜென்னி வரவேயில்லை. என்ன காரணம் என்று தெரியவில்லை. போன் பண்ணிக் கேட்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டே வேலைகளுக்கிடையே மறந்து போகிறேன்" என்று அவர் கூறிவிட்டு, "என்ன டிரிங்க் கொண்டுவரச் சொல்லட்டும்?" என்று கேட்டார். நடராஜ் பதிலளிப்பதற்குள் டெலிபோன் மணி ஒலித்தது. நடராஜைப் பார்த்து "ஒன் மினிட்" என்று கூறிவிட்டு ரிஸீவரை எடுத்தார் ரிச்சர்ட். டெலிபோனில் பேசிய அந்தக் குரலைக் கேட்டதும் அவர் முகபாவம் மாறிவிட்டது. அதில் சற்று முன்பிருந்த உற்சாகத்தைக் காணவில்லை. ஆழமான ஒரு வருத்தம் படர்ந்தது.

"அப்படியா ஜென்னி! எப்போது? இப்போதுதான் நீ பார்த்தாயா? ஓ! பயப்படாதே. நான் இதோ வருகிறேன்' என்று கூறி ரிஸீவரை வைத்துவிட்டு ஒரு நீண்ட பெருமூச்சுவிட்டார் அவர்.

ஜென்னியிடமிருந்து போன் என்றதும் நடராஜ் பதறிப் போனான்.

"என்ன சார், என்ன?"

"ஒன்றுமில்லை நடராஜ். எலைன் அதிகமாகக் குடித்து விட்டு பேச்சு மூச்சற்று விழுந்து கிடக்கிறாளாம். ஜெனிஃபர் பயந்து போய் உடனே கிளம்பிவரச் சொல்

போன் செய்தான். ரிச்சர்ட் தன் கிட்டை எடுத்துக் கொண்டு கிளம்பினார். அவர் சொன்னதைக் கேட்டுக் கொண்டே உள்ளேயிருந்து வந்த அவர் மனைவி, "ஓ, காட், எலைனுக்கு இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருக்க வேண்டாம்" என்று வருத்தப்பட்டாள்.

இதுவரை நடராஜ் எலைனைப் பார்த்ததில்லை. 'தினமும் ஜெனிஃபர் மட்டும் வருகிறாளே, ஏன் அவள் தாயார் ஒருநாள் கூட ரிச்சர்ட் வீட்டிற்கு வருவதில்லை? ரிச்சர்டும் அவர் மனைவியும் வயிற்றில் பிறக்காத பெண் எலைன் என்றார்கள். அவளோ இவர்களை வந்துகூடப் பார்ப்பதில்லையே' என்று நினைத்துக்கொள்வானே தவிர கேட்டதில்லை அவன். இப்போது அந்தச் செய்தியைக் கேட்டதும் ஜெனிஃபர் தனியாக எப்படித் தவிக்கிறாளோ என்ற எண்ணம் தோன்றியது. அந்த நீல நிற விழிகள் நீரில் மிதப்பதைக் கற்பனை கூடச் செய்து பார்க்க முடியவில்லை அவனால். தன் மனத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் நானும் கூட வரட்டுமா?" என்று ரிச்சர்டை கேட்டான் அவன்.

"ஓ வாங்களேன்!" என்றார் அவர்.

காரில் போகும்போது ரிச்சர்ட் சில விநாடிகள் ஒன்றுமே பேசவில்லை. ஏதோ ஆழமான சிந்தனையில் மூழ்கிவிட்டதைப் போல் தோற்றமளித்தது அவர் முகம். அவரது எண்ணங்களின் ஓட்டத்தைத் தடை செய்ய விருப்பப்படாமல் நடராஜும் அமைதியாகவே இருந்தான். திடீரென்று "இந்த உலகத்திலுள்ள முக்கால்வாசி துன்பங்களுக்கும் அடிப்படைக் காரணம் அன்புதான் என்று நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய், மை பாய்?" என்று ஓர் ஆழமான பெருமூச்சோடு அவர் கேட்டபோது, அது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டாலும் எதற்காக திடீரென்று இப்படி கேட்கிறார் என்பது புரியாமல் அவரைப் பார்த்தான் அவன்.



"இந்தப் பெண் எலைன் எப்படி இருந்தாள் தெரியுமா? ஆறு வருடங்களுக்கு முன் முதன் முதலாக டி.வியில் மாடல் பெண்ணாகத் தோன்றும்போது செடியில் அழகாகப் பூத்துப் பெரிதாக மலர்ந்திருக்கும் ஒரு மலரைப் பார்த்திருக்கிறாயா நீ? அதே மாதிரி, தந்தத்தில் செதுக்கி எடுத்த சிற்பத்திற்கு உயிர் கொடுத்ததைப்போல் அவ்வளவு அழகு, நடராஜ்; டி.வியில் அவளைப் பார்த்தவர்கள் ஒரு கனவுலகப் பெண் என்றுதான் நினைத்தார்கள். அவளை மாடலாக அமர்த்த எத்தனை போட்டி, பொறாமைகள் தெரியுமா? அப்போதைய 'சென்ஸேஷனல் டாக்' எலைனைப் பற்றிதான். அவளைப் பற்றிப் பேசாத இடம் இல்லை; அவள் அழகைப் புகழாத ஆள் இல்லை. 'ஏஞ்ஜல் கேர்ல்' என்று கூறப்பட்ட அவள் இப்போது எப்படி ஆகிவிட்டாள் தெரியுமா நடராஜ்? பாட்டில் பாட்டிலாகக் குடி; கையில் அணைக்கப் படாமல் எப்போதும் எரிந்துகொண்டிருக்கும் சிகரெட்-இவற்றோடு அறையோடு அறையாக அடைந்து, குமுறிக் கொண்டு, தனக்குத்தானே கண்ணீர் வற்றும்படி அழுது கொண்டு—ஓ! இட்ஸ் எ பிட்டி நடராஜ்..." அவரது குரலில் தொனித்த வேதனையைப் புரிந்துகொண்ட நடராஜ், அவர் முகத்தை நிமிர்ந்து பார்த்தான், அவர் குரலில் இருந்த வேதனையை விட இரண்டு மடங்கு வேதனையைக் கொட்டியது அந்த முகம். அவரோ அவனைத் திரும்பிக்கூடப் பார்க்காமல் மேலே பேசிக் கொண்டே போனார்:

"சாப்பாடு, தூக்கம் எல்லாவற்றையும் மறந்ததோடு கூடத் தனக்கு ஐந்து வயதில் ஒரு பெண் இருக்கிறாள், வாழ்க்கை என்ற ஒன்று இருக்கிறது. உலகம் என்ற ஒன்று இருக்கிறது என்பதையெல்லாம்கூட மறந்துவிட்டாள் அவள். அவளுடைய வாழ்க்கை, அவளுடைய உலகம் எல்லாம் அந்த லியான் ஒருவனுடனேயே முடிந்து விட்டது என்று நினைத்துக்கொண்டு தன்னைத்தானே

வதைத்துக்கொண்டிருக்கிறாள். லியான் மட்டும் அவள் வாழ்வில் குறுக்கிடாமல் இருந்திருந்தால் இப்போது அவள் எப்படியோ இருந்திருப்பாள்'' என்று ஆழமாக பெரு மூச்சு விட்டார் அவர்.

''யார் அந்த லியான்?'' என்று கேட்டான் நடராஜ்.

''அவன் புகழ் பெற்ற கார் ரேஸ் சாம்பியன். எலைனை, டி.வியில் பார்த்துவிட்டுத் தானே நேரில் வந்து அவளைச் சந்தித்திருக்கிறான். அந்தச் சந்திப்புகள் வளர வளர அவர்களுக்கிடையே இருந்த நெருக்கமும் வளரலா யிற்று. எலைன் அவன்மீது உயிரையே வைத்திருந்தாள். அவனைப் பற்றி யாரிடமாவது பேசினால்கூட அந்தப் பேச்சில், அந்தப் பார்வையின் பளபளப்பில் அவன் மீது அவள் வைத்திருந்த அன்பின் ஆழம் நன்றாகப் புலப்படும். கடைசியில் ஜெனிஃபர் வயிற்றில் உதித்தபோது லியானிடம் தன்னைத் திருமணம் செய்து கொள்ள சொல்லிக் கேட்டிருக்கிறாள். அவனோ இதோ, அதோ என்று நாட்களைக் கடத்திக்கொண்டே வந்து கடைசி யில் முன்னுக்கு வந்துகொண்டிருந்த ஒரு நடிகையைத் திருமணம் செய்துகொண்டுவிட்டான். பத்திரிகைகளில் வந்த அந்தச் செய்தியையும், படத்தையும் பார்த்துவிட்டு அவள் குமுறிய குமுறல் இருக்கிறதே...''

''ஓ காட்...என்னாலேயே அதை இன்னும் மறக்க முடியவில்லை நடராஜ். அவளால் எப்படி மறக்க முடியும்? அவனை மறக்க அவள் குடிக்கத் தொடங்கி னாள், கடைசியில் குடியில் தன்னையே மறந்துவிட்டாள். ஜென்னியைக் கவனிப்பதில்லை; தன் உடல் நிலையைக் கவனிப்பதில்லை. வேறு எதையும் கவனிப்பதில்லை. எல்லாராலும் கனவுப் பெண் என்று போற்றப்பட்டவள் தனக்கென ஒரு கனவுலகை ஏற்படுத்திக் கொண்டு அதிலேயே தன்னை மறந்து வாழலானாள். அப்படிப் பட்டவளை டி.வியும், உலகமும் கொஞ்சம் கொஞ்சமாக



மறந்து, இப்போது ஒரேயடியாக மறந்தும்போய் விட்டது. ஆனால் அவள் மட்டும் அந்த லியானை மறக்க வில்லை. சில நாட்களாகப் போதை மருந்துகளை வேறு பழக்கம் பண்ணிக்கொண்டிருக்கிறாள். அடிக்கடி இப்படி குடித்துவிட்டு விழுந்துவிடுகிறாள்; அல்லது ஓவர்டோஸ் போதை மருந்தை ஏற்றிக்கொண்டு நினைவு இழந்து விடுகிறாள். பாவம்! தந்தையின் அன்போ, தாயின் ஆதரவோ இல்லாமல் ஜெனிஃபர்தான் அநாதை மாதிரி அலைகிறாள். அவளைப் பார்க்கும்போதெல்லாம் என் நெஞ்சம் நெகிழ்ந்து போகிறது, நடராஜ்! சின்னஞ்சிறு பெண் தன் மன ஏக்கத்தைக் காட்டும் வழிதெரியாமல் தவிப்பதைப் பார்க்கும்போது பரிதாபமாக இருக்கிறது. அதனால் தான் யாராவது அவளிடம் கொஞ்சம் அன்பு காட்டினால்கூட ஒட்டிக்கொண்டு விடுகிறாள். உன்னிடம் ஜென்னி வைத்திருக்கும் பாசத்திற்கு அளவே இல்லை நடராஜ். ஒருநாள் நீ அவளோடு விளையாடிவிட்டுப் போனதும், 'அங்கிள், டாடிகூட இப்படித்தான் இருப் பாரா?' என்று கேட்டாள். உன்னைப் பார்க்கும் போதெல்லாம் அவளுக்குத் தன் தந்தையைப் பார்க்கும் உணர்ச்சி தோன்றுகிறதாம். அந்தப் பெண்ணிற் காகவாவது எலைன், லியானை மறந்து வாழ வேண்டும் என்று நானும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்து விட்டேன். ஊஹூம், முடியவில்லை. அவளை நினைத் தாலும் பரிதாபமாகத்தான் இருக்கிறது. ஒரு நல்ல பெண்ணின் வாழ்க்கையோடு ஆண்டவன் இப்படி விளையாடி' இருக்கவேண்டாம். அழகை 'அள்ளிக் கொடுத்துவிட்டு இந்த மாதிரிக் கொடுமை செய்திருக்க வேண்டாம்.''—இயந்திரமாக அவர் கை, காரை ஒரு வீட்டின் முன் நிறுத்தியது.

எலைனின் அபார்ட்மெண்டை அடைந்தபோது ஜெனிஃபர் வாசலிலேயே நின்று கொண்டிருந்தாள். அவர்களைப் பார்த்ததும் 'அங்கிள்' என்று விசும்பிக்

கொண்டே ஓடிவந்து நடராஜின் கால்களைக் கட்டிக் கொண்டாள். குனிந்து அவளை அள்ளி அணைத்துக் கொண்டான் நடராஜ்.

''அழாதே ஜென், அழாதேயம்மா'' என்று அவள் கண்களைத் துடைத்துவிட்டுக் கொண்டே ரிச்சர்டின் பின்னாலேயே ஹாலுக்குள் நுழைந்தான்.

அலங்கோலமாகக் கிடந்தது அந்த ஹால். தரையில் இறைந்து கிடந்த சிகரெட் துண்டுகள், ஒரு மூலையில் உருண்டு கிடந்த காலி ஸ்காட்ச் பாட்டில், இன்னொரு பக்கத்தில் ஒரு தம்ளர். இவற்றின் நடுவே தன்நினைவே இல்லாமல் தரையில் விழுந்து கிடந்தாள் எலைன்.

நடராஜ் அவளையே பார்த்தான். கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருந்தான். இதுவரை எத்தனையோ அழகான பெண்களைப் பார்த்திருக்கிறான் அவன். ஆனால் அவர்களில் ஒருத்திகூட, அவன் மனத்தைச் சலனப்படுத்தியதில்லை. 'இவர்கள் எத்தனை அழகாக இருந்தாலும் என் அனுவின் முகத்தில் இருக்கும் தெய்விகக் களை யாருக்கு வரும்?' என்று அலட்சியமாக நினைத்திருக்கிறான். காரில் வரும்போது ரிச்சர்ட் 'எலைன் தந்தச் சிலைமாதிரி இருப்பாள். பூத்துப் பெரிதாக மலர்ந்திருக்கும் மலராகத் தோற்றமளிப்பாள்' என்றெல்லாம் கூறியபோது கூட அப்படி என்ன அழகாக இருக்கப் போகிறாள்? என் அனுவை இவர் பார்த்தால் இன்னும் எப்படிப் புகழ்வாரோ?' என்று நினைத்தான் அவன். ஆனால் இப்போது பளிங்குச் சிலை ஒன்றைக் கீழ் கிடத்தினாற் போல் விழுந்து கிடக்கும் இந்த எலைன்?

அவள் முகத்தையும், உடலையும் விட்டுத் தன் கண்களை அகற்றவேயில்லை நடராஜ்.



தன் 'கிட்'டைக் கீழே வைத்துவிட்டு எலைனைப் பரிசோதித்தார் ரிச்சர்ட், ''ஜென், ஒரு குவளையில் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவாம்மா...'' என்றார்.

நடராஜ், ஜெனிஃபரைக் கீழே இறக்கிவிட்டான். ஜென்னி உள்ளே ஓடிப்போய் ஒரு குவளை நிறையத் தண்ணீர் கொண்டு வந்தாள். அதை வாங்கித் தன் கைகளில் ஊற்றி எலைனின் முகத்தில் பளீரென்று நீரால் அடித்தார். அப்படி மூன்று நான்கு முறை அடித்ததும் எலைன் இலேசாக முனகியபடி தலையை மட்டும் அசைத்தாள். எலைனின் விழிகள் மெல்லத் திறந்தன. புருவங்களைச் சுருக்கிக் கொண்டு ரிச்சர்டைப் பார்த்தாள். ஆழமான இரண்டு நீல நிற ஏரிகளைப் போலிருந்த அந்த விழிகள் திரும்ப அசதியோடு மூடிக்கொண்டு விட்டன. அதற்குள் ஜெனிஃபர் கொண்டு வந்து கொடுத்த டவலால் எலைனின் முகத்தைத் துடைத்துப் பரிவோடு அவள் கூந்தலை ஒதுக்கிவிட்டார்.

'எலைன்...ஸீ ஹியர் எலைன்...'' என்று அவள் தோளைப் பிடித்து மெதுவாக உலுக்கியதும் அவள் கண்களை நன்றாகத் திறந்து அவரைப் பார்த்தபோது அந்த விழிகள் குளங்களாக மாறி இருந்தன. இதழ்கள் காற்றில் அகப்பட்டு ஆடும் ரோஜா மலராகத் துடித்தன. விழிகளில் ததும்பிய நீர் ஓரங்களில் ஆறாகப் பெருகி ஓடியது.

''அழாதே எலைன். ப்ளீஸ் கெட் அப்...'' என்று அவளை அணைத்து எழுப்ப முயன்றார். நிற்க முடியாமல் தள்ளாடின அவள் கால்கள். ரிச்சர்ட் தன்னோடு சேர்த்து அவளை அணைத்துக் கொண்டு அவளது அறைக்கு அழைத்துக் கொண்டு போனார். போகும்போது குழந்தை மாதிரி அவரது தோளில்

முகத்தைப் புதைத்துக் கொண்டு வாய்விட்டுக் கதறினாள் அவள். அவரது அணைப்பிலிருந்த அந்தக் கொடி போன்ற உடல் குலுங்கியது. உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து கிளம்பி வெளிப்பட்ட கேவல்களின் நடுவே "ஐ வாண்ட் டு டை...ப்ளீஸ் கிவ் மீ சம்திங் டாக்டர்...ஐ டோண்ட்வாண்ட் டு லிவ் எனிமோர்" என்று குரல் உடைந்து சிதற சொற்கள் உருத்தெரியாமல் அவளிடமிருந்து வெளி வந்தபோது,

"அமைதியாக இருக்கமாட்டாயா எலைன்? என்று ஒரு குழந்தையைக் கண்டிப்பதுபோல் பாசம் ததும்பும் குரலில் கண்டித்து அவளை அடக்கிப் படுக்கையில் படுக்க வைத்தார். நிம்மதியாகச் சற்று நேரம் தூங்க வைக்க ஓர் இன்ஜெக்ஷனை செலுத்திவிட்டு, "தூங்கு எலைன், நான் திரும்ப நாளை வந்து பார்க்கிறேன்" என்று பரிவோடு கூறினார் அவர். அவளது விம்மல்களின் வேகம் மெதுவாகக் குறைந்துக் கொண்டே வந்து மெதுவாக அடங்கிப் போயிற்று.

அந்த அறையை விட்டு வெளியே வந்த நடராஜின் மனம் மிகவும் கனத்தது. எலைனின் விம்மல்கள் அவன் நெஞ்சில் வேல்களாகப் பாய்ந்து இன்னும் வலித்துக் கொண்டிருந்தது. அந்த முகம், தடாகம் போலிருந்த விழிகள், கவர்ச்சிகரமான உடல்... 'இவளை ஏமாற்றி விட்டுப் போக அந்த லியானுக்கு எப்படி மனம் வந்தது? செடியில் மலர்ந்து அழகாகக் கண்ணைப் பறிக்கும் ஒரு மலரைப் பறித்துக் கசக்கி எறிய எப்படி மனம் துணிந்தது அவனுக்கு? இந்த மனத்தை நோகடிக்கும் சக்தி ஒருவனுக்கு எங்கிருந்து வர முடியும்? என்று எண்ணியது அவன் மனம்.

"அங்கிள்... மம்மிக்கு ஒன்றும் இருக்காதே..." என்று கன்னங்களில் கோடுகளாக வழியும் கண்ணீரோடு அவனை நிமிர்ந்து பார்த்து ஜெனிஃபர் கேட்டபோது



அதற்கு மேல் தாங்க முடியவில்லை நடராஜினால், அவளை அருகே இழுத்து இறுக அணைத்துக் கொண்டான்.

"மம்மிக்கு ஒன்றுமில்லை. காலையில் எல்லாம் சரியாகி விடும். அழாதே டார்லிங், அழாதே ஜென்னி..." என்று அவள் கண்ணீரைத் துடைத்த நடராஜின் கண்களும் கலங்கி விட்டன.

## 8

எலைனின் அபார்ட்மெண்டிலிருந்து தன் அறைக்குத் திரும்பிய நடராஜின் மனதில் அமைதியில்லை. குழம்பிப் போயிருந்த தன் மனத்திற்கு அமைதியை தேடித்தான் அவன் ரிச்சர்டின் வீட்டிற்குப் போனான். அவரோ எலைனின் வீட்டிற்கு அவனை அழைத்துப்போய் அவனது மனப்பாரத்தை இரண்டு மடங்காக்கி விட்டார். நடராஜ் மிகவும் மென்மையான மனம் படைத்தவன். உருக்கமான திரைப்படங்களைக்கூடப் பார்க்க முடியாது அவனால். அப்படிப்பட்ட படமாக இருந்தால் அவன்போகவே மாட்டான். அப்படியே அனுவிற்காகப் போனாலும் பாதியில் எழுந்து வந்துவிடுவான்.

"என்ன ராஜ், சினிமாதானே! இதற்குப் போய் இப்படி உணர்ச்சி வசப்படுகிறீர்களே?" என்று கேட்பாள் அனு.

"இந்த மாதிரிக் கஷ்டங்களையும், உருக்கத்தையும் என்னால் பார்த்துச் சகித்துக்கொள்ள முடியாது அனு. இட் "மேக்ஸ் மை ஹார்ட் ஸோ ஹெவி" என்று பதிலளிப்பான். அவன் மனம் தாங்காது. யாராவது கண்ணீர் விட்டால் அவன் பாகாக உருகிக் கரைந்துவிடும்

அவ்வளவு இளகிய மனம் படைத்தவன், எலைனைக் கண்டதிலிருந்து 'பாவம் எலைன்' என்று ஓராயிரம் முறைகள் தனக்குள் கூறிக்கொண்டு விட்டான். பளிங்குச் சிலையைப் போலிருந்த அவளது எழிலுருவமும், 'அங்கிள் மம்மிக்கு ஒன்றுமிருக்காதே' என்று கேட்டு அவன் தோளில் முகத்தைப் புதைத்து கொண்டு கண்ணீர்விட்ட ஜெனிஃபரும் திரும்பத் திரும்ப அவன் நினைவைச் சுற்றி வட்டமிட்டனர்.

ஓ! இந்த உலகத்தில் எத்தனைவிதமான துயரங்கள்'' என்று வேதனையோடு முக்கிய அந்த விநாடியில் அவனுக்கு எல்லாமே கசந்து போயிற்று. வாழ்க்கையில் எதுவுமே நிலையில்லாதது என்று சலிப்போடு நினைத்துக்கொண்டான் அவன்.

அனுவை விட்டுப் பிரிந்து வந்து முழுசாக மூன்று மாதங்கள் கூட ஆகவில்லை. அதற்குள் 'எப்போது வருவீர்கள் ராஜ்?'' என்று கேட்டு எத்தனை கடிதங்கள் எழுதி விட்டாள் அவள். உள்மனத்தின் ஏக்கங்களையும், தாபங்களையும் ஒவ்வொரு கடிதத்திலும் எப்படிக் கொட்டுகிறாள்! அவளைப் பார்க்கவேண்டுமென்று நானும்தான் எப்படித் தவிக்கின்றேன்! இத்தனைக்கும் இந்தப் பிரிவு தற்காலிகமானதுதான், தற்காலிகமான இந்தப் பிரிவிற்கே அனு இப்படித் தவித்துப் போவாளானால், அனுவைப் போன்ற ஒரு பெண் தானே எலைன்? அவளுக்கும் அனுவின் வயதுதான் இருக்கும் அல்லது ஓரிரு வருடங்கள் சின்னவளாக இருப்பாள். கவர்ச்சிகரமான அவளது முகம், திரும்ப நடராஜின் நினைவை நிறைந்தது. இப்போதே இவ்வளவு அழகாக இவ்வளவு இளமையாக இருப்பாளானால், லியான், அவளை முதன் முதலாகச் சந்தித்தபோது அவள் எப்படி இருந்திருப்பாள்? அவன், அவளை விட்டுப் பிரிந்தபோது எப்படித் துடித்திருப்பான்? அந்த மனம் எவ்வளவு பாடுபட்டிருந்தால் இந்த மாதிரி



ஒரு நிலைமைக்கு வந்திருப்பான்! இவளைப் போன்ற ஒரு பெண்ணின் அழகே சலித்துவிடக் கூடுமானால் அந்த லியான்! எப்படிப்பட்டவனாக இருப்பான்?'

'ஐ வாண்ட்டு டை' என்று குமுறிய அவள் குரல் அவன் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருந்தது. அவனுக்காக இந்த உலகத்தையே வெறுத்து ஒதுக்கிவிட்டு, சாகத் துடிக்கும்படி அந்த லியானிடம் என்ன சக்தி இருக்கக்கூடும் என்று யோசித்தான் நடராஜ்.

எலைனைப் போன்று அழகு, இளமை எல்லாம் நிறைந்த ஒரு பெண்ணிற்கு வாழ்க்கை ஒரு பிரச்னையே இல்லை. அதிகக் கட்டுப்பாடு இல்லாமல் சுதந்திரமாக இருக்கும் ஒரு நாட்டில் தன்னை வேண்டாம் என்று உதறி விட்டுப் போன ஒருவனை நினைத்துக்கொண்டு தன் வாழ்க்கையைப் பாழாக்கிக் கொள்வதோடு மட்டுமில்லாமல், தன் வயிற்றில் பிறந்த ஒரு சின்னஞ்சிறு பெண்ணின் மனத்தையும் ஏன் அவள் பாலைவனமாக்க வேண்டும்? தந்தையின் அன்பையோ, தாயின் பாசத்தையோ அறியாத அந்தச் சிறுமியை நினைத்துக் கொண்டபோது அவன் நெஞ்சம் வேதனையால் வெடித்தது. தன்னைப் பற்றியும், தன் துயரத்தைப் பற்றியும் மட்டுமே பெரிதாக நினைத்து உருகும் எலைன் ஒரு விநாடி, ஒரே ஒரு விநாடி ஜெனிஃபரைப் பற்றி நினைப்பாளானால் அந்தப் பிஞ்சு நெஞ்சில் ஓடும் எண்ணங்களையும், ஏக்கங்களையும் புரிந்து கொள்ளுவாளானால் நிச்சயம் தான் போகும் அந்தப் பாதையை மாற்றிக் கொண்டுவிடுவாள் என்று நம்பினான் நடராஜ்.

முதன் முதலாக ஜென்னியைப் பார்த்ததிலிருந்து அவள் மீது ஏன் என்று தெரியாத ஒருவகைப் பாசம் ஏற்படுவதை உணர்ந்தே இருந்தான் நடராஜ். அவள் ஆர்த்தியைப் போலவே இருக்கிறாள் என்பதனால் மட்டும் ஏற்பட்ட பாசமல்ல அது. ரிச்சர்டின் கரத்தைப்

பிடித்துக்கொண்டு நின்றிருந்த அவளைப் பார்த்ததும், ஆர்த்தியை நேரில் பார்ப்பதைப் போன்ற உணர்ச்சி ஏற்பட்டது உண்மைதான். ஆனால் அந்த ஒரு நிமிடத்திலேயே ஆர்த்தியின் முகத்திலேயே இன்னும் மாறாமல் குடியிருக்கும் குழந்தைத்தனமும், குறு குறுப்பும் ஜெனிஃபரின் முகத்தில் இல்லை என்பதைக் கண்டு பிடித்துவிட்டான் அவன். அந்த நீல நிற விழிகளின் பளபளப்பின் அடியில் ஆழமான ஒரு சோகம் அந்த வயதிற்குப் பொருந்தாத வகையில் ஒட்டிக்கொண்டிருப்பது அவன் கண்களுக்குப் புலப்பட்டது. அவளோடு பழகப் பழக அவள் நெஞ்சத்தில் குவிந்திருந்த ஏக்கத்தைப் புரிந்துகொண்டான் அவன்.

ஒரு நாள் நடராஜ், ஜெனிஃபரை மட்டும் அழைத்துக் கொண்டு ஹைட் பார்க்கிற்குப் போயிருந்தான். அப்போது தயங்கித் தயங்கி அவனிடம் வந்த ஜெனிஃபர், ''உங்களை ஒன்று கேட்கலாமா அங்கிள்?'' என்று மெதுவாகக் கேட்டாள்.

அவளை அணைத்துக்கொண்டு அந்தக் கண்களையே பார்த்துப் புன்னகை செய்த நடராஜ், ''கேளேன் ஜென்னி என்ன வேண்டும்?'' என்றான், உடனே கேட்க வந்ததை கேட்காமல் மேலும் தயங்கினாள் அவள், ''கேள் ஜென்னி தயங்காமல் கேளம்மா, என்ன வேண்டும் உனக்கு?' என்று நடராஜ் அவளை வற்புறுத்தியதும், ''நான் நான் உங்களை ஒரே ஒருமுறை டாடி என்று கூப்பிடட்டுமா?'' என்று தலையைச் சாய்த்து கண்களும், குரலும்கெஞ்ச நெஞ்சத்துத் தாபமெல்லாம் வெளியே கொட்டிச் சிதற அவன் அனுமதியைக் கேட்டபோது நடராஜ் அவளை நெஞ்சோடு சேர்த்து இறுக அணைத்துக் கொண்டுவிட்டான்.

''இவ்வளவுதானே! எப்போதுமே அப்படியே கூப்பிடேன் ஜென்னி'' என்று உள்ளம் நெகிழப் பதிலளித்தான் அவன்.



''டாடி...'' என்று அவனை வாயார, நெஞ்சார அழைத்த போது அவள் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜ். அந்த முகம் பூவாக மலர்ந்தது. இதழ்களில் அபூர்வமான புன்னகை படர, 'டாடி' என்று அவனைத் திரும்பத் திரும்பக் கனவில் அழைப்பதைப்போல் அழைத்துப் பார்த்துக் கொள்வதைக் கண்ட நடராஜ், அந்தச் சின்னஞ் சிறு உள்ளத்தில் புதைந்து கிடந்த ஏக்கத்தைப் பார்த்துப் பிரமித்துப் போய்விட்டான்.

அப்போதே அவளது நீலநிறவிழிகளில் படர்ந்திருக்கும் ஏக்கத்தையும். கலக்கத்தையும் துடைத்துப் போக்கிவிட மாட்டோமா என்றிருந்தது அவனுக்கு, பல நாட்களாகக் கவனிக்காமல் மூலையில் போட்டு வைக்கப்பட்ட தூசி படிந்த ஸெல்லுலாயிட் பொம்மையைப் போலிருந்த அவளை மாற்றி, ஆர்த்தியைப்போல் அவளது வயதிலுள்ள மற்ற குழந்தைகளைப்போல் கவலையற்றுத் துள்ளிக் குதித்து ஓட வைத்துப் பார்க்க வேண்டும் என்று துடித்தது அவன் மனம். கல கலவென்று அவள் வாய் விட்டுச் சிரிப்பதைக் கேட்க வேண்டுமென்று ஆசைப்பட்டான் அவன்.

அப்போது அவளது தந்தை அவர்களோடு இல்லை என்ற ஒன்று மட்டுந்தான் நடராஜுக்குத் தெரியும். தாயும் இப்படிப்பட்ட ஒரு நிலையில் இருக்கிறாள். தாய்ப் பாசத்தையும் அறியாத ஒரு பரிதாபத்திற்குரிய பெண் அவள் என்பது நடராஜிற்குத் தெரியாது. இப்போது அதையும் தெரிந்து கொண்டதிலிருந்து அவன் மனம் மிகவும் வேதனைப்பட்டது.

உடைகளைக் கழற்றிப் போட்டுவிட்டு நைட் டிரஸ்ஸைப் போட்டுக்கொண்டு வெளி வராந்தாவில் போய் நின்றான் அவன். சிகரெட்டை இதழ்களில் பொருத்திப் பற்றவைத்த போது 'நான் ஏன் திரும்பத்

திரும்ப அவர்களைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்
கிறேன்?' என்று தன்னைத் தானே கேட்டுக்கொண்டான்.
எலைனைப் பற்றி நினைக்க நினைக்க அவன் மீதே
அவனுக்குக் கோபம் கோபமாக வந்தது. அவள் நினைவை
நெஞ்சைவிட்டு அகற்ற முயன்றான். ஆனால் அவள்
முகம் கண்களை விட்டு மறையாமல் நெஞ்சத்தின் ஆழத்
தில் பதிந்து போயிருப்பதை உணர்ந்தபோது அவனுள்ளம்
துணுக்குற்றது. 'திடீரென்று இது என்ன தடுமாற்றம்?
இவ்வளவு நேரமாக நானா இன்னொரு பெண்ணின்
அழகில் லயித்துப்போய் என்னை மறந்து அதைப் பற்றியே
சிந்தித்துக் கொண்டிருக்கிறேன்! இதுவரை அனுவைத்
தவிர வேறு யார் நினைவும் என் மனத்தில் படர்ந்த
தில்லையே. வேறுயாரைப் பற்றியும் இவ்வளவு ஆழமாக,
இவ்வளவு நேரம் நான் நினைத்ததில்லையே! அதுவும்
முன்பின் சந்தித்துப் பேசிக்கூட இராத அறிமுகமற்ற ஒரு
பெண்ணைப் பற்றி இது என்ன வேண்டாத
சிந்தனை?'

சிகரெட் கையைச் சுட்டதும் அதைக் காலின் கீழ்
போட்டுச் செருப்பால் மிதித்து அணைத்து விட்டு
நிமிர்ந்து பார்த்தான். வானம் பல கோடிக் கண்களைச்
சிமிட்டிக் கொண்டு அவனையே பார்த்து சிரிப்பதைப்
போல் இருந்தது. கறுப்பு வெல்வெட்டை விரித்து அதில்
வைரங்களையும், பலநிறக் கற்களையும் அள்ளிக்
கொட்டியதைப்போல் அந்த இரவு நேரத்தில் கை தேர்ந்த
சித்திரக்காரன் வரைந்த அற்புதச் சித்திரமாகத் தோற்ற
மளித்தது லண்டன். டங்டங் என்று அடிக்கப்படும்
பிக்பென் பெல், வெள்ளியை உருக்கிக்கொட்டி நடு நடுவே
நீலநிற பெயிண்ட்டும் அடித்த மாதிரி ஓடும் தேம்ஸ் நதி,
கரிய நிழலுருவமாக நெல்சன் சிலை. தூரத்தில் தெரியும்
ஷெல்பில்டிங். உயரமான ஒருகம்பத்தை நாட்டி அதில்
விளக்கலங்காரம் செய்ததைப் போல் நிற்கும் போஸ்ட்
ஆபீஸ் டவர், சில்லென்று வீசும் காற்று...



எப்போதோ மலபார் ஹில்ஸில் ஒரு ஹோட்டலில்
அனுவோடு நின்று இதே மாதிரி ஓர் இரவில் கீழே
தெரிந்த பம்பாய் நகரத்தைப் பார்த்துப் பரவசப்பட்டதை
நினைத்துக் கொண்டான் நடராஜ்.

''இந்தக் கார் வரிசைகளின் விளக்குகளைப் பார்க்கும்
போது கார்த்திகை தீபத்தன்று அகல் விளக்குகளை ஏற்றி
வைப்போமே, அதுதான் ஞாபகத்திற்கு வருகிறது. ஒளி
வெள்ளமாகப் பம்பாய் நகரம் எவ்வளவு அழகாக
இருக்கிறது ராஜ்! இந்தக் காட்சியை வர்ணிக்க நான் ஒரு
கவியாக இல்லையே ராஜ்...'' என்று கண்கள் மலரக்
கேட்ட அனுவையே பார்த்துக்கொண்டு நின்றவன்,
''உன்னைப் பார்க்கும் போதெல்லாம் எனக்குக்கூட நான்
கவிஞனாக இல்லையே என்றுதான் தோன்றுகிறது''
என்று பதிலளித்தான். அதைக் கேட்டு மனம் நிறைய
அவனைக் கண்களால் விழுங்கிவிடுகிற மாதிரி பார்த்துச்
சிரித்தாள் அவள்.

அனுவை நினைத்துக் கொண்டவுடன் நடராஜின்
மனம் படபடத்தது. உள்ளே வந்து கட்டிலின் அருகே
இருந்த விளக்கைப் போட்டுவிட்டு அனுவின்
போட்டோவையே பார்த்துக்கொண்டிருந்தான். அவளது
கண்களும், புன்னகையும் அவனை ஏதோ கேட்பதைப்
போலிருந்தது. உடனே தான் எலைனின் வீட்டில் அவள்
அழகைக் கண்டு தடுமாறிக் கொண்டு நின்றது அவன்
நெஞ்சைக் குறுகுறுக்க வைத்தது. கட்டிலில் சரிந்து அவள்
போட்டோவைக் கைகளில் எடுத்துக் கொண்டான்.

'ஐ யாம் ஸாரி அனு. எலைனின் அழகில் ஒரு விநாடி
நான் தடுமாறிப் போய்விட்டது உண்மைதான். அதற்காக
உன்னிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன் அனு.
இனிமேல் அவளை நான் பார்க்கவும் மாட்டேன், அந்த
அழகில் மனத்தை சலனப்படவும் விடமாட்டேன்.

பார்த்தால்தானே மனம் சலனப்படுவதற்கு? என்று மானசீகமாக அவளிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு 'இனிமேல் எலைனின் வீட்டிற்குப் போகவோ, அவளைப் பார்க்கவோ கூடாது, என்று முடிவு செய்து கொண்டான்.

# 9

ஒருவாரமாக நடராஜ், ரிச்சர்ட் வீட்டிற்குப் போக வில்லை. ஜெனிஃபரைக்கூடப் பார்க்கவில்லை. வேண்டு மென்றே தன் மனதைக் கட்டுப்படுத்தி வைத்துக்கொண் டிருந்தான். ஆனால் அதுவோ அவனுக்கு அடங்க மறுத்து சண்டித்தனம் செய்தது. 'எலைனின் உடல்நிலை எப்படியிருக்கிறது என்று போய்ப் பார்த்தால் என்ன? ஜெனிஃபரை இரண்டு நாட்களாகப் பார்க்கவே இல்லையே. இன்றுபோய் பார்க்கலாமா?'' என்று கேட்டு அவனுக்கு அடிக்கடி தொந்தரவு கொடுத்தது. உடனே அனுவை நினைத்துக்கொள்வான் அவன். போகக் கூடாது என்ற தீர்மானம் அவன் மனத்தில் உருவாகும். அதை நிறைவேற்றத் தன் மனதை வேறு எதிலாவது செலுத்துவான். கவனத்தை திருப்ப முயற்சி செய்வான். இந்த முயற்சியிலேயே அவனுக்கும் மனத்திற்கும் இடையே நிகழ்ந்த மௌனப் போராட்டத்திலேயே ஒரு வாரம் ஓடிவிட்டது.

அன்று அவன் தொழிற்சாலையிலிருந்து அறைக்குத் திரும்பிய உடனேயே டெலிபோன் அலறியது. டையைக் கழற்றிக் கொண்டிருந்தவன் அதை அப்படியே மாலையாகத் தோள்மீது போட்டுக்கொண்டு சலிப்புடன் நிதானமாக நடந்துபோய் மெதுவாக ரிஸீவரை எடுத்தான்.



''குட் ஈவினிங் மை பாய்''-ரிச்சர்டின் உற்சாகக் குரல்.

நடராஜின் முகம் மலர்ந்தது. ''குட் ஈவினிங் சார்.''

''உனக்கு என்ன ஆயிற்று? எங்கே ஒருவாரமாக இந்தப் பக்கம் காணவில்லை?''

''கொஞ்சம் பிஸியாக இருந்துவிட்டேன். வேலை அதிகமாயிருந்தது.''

''வேலை நேரத்தில் உழைப்பு. அனுபவிக்க வேண்டிய நேரத்தில் உல்லாசம், இரண்டையும் மறந்துவிடக் கூடாது. மை பாய்! அப்போதுதான் வாழ்க்கை சுவை யாக இருக்கும்.''

நடராஜ் மௌனமாக இருந்தான்.

''என்ன, பேசாமல் இருக்கிறாய்? சரி, இன்று இரவு ஒரு சின்ன டின்னருக்கு ஏற்பாடு செய்திருக்கிறேன். நீ அவசியம் வர வேண்டும்.''

''இன்றிரவா?''...நடராஜ் தயங்கினான்.

''என்ன தயக்கம் நடராஜ்? நாளை நான் சிகாகோ விற்குக் கிளம்புகிறேன். திரும்ப எப்போது வருவேனோ தெரியாது.''

அதைக் கேட்டுத் திகைத்துப் போனான் நடராஜ்.

''நாளை சிகாகோவிற்குப் போகிறீர்களா? என்ன திடீரென்று?''

''ஆமாம். மார்ஷல் இந்தக் கிறிஸ்மஸ்ஸிற்கு அவனு டன் வந்து இருக்கவேண்டுமென்று கடிதத்திற்கு மேல் கடிதமாக எழுதிக்கொண்டிருந்தான். எங்களுக்கும் அவனைப் பார்க்கவேண்டும் போலிருக்கவே கிளம்பி விட்டோம். நியூ இயர் ஈவ் வரை இருந்துவிட்டு வரலா

மென்பது எங்களுடைய ப்ளான். அப்புறம் மார்ஷல் எப்போது அனுப்புகிறாரோ அப்போதுதான் வர வேண்டும்."

"ஓ, நீங்கள் இல்லாமல் எனக்குத்தான் மிகவும் கஷ்டமாக இருக்கும்" என்றான் நடராஜ், உண்மையான வருத்தத்துடன்.

"எங்களுக்கும் உன்னைப் பார்க்கவேண்டும்போலிருக்கிறது. நீதான் ஒரு வாரமாக வரவே இல்லையே! சரி. இன்றிரவு டின்னரில் பார்க்கலாமா?"

"ஓ. கே."

ரிஸீவரை வைக்குமுன் எலைன் எப்படி இருக்கிறாள் என்று கேட்க வேண்டுமென்று அவன் மனம் துடித்தது. ஆனால் கேட்கவில்லை. ஜெனிஃபரைப் பற்றிக்கூட ஒன்றும் கேட்காமல் ரிஸீவரை வைத்துவிட்டான். ரிச்சர்ட் சிகாகோ போகிறார் என்று கேட்டதிலிருந்து அவனுக்கு மனம் என்னவோ போலிருந்தது. முன்பு அவரைச் சந்தித்ததற்காக சந்தோஷப்பட்டவன் இப்போது ஏன் அவரைச் சந்தித்தோம் என்று வருத்தப்படலானான். அவரைச் சந்தித்ததனால்தானே ஜெனிஃபரின் அறிமுகம் அவனுக்குக் கிடைத்தது. ஜெனிஃபர் மீது ஏற்பட்ட பாசத்தினால்தானே இப்போது...இப்போது மனம் அலை பாய்கிறது. அனு மட்டும் அருகில் இருந்திருந்தால் அவனுக்கு இப்படியெல்லாம் நினைக்கத் தோன்றாது. உடனே அனுவிடம் ஓடிப்போய் சின்னக் குழந்தையாக அவள் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்டு கண்ணீர் விடவேண்டும் போலிருந்தது.

ரிச்சர்ட் வீட்டையடைந்த நடராஜ் அங்கு எலைனை எதிர்பார்க்கவே இல்லை. யாரைத் திரும்பப் பார்க்கவே கூடாது என்று உறுதி செய்து கொண்டானோ அவளை நேரில் கண்டபோது ஒரு வினாடி நடராஜின் இதயம்



துடிப்பதை நிறுத்தியது. மேடம் டுஸாட்ஸில் அவன் பார்த்த மெழுகுச்சிலை ஒன்று உயிர் பெற்று எழுந்து வந்து அங்கு உட்கார்ந்திருக்கிறதா என்ன என்று ஆச்சரியப்பட்டான் அவன்.

எலைன் எங்கோ பார்த்தபடி உட்கார்ந்திருந்தாள். அவள் அந்த அறையில் இருந்தாலும் அவளது நினைவு அங்கில்லை என்பதை அந்தச் சலனமற்ற முகம் உணர்த்தியது. கனவில் சஞ்சரிப்பதைப்போல் கண்கள் பாதி மூடியிருந்தன. கையில் விரல்களுக்கிடையே சிகரெட் புகைந்து கொண்டிருந்தது. அடிக்கடி அதை இதழ்களில் பொருத்திக் கொண்டு திரும்ப எடுப்பதைத் தவிர அவளிடம் வேறு எந்த சலனமுமில்லை. அந்தத் தோற்றத்தில் அப்படியே அவளை வரைய முடியுமானால் அந்தச் சித்திரம் உலகப் புகழ்பெற்ற சித்திரமாக இருக்கும் என்று நினைத்துக் கொண்டான் நடராஜ்.

"கமான், மை பாய்!" என்று அவன் தோள்மீது கைபோட்டு உள்ளே அழைத்துக் கொண்டு போனார் ரிச்சர்ட்.

"ஹாய் நட்ராஜ்! எங்கே உன்னை ஒரு வாரமாகப் பார்க்கவே முடியவில்லை?" என்று யாருடனோ நின்று பேசிக்கொண்டிருந்த மிஸஸ் ரிச்சர்ட் திரும்பி அவனைப் பார்த்துப் புன்னகையோடு கேட்டாள். நடராஜ் புன்னகை செய்தானே தவிர பதில் எதும் சொல்லவில்லை. ரிச்சர்ட் அவனை யார் யாருக்கோ அறிமுகம் செய்து வைத்தார். ஹலோ. ஹலோ என்று புன்னகையோடு கை குலுக்கினானே தவிர நடராஜின் மனம் எலைனையே சுற்றிக்கொண்டிருந்தது. வினாடிக்கு ஒரு முறை அவன் பார்வை அவள்மீது தாவியது. கடைசியில் ரிச்சர்ட் அவனை எலைனிடம் அழைத்துப் போய் அறிமுகம் செய்து வைத்தார்.

"எலைன், மீட் மிஸ்டர் நட்ராஜ். இந்தியாவிலிருந்து வந்திருக்கும் இளம் தொழிலதிபர்."

எலைன் எழுந்து அவனுக்குக் கை கொடுத்தான். அவன் ஸ்பரிசம் நடராஜின் உள்ளத்தைச் சிலிர்க்க வைத்தது. அல்லிப்பூவைத் தொட்டதைப்போல் அவன் கரம் மென்மையாக இருப்பதைக் கவனித்தான் நடராஜ். அந்தக் கரங்கள் இரண்டையும் பற்றித் தன் கன்னங்களில் பதித்துக்கொள்ள வேண்டுமென்ற ஆசை அவனுள்ளத்தில் தோன்றியது. மிகவும் சிரமப்பட்டு அந்த ஆசையை அடக்கிக்கொண்டான் அவன்.

"நீங்கள் பேசிக் கொண்டிருங்கள்" என்று கூறிவிட்டு ரிச்சர்ட் வேறு யாரையோ கவனிக்கச் சென்றுவிட்டார். நடராஜின் அருகில் அமர்ந்துகொண்ட எலைன், அவனைப் பார்த்துப் புன்னகை செய்தான். அந்தப் புன்னகையில் தன்னை மறந்தான் நடராஜ். அவன் செய்துகொண்ட தீர்மானம், கட்டுப்பாடு எல்லாம் காற்றில் பறந்துவிட்டன. எலைனைத் திரும்ப நேரில் பார்த்தவுடன் எல்லாவற்றையும் மறந்து அவனது அழகிலேயே நீந்திக் கொண்டிருந்தான் அவன். அருகே அமர்ந்து அணு அணுவாகப் பார்த்தபோது, ஓ! எப்படிப் பட்ட அழகு என்ற பிரமிப்பு திரும்பவும் ஏற்பட்டது அவனுக்கு.

"இந்தியாவிலிருந்தா வந்திருக்கிறீர்கள்?"

அவன் கேட்டதும் சுய உணர்வு பெற்ற நடராஜ், 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

"எனக்கு இந்தியர்களைப் பிடிக்கும். நீங்கள் அவசியம் என் வீட்டிற்கு ஒருமுறை வரவேண்டும்."

"நான்தான் ஒரு முறை வந்திருந்தேனே" என்றான் நடராஜ் புன்னகை மிளிர.

"நீங்கள் என் வீட்டிற்கு வந்திருந்தீர்களா? எப்போது?"



"டாக்டருடன்தான் வந்திருந்தேன், ஒரு வாரத்திற்கு முன்பு."

"ஒரு வாரத்திற்கு முன்பா? அன்று...அன்று...நான்" அவன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டான். "ஐயாம் ஸாரி நீங்கள் வந்தபோது நான் உங்களை வரவேற்கும் நிலையில் இல்லை."

"அப்படிப்பட்ட ஒரு நிலையில் இனிமேல் என்றுமே நீங்கள் இருக்கக் கூடாது என்பதுதான் என் ஆசை." மனதிற் பட்டதை உடனே சொல்லிவிட்டான் நடராஜ். எலைன் பதில் பேசவில்லை. முகத்தை நிமிர்த்து பார்த்தான். அந்த ஆழமான சோகப் பார்வை நேராக அவனது நெஞ்சின் அடித்தளத்திற்குப் போய் பாய்ந்தது. அவனது விழிகள் கலங்குவதைக் கண்ட அவன் மனம் மிகவும் சங்கடப்பட்டது. அவனே தன் துயரத்தை மறந்து சற்று நேரம் நிம்மதியாக இருக்கலாமென்று வந்திருக்கும்போது திரும்ப அவனை வேதனையில் ஆழ்த்திவிட்டதை உணர்ந்து அதற்காக வருத்தப்பட்டுக் கொண்டே பேச்சை மாற்ற முயன்றான் நடராஜ்.

"ஜென்னி எங்கே, வரவில்லையா?"

'இல்லை' என்று தலையாட்டினான் எலைன். அதைக் கேட்டுக் கொண்டே அவர்களை நெருங்கிய ரிச்சர்ட், "ஜென்னிக்கு நான்கு நாட்களாக உடம்பு சரியில்லை. நடராஜ் நூற்று நான்கு டிகிரி காய்ச்சலில் உடம்பு அனலாகக் கொதிக்கும் போது கூட 'அங்கிள் வரவில்லையா?' என்று என்னிடம் கேட்டாள். ஜுர வேகத்தில் கூட உன்னைப்பற்றி தான் பிதற்றுகிறாள். விருந்து முடிந்ததும் எலைனுடனேயே போய் அவளைப் பாரேன் நடராஜ். நீ போய்ப் பார்த்தாலே அவளுக்குப் பாதி உடம்பு சரியாகிவிடும்" என்றார்.

"ஜென்னிக்கு உடம்பு சரியில்லை என்பதே எனக்குத் தெரியாதே. தெரிந்திருந்தால் எப்போதோ போய் அவளைப் பார்த்திருப்பேனே" என்ற நடராஜ், எலைனின் பக்கம் திரும்பி "நான் உங்களுடனேயே உங்கள் வீட்டிற்கு வரலாமா?" என்று கேட்டான்.

"ஓ, ஷ்யூர். யூ ஆர் வெல்கம் அட் எனி டைம் மிஸ்டர் நடராஜ். ஜென்னி 'அங்கிள் அங்கிள்' என்று வாய் ஓயாமல் கூறிக்கொண்டிருப்பது உங்களைப் பற்றித்தானா? அப்படியானால் உடனே வந்து அவளைப் பார்க்க வேண்டும். டாக்டர் சொல்லுவதுபோல் உங்களைப் பார்ப்பதே அவளுக்குப் பெரிய ஆறுதல்."

உடல் நிலை சரியில்லாத போதும் ஜெனிஃபர் தன்னைப் பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதைக் கேட்டு, 'அவளுக்கு என்மீது எவ்வளவு பாசம். அப்படிப்பட்டவளையா இத்தனை நாட்கள் பார்க்காமல் இருந்திருக்கிறேன்' என்று எண்ணி மனம் நொந்துகொண்டான். விருந்து எப்போது முடியும், எப்போது போய் ஜெனிஃபரைப் பார்க்கலாம் என்று காத்துக் கொண்டிருந்தான் அவன்.

விருந்து முடிந்து எலைனுடன் காரில் போய்க் கொண்டிருந்தபோது அவன் மனம் உணர்ச்சியால் நிரம்பி வழிந்து கொண்டிருந்தது. அது என்ன உணர்ச்சி? மகிழ்ச்சியா, அல்லது வேதனையா? இன்பமா? அல்லது துன்பமா அவனுக்கே புரியவில்லை. எல்லாம் கலந்த ஒரு நூதனமாக புதிய உணர்ச்சியில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருப்பது மட்டும் புரிந்தது.

# 10

நடராஜைப் பார்த்ததும் ஜெனிஃபரின் கண்கள் விரிந்தன. முகம் மலர்ந்தது.

"அங்...கிள்..." என்று அவன் கரத்தைப் பற்றிக் கொண்டாள் அவள். வாடிப்போன மலராகப் படுத்துக் கொண்டிருந்த அவளைப் பார்த்ததும் நடராஜனின் உள்ளம் நெகிழ்ந்தது. கட்டிலின் ஓரத்தில் உட்கார்ந்து அவள் முகத்தில் புரண்ட கூந்தலைப் பரிவோடு ஒதுக்கி விட்டுக் குனிந்து முத்தமிட்டபோது அவளுடலில் இன்னும் இலேசாக காய்ச்சலிருப்பதை உணர்ந்தான்.

"ஜென்... இன்னும் உடம்பு குறையலையாம்மா?" என்று பதட்டத்தோடு கேட்டான் நடராஜ். அவள் அவனது கேள்வியைப் பொருட்படுத்தவில்லை. அவன் முகத்தையே விழிகள் பளபளக்கப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"நீங்கள் ஏன் ஒரு வாரமாக என்னைப் பார்க்க வரவில்லை? நான் ரிச்சர்ட் அங்கிள் வீட்டில் தினமும் உங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்து விட்டு ஏமாற்றத்தோடு திரும்புவேன் தெரியுமா? இரண்டு முறை உங்களுக்கு போன்கூட செய்து பார்த்தேன், நீங்கள் கிடைக்கவில்லை." கூறி முடிக்குமுன் அவள் கண்கள் கலங்கி விட்டன. குரல் அடைத்துச் சொற்கள் தடுமாறின.

'ஓ! இவளைப் பார்க்க வராமல் எப்படி இருக்க முடிந்தது என்னால்?—நடராஜின் உள்ளம் விம்மியது.

"ஸாரி டியர் இனிமேல் உன்னை ஏமாற்றவே மாட்டேன். தினமும் பார்க்க வருவேன்."

''பொய். ரிச்சர்ட் அங்கிள்தான் சிகாகோ போகிறாரே' அவள் மெதுவாக விம்மினாள்.

''அதனால் என்ன, தினமும் உன்னைப் பார்க்க இங்கே ஓடி வரமாட்டேனா?''

''நிஜமாகவா?'' அவள் கண்கள் வியப்பால் விரிந்தன. முகத்தில் பளீரென்று ஓர் ஒளி பரவியது.

''நிஜமாகத்தான் ஜென்.''

அவளால் நம்பமுடியவில்லை.

ப்ராமிஸ்?

''ப்ராமிஸ் டார்லிங்.''

''டபுள் ப்ராமிஸ்''

அதைக் கேட்டதும் சிரித்துவிட்டான் நடராஜ்.

''ட்ரிபிள் ப்ராமிஸ். போதுமா?''

ஜெனிஃபர் மனம் நிறைந்தவளாகப் புன்னகை செய்தாள்,

''இத்தனை நாட்கள் பார்க்க வராமலிருந்ததற்கு உங்களுக்கு ஒரு பனிஷ்மெண்ட் அங்கிள். இன்று இரவு முழுவதும் என் கூடவே இருக்க வேண்டும்.''

''அது தண்டனையாம்மா? இட்ஸ் எ ப்ளஷர் பேபி. சரி என்ன சாப்பிட்டாய்? மருந்து சாப்பிடலாமா?''

''போகும்போது மம்மி எல்லாம் கொடுத்து விட்டுத்தான் போனார்கள்.''

''இப்போது ஏதாவது சாப்பிடுகிறாயாம்மா?''

வேண்டாமென்று தலையாட்டினாள் அவள். நடராஜ் அவளது பொன்னிறக் கூந்தலைப் பரிவுடன் வருடினான். பின் போர்வையை இழுத்து நன்றாகப் போர்த்தி விட்டான்.

''தூங்கு ஜென். தூங்கி எழுந்தால் எல்லாம் சரியாகி விடும்.''

மாட்டேன். நான் தூங்கியதும் நீங்கள் போய்விடுவீர்கள்.'' நம்பிக்கையில்லாமல் அவள் கண்கள் அவனைப் பார்த்தன.

''இல்லை. நான் போகமாட்டேன் ப்ராமிஸ் பண்ணி விட்டு அதை மீறுவேனாம்மா? நீ நிம்மதியாகத் தூங்கு. நான் பக்கத்திலேயே உட்கார்ந்திருக்கிறேன்.''

''எங்கே, கையை இப்படிக் கொடுங்கள்.''

நடராஜ் தன் கரத்தை நீட்டினான். அதை இறுகப் பற்றிக்கொண்டாள் அவள். ''இப்போது எப்படிப் போவீர்கள்?'' என்று கேட்டுவிட்டு சிரித்துக் கொண்டே கண்களை மூடினாள் ஜெனிபர். அவள் முகத்தையே கனிவோடு பார்த்துக் கொண்டிருந்த நடராஜ், தலை நிமிர்ந்தபோது எலைன் அவனையே கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருப்பதைக் கவனித்தான்.

''என்ன, பார்க்கிறீர்கள்?''

ஒன்றுமில்லை என்று தலையாட்டினாள் அவள். அதன் பின் இருவரும் ஒன்றும் பேசவில்லை. வெறும் சிந்தனைகளால் நிறைந்த கனத்த இதயங்களோடு அறை அமைதியாக இருந்தது. அந்த அமைதியில் ஜெனிஃபர் சில நிமிடங்களுக்குள் நல்ல உறக்கத்தில் ஆழ்ந்து போனாள். அவளிடமிருந்து தன்கரத்தை மெல்ல விடுவித்துக்கொண்ட நடராஜ் மெதுவாக எழுந்து நின்றான். எலைனும் தன் இடத்தை விட்டு எழுந்தாள்.

இருவரும் மௌனமாக அந்த அறையைவிட்டு வெளியே வந்தனர்.

"வுட் யூலைக்கு ஹேவ் சம் ட்ரிங்க்ஸ்?" என்று கேட்டாள் எலைன்.

"நோ, தாங்க்ஸ்" என்று மறுத்துவிட்டான் நடராஜ். இருவரும் ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் உட்கார்ந்து கொண்டனர்.

இருவரும் ஒன்றும் பேசவில்லை. என்ன பேசுவது, எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது என்று தெரியாமல் அவள் முகத்தையே பார்த்தபடி அமர்ந்திருந்தான். அவளது அந்தப் பார்வை அவனை என்னவோ செய்தது. மேலும் அந்தப் பார்வையைச் சந்திக்கும் சக்தியற்றவனாகத் தன் பார்வையைத் தாழ்த்திக் கொண்டுவிட்டான்.

'ஜென்னி உங்களைப் பற்றிச் சொன்னதிலிருந்து உங்களை நேரில் பார்த்ததிலிருந்து உங்களிடம் மனம்விட்டுப் பேசவேண்டும் போலிருக்கிறது மிஸ்டர் நடராஜ். என் உள்ளத்தில் குவிந்துகிடக்கும் துயரங்களை யெல்லாம் கொட்ட வேண்டும் போலிருக்கிறது. முதல் முறையாக நாம் சந்திக்கிறோம். முதல் அறிமுகத்திலே இப்படிப் பேசுவது சரியல்ல என்றாலும் என் மனத்தில் ஏதோ ஒன்று உங்களிடம் எல்லாவற்றையும் தயங்காமல் சொல்லலாம் என்று கூறிக்கொண்டே இருக்கிறது..."

"அந்த நம்பிக்கை இருந்தால் எதையும் நீங்கள் தயங்காமல் சொல்லலாம்" என்றான் நடராஜ்.

'அந்த நம்பிக்கை இருப்பதால் தானே இப்படிக் கேட்கிறேன். இதுவரை யாரிடமும் நான் மனம் திறந்து பேசியதில்லை. அப்படிப் பேச எனக்கு யாருமில்லை. எனக்குள்ளாகக் குமுறிக் குமுறி என் நெஞ்சம் வெடித்துச் சிதறி விடும் போலிருக்கிறது. நான் சொல்வதை எல்லாம் நீங்கள் பொறுமையோடு கேட்டுக்கொள்வீர்களா?"

"என்னிடம் சொல்வதால் உங்கள் மனதிற்கு ஓரளவு நிம்மதியாவது ஏற்படுமென்றால் கேட்க நான் காத்துக் கொண்டிருக்கிறேன்."



"தாங்க் யூ மிஸ்டர் நடராஜ்"

எலைன் கண்களை, மூடிக்கொண்டு சோபாவில் தலையைப் பின்னால் சாய்த்துக் கொண்டாள். அவள் விழிகளின் ஓரங்களிலிருந்து கோடுகளாக வழிந்த கண்ணீர் விளக்கொளியில் பளபளத்தது.

"பார்ட்டியில் நீங்கள் சொன்னீர்களே, இனிமேல் எப்போதும் உங்களை அந்த நிலையில் பார்க்கக்கூடாது என்று நானும் அதே மாதிரி இருக்கத்தான் ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு முறையும் குடித்துவிட்டு நிலைதடுமாறிப் பின் தெளிவு பெற்று எழுந்திருக்கும் போது 'ஐயோ' நானா இவ்வளவு கேவலமான நிலைக்கு ஆளாகிவிட்டேன்' என்று எனக்குள் நானே கதறி அழுகிறேன். திரும்பக் குடிக்கவே கூடாது என்று நினைத்துக் கொள்வேன்? ஆனால்... முடியவில்லையே நடராஜ். என் மனத்தை என்னாலேயே கட்டுப்படுத்த முடியவில்லையே... இப்போதுகூட நீங்கள் இங்கே இல்லாதிருந்தால் இந்நேரம் நான்,..." எலைன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டு பொங்கிவரும் துக்கத்திற்கு அணைபோட முயன்றாள். அவளுக்கு எந்த வகையில், எப்படி ஆறுதல் கூற முடியும் என்று தடுமாறினான் நடராஜ்.

"வியான்... அவனை, அவன் எனக்குச் செய்த துரோகத்தை என்னால் மறக்கவே முடியவில்லை. நடராஜ் அவனோடு வாழ்ந்த அந்த நாட்களை எப்படி என்னால் மறக்க முடியும்? அந்த இனிமை, அந்த சந்தோஷம் இதையெல்லாம் சொல்லிப் புரிய வைக்க முடியாது. அனுபவித்தால்தான் தெரியும். அனுபவித்தவர்களுக்கு விளக்கமே தேவையில்லை. நீங்கள் அப்படிப்பட்ட இன்பத்தை அனுபவித்திருக்கிறீர்களா நடராஜ்? உங்களுக்குத் திருமணமாகி விட்டதா? எலைன், அவனை நே

நிறைந்த விழிகளோடு பார்த்துக் கேட்ட அந்த நேரத்தில் என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் ஒரு விநாடி தடுமாறினான் அவன். பின் "இல்லை" என்று தலையாட்டிய போது அவன் இதயம் படபடவென்று அடித்துக் கொண்டது.

"இல்லையா? யாரையாவது உயிருக்கு உயிராக நேசித்து அவளோடு பழகியாவது இருக்கிறீர்களா?" அதற்கும் அவன் "இல்லை" என்றுதான் தலையாட்டினான்.

'ஏன் இப்படிப் பொய் சொல்கிறோம்? எதற்காக வாய் கூசாமல் இப்படிப்பட்ட பொய்யைச் சொன்னோம்' என்பது அவனுக்கே தெரியவில்லை. உள்ளுணர்வின் தூண்டுதலினால் சடாரென்று அப்படிப்பட்ட ஒரு பொய்யைக் கூறிவிட்டான் அவன். 'நான் திருமணமானவன். ஒருத்தியை உயிருக்கும் மேலாக நேசிப்பவன், உங்கள் உணர்ச்சிகள் எனக்குப் புரிகின்றன' என்றுதான் கூற நினைத்தான் அவன். ஆனால் அந்த நினைவையும் மீறி ஏதோ ஒரு வேகத்தில் இல்லை என்று தலையாட்டி விட்டான். 'நீ செய்வது எப்படிப்பட்ட தவறு தெரியுமா நடராஜ்!' என்று அவனது மனசாட்சியே அவனை இடித்துக் காட்டியபோது குற்ற உணர்வால் தலையைக் குனிந்துகொண்டு விட்டான் அவன்.

அவனது மனப்போராட்டம் எதையும் புரிந்துகொள்ளாத எலைன் "அப்படியானால் என் உணர்ச்சிகள், என் குமுறல் எதையும் உங்களால் பரிபூரணமாகப் புரிந்து கொள்ள முடியாது. லியானும் நானும் வாழ்ந்த அந்த நாட்களை, அதன் இனிமையை உங்களால் உணர முடியாது. அது ஓர் தனி உலகம் நடராஜ். அந்த உலகத்தில் நாங்கள் பேசிய பேச்சுக்கள், சிரித்த சிரிப்புக்கள், சிணுங்கிய சிணுங்கல்கள் எதற்கும் அர்த்தமில்லாமற் போகலாம். ஆனால் அவை இன்னும் கூட என்



இதயத்தில் ஒலித்துக்கொண்டே இருக்கின்றன. 'ஐ லவ் யூ எலைன்' என்று பேச்சிற்குப் பேச்சு, காதலால் உருகும் பார்வையுடன் அவன் கூறியபோது நான் அப்படியே அந்தப் பார்வையில் அவனுடைய சொற்களில் கரைந்து போனேனே தவிர, அவன் என்னை இப்படி ஏமாற்றக் கூடும் என்று நான் நினைக்கவே இல்லை.

என் உலகம் அஸ்தமித்துவிட்டது நடராஜ். பத்திரிகைகளில் அவன் திருமணச் செய்தியைப் படித்தபோதும், புகைப்படத்தைப் பார்த்தபோதும் கூட என்னால் அதை நம்ப முடியவில்லை. லியானா எனக்கு இப்படிப்பட்ட ஒரு துரோகத்தை செய்யத் துணிந்தான்! இருக்காது... இருக்கவே இருக்காது என்று என்னை நானே ஏமாற்றிக் கொள்ள முயன்றேன். கடைசியில் அது உண்மைதான் என்று அறிந்தபோது, நொறுங்கிச் சிதறியதே என் இதயம், அது இன்னும் சீராகவே இல்லை நடராஜ்."

"நான் அவனை மறந்துவிடவேண்டும் என்று தவியாய்த் தவிக்கிறேன். உள்ளத்தின் அடித்தளத்தில் ஆழப் பதிந்துவிட்ட அந்த உருவத்தைப் பிய்த்து வெளியே எறிந்துவிட வேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறேன். ஒரு வேளை... ஒரு வேளை, அதற்குப் பின் வேறு யாரிடமாவது பழகியிருந்தால் அவனை என்னால் மறக்க முடிந்திருக்குமோ என்னவோ? வீட்டோடு வீடாக, அறையோடு அறையாக அடைந்து கிடந்தேனே தவிர எங்கு போகவும் முயற்சி செய்யவில்லை. எவரோடு பழகவும் விருப்பப்படவில்லை. என்னை நாடி வந்தவர்களையெல்லாம் விரட்டி அடித்தேன். ஒரு முறை நெஞ்சில் பட்ட சூடே ஆறாதபோது அதன் மேலேயே மறு முறையும் சூடுபோட்டுக்கொள்ள நான் விரும்பவில்லை மேலும்... மேலும்... லியானைப் போன்ற ஒருவனுக்கு நெஞ்சத்திலும், வாழ்க்கையிலும் இடமளித்துவிட்டு அந்த இடத்தில் வேறு யாரும் அமர முடியும் என்று எனக்குத் தோன்றவில்லை. லியானைப் போல் வேறு

யாராலும் இருக்கவும் முடியாது. வியானிடம் ஒரே ஒரு பலவீனம்தான் நடராஜ். அழகான பெண்களிடம் அவனுக்கிருந்த அந்தப் பலவீனமே அவனுக்கு ஒரு பெரிய பலமாகவும் இருந்ததோ என்னவோ! மற்றபடி வியான்... நீங்கள் அவனைப் பார்த்ததில்லையே நடராஜ். அந்த உயரம், கம்பீரம், அழகு எல்லாம் கிட்டத்தட்ட உங்களைப் போலவே... ஓ! ஐ வாண்ட் டு ஃபர்கெட் ஹிம்.''

அவள் தன் கரங்களால் முகத்தை மூடிக்கொண்டாள். அந்த உடல் குலுங்கியது. நெஞ்சத்தைப் பிளந்து கொண்டு வெளிப்பட்ட கேவல்கள் நடராஜைத் துளைத்தெடுத்தன. அவளது குமுறலையும், கண்ணீரையும் பார்த்து சகித்துக் கொள்ள முடியாமல் தவியாய்த் தவித்தான் அவன்.

நெடுநேரம் அழுதபின் கொஞ்சம் கொஞ்சமாக எலையின் கேவல்களும், கண்ணீரும் அடங்கிக்கொண்டே வந்தன. முகத்தைத் துடைத்துக்கொண்டு அவள் நிமிர்ந்த போது அந்தக் கண்கள், முகம், எல்லாம் ரத்தமாகச் சிவந்திருந்தன. நடராஜ் எழுந்துபோய் விக்கர் காபினெட்டைத் திறந்து ஒரு கிளாஸ் விஸ்கியும் சோடாவும் கலந்து கொண்டு வந்து அவளிடம் நீட்டினான். அவள் மறுக்காமல் வாங்கிக் கொண்டாள். தம்ளரைக் காலி செய்து முடித்த பின் நடராஜை நிமிர்ந்து பார்த்தாள்.

''நான் அவனை மறந்து கூடப் போயிருப்பேன் நடராஜ். ஆனால் அவனை மறக்க முடியாமல் என்னை ஆட்டிப்படைத்துக் கொண்டிருந்த மற்றொரு நபர் யார் தெரியுமா? அவனது நினைவுச் சின்னமாக எனக்குப் பிறந்த ஜென்னிதான். நான் நடைப்பிணமாக, இயந்திரமாக இயங்கிக் கொண்டிருந்தபோது ஒரு நாள், அன்று கிறிஸ்துமஸ். அன்று என்னிடம் வந்து என் கழுத்தைக் கட்டிக்கொண்டு என்ன கேட்டாள் தெரியுமா? 'மம்மி, வேர் ஈஸ் மை டாடி!' என்ற அந்தக் கேள்வியில் தணிந்து கொண்டிருந்த என் நெஞ்சத்து நெருப்பை விசிறி எரிய விட்டுவிட்டாள் நடராஜ். அந்த வெப்பத்தில் நான் துடித்துப்போய் விட்டேன். அவளது கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறிப் போனேன். 'உன் தந்தை என்னை ஏமாற்றிவிட்டு எனக்குத் துரோகம் செய்து விட்டுப் போய்விட்டாரம்மா. நீ தந்தையற்ற பெண்' என்று சொல்ல முடியுமா? அப்போது எப்படிப்பட்ட வேதனையில் கூசிக் குறுகிக் கொண்டு அவள் முன்னிலையில் நின்று கொண்டிருந்தேன் தெரியுமா? ஓ! காட்! அந்த மாதிரி ஒரு நிலைமை எந்தப் பெண்ணிற்குமே வரக் கூடாது நடராஜ்...

''அதன்பின் அவள் அடிக்கடி 'மம்மா, வேர் ஈஸ் பப்பா?' என்று கேட்டு என்னை தொந்தரவு செய்ய ஆரம்பித்தாள். அவளுடைய தோழிகளும், நண்பர்களும் தங்கள் தந்தைமார்களுடன் விளையாடுவதையும், வெளியே போவதையும் பார்க்கும்போது அவர்கள் வந்து 'என் அப்பா அதைச் செய்தாரே, இதைச் செய்தாரே' என்று பெருமையடித்துக் கொள்ளும்போது அவள் நேராக என்னிடம் ஓடிவந்து அழுவாள். எனக்கு மட்டும் அப்பா இல்லையா? நான் யாரை அப்பா என்று கூப்பிடுவேன் மம்மி' என்று கேட்பாள். நான் ஊமையாக நின்று கொண்டிருப்பேன்.

''அப்போதுதான் நான் செய்தது எவ்வளவு பெரிய தவறு என்பதை உணர்ந்தேன். நான் மட்டும் ஏமாறவில்லை நடராஜ். அந்தச் சிறுமிக்கும் எப்படிப்பட்ட ஏமாற்றத்தைத் தேடிக் கொடுத்து விட்டேன் என்பதை அறிந்தேன். அவளுக்கு அவளது தந்தையைக் காட்ட முடியாமல், அவரது அன்பை அவள் அடைய முடியாமல், நான் அவளுக்கு இழைத்துவிட்ட தவற்றை உணர்ந்த போது, எனக்கு நானே கண்ணீர் விட்டுக் கரைவதைத் தவிர வேறு என்ன செய்ய முடியும் நடராஜ்?''

கேட்டுக்கேட்டு என்னிடமிருந்து பதில் வராமற் போகவே, "நாளடைவில் ஜென்னி என்னிடம் அப்படிக் கேட்பதையே விட்டுவிட்டாள். நான் அவளிடமிருந்து எதையோ மறைப்பதை உணர்ந்து என்னிடமிருந்து மனத்தால் விலகிப் போக ஆரம்பித்தாள். என்னோடு சரியாகப் பேசுவதில்லை. கேட்ட கேள்விக்கு மட்டும் தான் அவளிடமிருந்து பதில் வரும். அதுவும் பெரும்பாலும் தலையசைப்பாகவே இருந்துவிடும். கொஞ்சம் கொஞ்சமாகத் தன் நண்பர்களுடன் வெளியே விளையாடப் போவதைக் குறைத்துக் கொண்டு தன் அறையிலேயே அடைந்து கிடக்க ஆரம்பித்தாள். அவளது செய்கைகள் என்னைப் பிழிந்து எடுத்தன. குற்றம் செய்த குறுகுறுப்பு எனக்கு. அவளைப் பார்க்கும் போதெல்லாம் அந்தக் கண்களிலும் முகத்திலும் நீங்காமற் பதிந்து ஏக்கம் என்னைச் சித்திரவதை செய்தது. அவள் பார்வையை என் பார்வை சந்திக்கும் அந்த நேரங்களில் 'என் அப்பா எங்கே அம்மா?' என்று மௌனமாக அவள் கேட்பதைப் போலிருக்கும். அதைச் சகித்துக் கொள்ள முடியாமல் ஒரு நாள், அளவிற்கு மீறி குடித்தேன். அப்போது என் வேதனை, துயரம், தண்டிப்பதுபோல் ஜென்னி என்னைப் பார்க்கும் பார்வை எல்லாம் மறைந்து நூதனமான ஒரு உணர்ச்சியில், புதிய உலகத்தில் அடியெடுத்து வைத்ததை போலிருந்தது. அதன்பின் தினமும் நிறையக் குடிக்க ஆரம்பித்தேன். அதில்தான் என்னையே என்னால் மறக்க முடிந்தது.

"திடீரென்று சில நாட்களுக்குமுன் ஒருநாள் ஜென்னி உற்சாகமாக ஓடிவந்தாள். வெகு நாட்களுக்குப் பின் அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்திருந்தது. 'மம்மி எனக்கு அப்பா கிடைத்து விட்டார். எனக்கும் அப்பா கிடைத்து விட்டார். பீட்டர், சாண்ட்ரா, மைக்ஜீன் இவர்களைப்போல நானும் இனிமேல் அப்பா என்று கூப்பிடமுடியும்' என்று உற்சாகத்தோடு கூறியபோது



எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஒருவேளை...ஒருவேளை...லியான்தான் திரும்பி வந்து...என் மனம் படபடவென்று அடித்துக்கொண்டது. அப்புறம்தான் அவள் உங்களைப்பற்றிக் கூறினாள். அவள் உங்களை 'டாடி' என்று கூப்பிட அனுமதி கேட்டாளாம். நீங்கள், 'இனிமேல் எப்போதும் அப்படியே கூப்பிடேன் ஜென்னி' என்றீர்களாம். அதைக் கூறியபோது அவள் முகத்தை நீங்கள் பார்த்திருக்க வேண்டும். உங்களைப் பற்றிப் பேசும்போது எவ்வளவு பெருமை தெரியுமா அவளுக்கு? அதைப்பார்த்து நானே பிரமித்துப் போய் விட்டேன். இந்தச் சின்னஞ்சிறு நெஞ்சில் இவ்வளவு ஆழமாக இப்படிப்பட்ட ஒரு ஏக்கமா? ஜுர வேகத்தில் கூட அவள் உங்களைப் பற்றியே பிதற்றியபோது இவளுக்கு உங்கள் மேல் இப்படி ஒரு பாசம் எப்படி ஏற்பட்டது என்று வியந்து என் மனம் உங்களைப் பார்க்க வேண்டும் என்று ஆசைப்பட்டது. நீங்களும் அதே அளவு பாசத்தை அவளிடம் வைத்திருப்பதை சற்றுமுன் நேரில் கண்டபோது...உங்களுக்கு...உங்களுக்கு என்னால் எப்படி நன்றி சொல்ல முடியும்?"

"நீங்கள் இனிமேல் அடிக்கடி இங்கு வாருங்கள் நடராஜ். ஜென்னிக்காக மட்டுமில்லை இந்த வேண்டுகோள். எனக்காகவும்தான் நடராஜ், உங்களைப் பார்த்தவுடன் லியானையே நேரில் பார்ப்பதைப் போலிருந்தது. ஜென்னி உங்களைப் பற்றிச் சொன்னதிலிருந்து, உங்களைப் பார்த்துப் பேசியதிலிருந்து என் உள்மனத்தில் ஏதோ ஒன்று உங்களிடம் எல்லாவற்றையும் சொல்லி ஆறுதல் பெறலாம் என்று கூறிக்கொண்டே இருந்தது. அதனால்தான் எல்லாவற்றையும் உங்களிடம் கொட்டி விட்டேன் நடராஜ். இதுவரை யாரிடமும் நான் இப்படிப் பேசியதில்லை. லியான் என்னை விட்டுப் பிரிந்ததிலிருந்து என் நெஞ்சத்தில் நெருப்பாக எரிந்து கொண்டிருந்த வேதனைத் தீ உங்களோடு பேசியதில்

ஓரளவு அணைந்திருக்கிறது நடராஜ். எனக்காகவே உங்களைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு செய்து அடிக்கடி இங்கே வாருங்கள். முடிந்தால் தினமுமே வாருங்கள். இதைத் தொந்தரவாக நினைக்காமல் ஒரு உதவியாக நினையுங்கள்.''

குரல் கரகரக்க நீல நிறக்கண்ணாடி மீன்கள் நீரில் மிதப்பதைப் போல் கண்கள் கண்ணீரில் மிதக்க அவள் கெஞ்சிய அந்த விநாடியில் தன்னை மறந்தான் நடராஜ். யாரைப் பார்க்க மாட்டேன் என்று அனுவிடம் மானசிகமாக மன்னிப்புக் கேட்டுக்கொண்டானோ அதெல்லாம் மறந்து போய் விட்டது. அவளது பேச்சைக் கேட்டு உருகிக் கரைந்து கொண்டிருந்த அவன் மனம் இப்போது அவளோடு அவள் மனத்தோடு ஒன்றிக் கலந்துவிடத் துடித்தது. ''நான் இங்கே வரவேண்டுமானால் நீ ஒன்று செய்ய வேண்டும் எலைன் என்று கேட்டான் நடராஜ் நிதானமாக.

''எ...ன்...ன!'' என்ற அவளது குரல் இலேசாக நடுங்கியது.

''நீ இனிமேல் இப்படிக் குடிப்பதை விட்டுவிட வேண்டும் எலைன்.''

''ஐ வில் ட்ரை...''

''நோ. இனிமேல் அவற்றைத் தொடவே மாட்டேன் என்று எனக்கு சத்தியம் செய்துகொடு.''

''ஓகே.''

''எங்கே?''—தனது வலது கரத்தை நீட்டினான் நடராஜ்

''ப்ராமிஸ்'' என்று அவன் உள்ளங்கையில் தன் உள்ளங்கையைப் பதித்தாள் அவள்.

அந்த அல்லித் தண்டுக் கரத்தை இறுகப் பற்றிய போது நடராஜின் உள்ளம் சிலிர்த்தது. அவன் பிடியிலிருந்த அவள் கரம் இலேசாக நடுங்கியது.

# 11

விமான நிலையத்திலிருந்து திரும்பி வீடு வரும்வரை வழியில் நடராஜும் எலைனும் பேசவே இல்லை. ஒரு வார்த்தைகூடப் பேசிக் கொள்ளவில்லை. அடிக்கடி இருவரும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்த்துக் கொண்டதோடு சரி. அப்போதும் அவர்களின் இதழ்களில் புன்னகை மலரவில்லை. எல்லையற்ற ஆழமான ஒரு சோகத்தில் இருவர் முகங்களுமே இறுகிக் கிடந்தன. கார் அவளுடைய அபார்ட்மெண்ட் வாசலில் வந்து நின்றதும் எலைன் கதவைத் திறந்து கொண்டு கீழே இறங்கினாள். நடராஜ் தன் இடத்தை விட்டு அசையவில்லை. அப்படியே உட்கார்ந்திருந்தான். சுற்றி அவன் பக்கம் வந்தபின்பு தான் அவன் காரைவிட்டு இறங்காததைக் கவனித்தாள் எலைன். அவன் அருகே போய்க் கதவின் மீது சாய்ந்து கொண்டு நின்றாள். அவள் விழிகள் கேள்விக்குறியோடு அவனைப் பார்த்தன.

''நான் போய் வரட்டுமா எலைன்?''

அதைக் கேட்டதும் சடாரென்று விளக்குகளை அணைத்ததைப் போல் அவள் முகம் இருண்டது. அவன் கண்களையே ஆழமாகப் பார்த்தபடி அசையாமல் நின்றாள் அவள். அப்போது அவள் முகத்தில் காணப்பட்ட அந்த மாதிரி ஒரு சோகத்தை அதற்கு முன்பு யார் முகத்திலும் அவன் பார்த்ததில்லை; அவள் இதழ்கள் நடுங்கிக்கொண்டே இலேசாகப் பிரிந்தன.

''போகிறீர்களா?''

அந்தக் கேள்வியில் தொனித்த ஏக்கத்தைப் புரிந்து கொண்டபின், போக மனம் வரவில்லை நடராஜிற்கு. கார் கண்ணாடிகளைத் தூக்கி விட்டுக் கீழே இறங்கிக் கதவைப் பூட்டினான். அவளோடு அமைதியாக நடந்

தான். இருவரும் மௌனமாகவே மேலே போனார்கள். காலிங் பெல்லை இலேசாக அழுத்தியதும் வயதான நீக்ரோ மாது ஒருத்தி கதவை திறந்தாள்.

''ஜென்னி எப்படி இருக்கிறாள், மிஸஸ் மார்ட்டின்?'' என்று நுழைந்துகொண்டே கேட்டாள் எலைன்.

''தேவலை. இப்போ தூங்கிக் கொண்டிருக்கிறாள்'' என்று சுருக்கமாகப் பதிலளித்து விட்டு உள்ளே போய் விட்டாள் அவள்.

எலைன், ஜெனிஃபரின் அறையினுள் எட்டிப் பார்த்தாள். சீராக ஏறி இறங்கும் மார்பிலிருந்து ஜெனிஃபர் நிம்மதியாகத் தூங்குவது தெரிந்தது. சப்தப்படுத்தாமல் அறைக் கதவை மூடிவிட்டுத் திரும்பினாள் அவள். தன் கோட்டைக் கழற்றி சோபாவின் கைப்பிடியில் போட்டு விட்டு டையைத் தளர்த்திக் கொண்டிருந்த நடராஜ், ''ஸ் ஷி ஸ்லீப்பிங்?'' என்று கேட்டான்.

''ஆமாம்'' என்று தலையாட்டிய எலைன், ''ஏதாவது ட்ரிங்க் சாப்பிடுவோமா?'' என்று கேட்டாள் அவனைப் பார்த்து.

''சரி.''

எலைன் அறைக் கோடியிலிருந்த சின்ன 'பாரை' நோக்கி நடந்தாள். அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜ். அழகான பொம்மை ஒன்றுக்குச் சாவி கொடுத்து நடக்க வைத்ததைப் போலிருந்தது அவள் நடை. மென்மையான, கவர்ச்சிகரமான, இயற்கையான அசைவுகள். உடலின் நிறத்திலேயே ஸ்டாக்கிங்கோடு பளபளத்த அல்லி தண்டு கால்கள். தோள்வரை வழியும் அடர்த்தியான கூந்தல். நடராஜ் பெருமூச்சு விட்டபடி சோபாவில் சரிந்தான்.



ரிச்சர்ட் கடைசியாக விமானத்தில் ஏறுமுன் அவனைத் தனியே அழைத்துக்கொண்டு போய்க் கூறியது அப்போது ஞாபகத்திற்கு வந்தது; ''உன்னோடு இருக்கும் போது எலைன் மகிழ்ச்சியாக இருக்கிறாள். தயவு செய்து அவள் மனத்தை மாற்று'' என்றார் அவர்.

அவள் மனம் ஏற்கனவே மாறிவிட்டதே! என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு சோபாவில் தலையை நன்றாகச் சாய்த்துக் கண்களை மூடிக்கொண்டான்.

''இதோ, நடராஜ்.''

கண்களைத் திறந்து பார்த்தான் நடராஜ், எதிரே எலைன் இரண்டு தம்ளர்களுடன் நின்றுகொண்டிருந்தாள் அவன் ஒன்றை எடுத்துக்கொண்டான். தம்ளர்கள் காலியாகும் வரை இருவரும் தங்களுக்குள் சிந்தனையில் ஆழ்ந்து போயிருந்தனர்.

தம்ளரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது எலைன் எங்கோ வெறித்துப் பார்த்துக்கொண்டிருப்பதைக் கவனித்த நடராஜ், ''என்ன யோசனை, எலைன்!'' என்று கேட்டான்.

அவள் தன் பார்வையை அவன் முகத்தில் பதித்தாள். ஒரு விநாடி பதிலேதும் கூறாமல் அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். பின் ஆழமான பெருமூச்சுடன், ''ஒன்றுமில்லை ரிச்சர்டையும், அவர் மனைவியையும் நினைத்துக் கொண்டேன். என்னைப் பற்றியும், ஜெனிஃபரைப் பற்றியும் கவலைப்பட, அக்கறையோடு விசாரிக்க, எங்கள் நலனில் ஆர்வம் காட்ட இது வரை அவர்களாவது இருந்தார்கள். இப்போது... இப்போது... யாருமில்லை நடராஜ்.''—அவள் தன் கீழ் உதட்டை இறுகக் கடித்துக்கொண்டாள்.

அவளது குரலில் தொனித்த சோகத்தையும், கலங்கிய கண்களையும் கவனித்த நடராஜினால் அதற்கு மேலும்

தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியும் என்று தோன்றவில்லை. உள்ளம் நிறைய நெஞ்சை முட்டிக் கொண்டு நிற்கும் உணர்ச்சிகளை அவள் முன் கொட்டத் துடித்தான் அவன். அவளுடன் பழகிய இந்த இரண்டு நாட்களில் அவள் மனத்தை ஓரளவு புரிந்துகொண்டு விட்டான் அவன். நெஞ்சைத் துளைத்துக்கொண்டு உள்ளே பாய்வதுபோல் அவள் பார்க்கும் ஆழமான பார்வை, அந்தப் பார்வையின் அடியில் சுடர்விடும் அன்பின் ஒளி "போய் வருகிறேன்" என்று அவன் கூறிய போது இருண்டு போன அவள் முகம் எல்லாம் அவள் உள்ளத்தைத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டினாலும் வாயைத் திறந்து ஒன்றும் கூறவில்லையே அவள். எத்தனை நாளைக்கு இப்படிக் கண்ணாம்பூச்சி விளையாட்டு விளையாட முடியும்? அந்த விநாடியில்—அவள் அவனைப் பார்த்த அந்த பார்வையில் எழுந்து போய் அவளை வாரி எடுத்து நெஞ்சோடு சேர்த்து அணைத்துக்கொண்டு, அவளது நீல நிற விழிகளில் பொங்கும் கண்ணீரைத் துடைத்து சமாதானப்படுத்த வேண்டும் என்று பரபரத்தன அவன் கைகள்.

எழுந்து அவள் அருகே போனான். மெதுவாக அவள் கரத்தைப் பற்றினான், அவனது பிடிக்குள் அகப்பட்ட அவள் கரம் மெல்ல நடுங்குவதை உணர முடிந்தது அவனால். மற்றொரு கையால் அவள் முகத்தை நிமிர்த்தி அவளது கண்களையே ஆழமாகப் பார்த்துக்கொண்டு, "நான் இருக்கிறேன் எலைன் உனக்கு. ஜென்னிக்கு இருவருக்குமே நான் இருக்கிறேன். எப்போதும் உங்களுக்குத் துணை. ஆதரவு எல்லாமாக நான் இருக்கிறேன்..." என்று குரல் கரகரக்க, சொற்கள் தடுமாறக் கூறி முடித்தபொழுது அவன் கண்களும் லேசாகக் கலங்கிவிட்டன.

அவன் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்த எலைன் அவன் கண்கள் கலங்குவதைக் கண்டதும் அந்தக்



கண்ணீருக்கிடையே சுடர்விட்டுப் பெருகும் அன்பை உணர்ந்து கொள்ள முடிந்தது அவளால். அதன் இதயத்தைப் புரிந்து கொள்ள முடிந்தது. ஏதோ கூற வாயெடுத்தாள் அவள். ஆனால், உணர்ச்சிப் பெருக்கில் சொற்கள் வெளிவரவில்லை. குபிரென்று அந்த நீலநிற விழிகள் நீரால் நிரம்பியதும், "எ...லை...ன்" என்று குரல் தழுதழுக்க அவளை அருகே இழுத்து அணைத்துக்கொண்டு விட்டான் நடராஜ். அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் எலைன். அவளது கண்ணீர் அவன் சட்டையை நனைத்தது. அடர்த்தியான அவளது கூந்தலில் தன் முகத்தைப் புதைத்துக் கொண்டான் நடராஜ் அதிலிருந்து கிளம்பிய ஷாம்பூ வாசனை அவன் சுவாசத்தில் கலந்தது.

"ஐ லவ் யூ எலைன்—ஐ லவ் யூ—"

அவன் மார்பில் தன் இதழ்களைப் பதித்து விம்மிக் கொண்டே கேட்டாள் அவள் :

"நட்.. ராஜ் யூ ரியலி மீன் தட்.. நிஜமாவா?"

அவள் முகத்தைத் தன் முகத்திற்கு நேராகத் திருப்பினான் நடராஜ்.

"உண்மைதான் எலைன்!"

"நடராஜ்... நடராஜ்" என்று உள்ளம் உருகிக் கரைய, துடிக்கும் இதழ்களோடு அவனைப் பார்த்தாள் எலைன். நடராஜ் குனிந்து அவள் இதழ்களிடம் கன்னங்களிடம் முத்தமிட்டபோது அவை அவளது கண்ணீரால் உப்புக் கரித்தன.

"நோ, நோ டியர்..." என்று அவள் கண்ணீரைத் துடைத்தான் நடராஜ் : "அழாதே எலைன்! இனி, நான் நான் எப்போதும் உன்னோடு இருக்கப் போகிறேன்!"

அதைக் கேட்ட எலைன், அவன் கழுத்தில் தன் கரங்களை மாலையாகப் போட்டு அவனை இறுகத் தழுவிக் கொண்டாள்.

"மீண்டும் ஒருமுறை சொல்லுங்கள், நடராஜ் சொல்லுங்கள்! விடாளைப்போல் நீங்கள் பொய் சொல்லவில்லையே! அவனைப்போல் ஏமாற்றவில்லையே! சொல்லுங்கள்! நான் உங்களைக் காதலிப்பதைப்போல் நீங்களும் காதலிக்கிறீர்கள் அல்லவா?"—அவன் காதருகே தன் இதழ்களால் அவன் கன்னத்தை உரசிக்கொண்டே கனவில் பேசுகிற மாதிரி கேட்டபோது நடராஜின் இதயம் சிலிர்த்தது.

"ஐ லவ் யூ வித் ஆல் மை ஹார்ட் எலைன். உன்னை நான் காதலிக்கிறேன்... காதலிக்கிறேன்...!

அவன் தோளில் குழந்தையாகத் தலையைச் சாய்த்து அவனது அணைப்பில் அடங்கித் தன்னை மறந்து பேசினாள் எலைன்:

"ஐ நெவர் தாட் ஐ வில் ஃபால் இன் லவ் வித் சம் ஒன் அகெய்ன். பட், நௌ ஐ லவ் யூ ராஜ்... ஐ லவ் யூ..."

அதைக் கேட்டதும் திடீரென்று மின்னல் ஒன்று தன் நெஞ்சைப் பிளந்துகொண்டு உள்ளே பாய்ந்ததைப் போல் சொல்ல முடியாத, அளவு கடந்த வேதனையோடு தடுமாறிக் கொண்டு நின்றான் நடராஜ். ராஜ் என்றா தானே கூப்பிட்டாள் எலைன்? ராஜ், ராஜ்... ராஜ் இதுவரை அவனை அப்படி அழைக்கும் உரிமை பெற்றவள் அனு ஒருத்திதான். அவளுக்கு மட்டும் தான் அவன் ராஜ். மற்ற எல்லோருக்கும் அவன் நடராஜ் அல்லது ராஜூதான். அவனது நண்பர்களோ அல்லது வேறு யாராவதோ அவனைத் தவறிப்போய் ராஜ் என்று அழைத்து விட்டால்கூடத் தாங்கமாட்டாள் அனு. "அவர்களை ராஜூ என்று அழைக்கச் சொல்லுங்கள்



ராஜ் எனக்கு மட்டுமே சொந்தமான செல்லப் பெயர் அது. வேறு யாரும் அந்தப் பெயரைப் பங்குபோட்டால் எனக்குப் பிடிக்காது" என்பாள் அவள்.

இப்போது...?

பெயரை மட்டுமல்ல இதயத்தையும் வேறு ஒருத்திக்குப் பங்கு போட்டுக் கொடுத்துவிட்டான் நடராஜ்.

அவனது மனப் போராட்டத்தை அறியாத எலைன், "என் மனம் எப்படி இப்படி மாறியது, எதனால் இந்த மாற்றம் ஏற்பட்டது என்று தெரியவில்லை ராஜ்..." என்று பரவசத்தோடு ஏதேதோ பேசிக்கொண்டே போனாள்.

'எனக்கும் என் மனம் எப்படி இப்படி மாறியது என்பது தான் புரியவில்லை அனு. அனு, என்னை மன்னித்து விடு..." என்று உள்ளுக்குள் தவித்தான் நடராஜ்.

20212
12 363030 3

சலசல வென்று கொட்டிய குழாய்த் தண்ணீரின் சப்தத்தில் திடுக்கிட்டுக் கண் விழித்தான் நடராஜ். அந்த இருட்டில் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை. சிகரெட்டிற்காகக் கையை மட்டும் நீட்டித் தடவிப்பார்த்தான். கட்டிலின் அருகே இருக்கும் ஸ்டாண்ட் அவன் கைக்குத் தட்டுப்படவில்லை. அப்போதுதான் தான் படுத்துக் கொண்டிருப்பது தன் ஓட்டல் அறையல்ல என்பது அவனுக்குப் புரிந்தது. கட்டிலின் மறு ஓரத்திற்குப் புரண்டு, எழுந்து உட்கார்ந்து இரவு மேசை மேலிருந்த நைட் லைட்டைப் போட்டு, அருகே இருந்த தன் கை

கடிகாரத்தில் மணி பார்த்தான். மணி ஆறு முப்பது. சுற்றிப்பார்க்க பின்னர்தான் எலைனின் அறையில் அவளோடு அந்த இரவைக் கழித்திருப்பது புரிந்தது. அது ஏதோ கனவு என்று நினைத்துக் கொண்டிருந்தான் நடராஜ். அந்த அறையில், அவளது கட்டிலில் அமர்ந்திருப்பதிலிருந்து இரவு நடந்ததெல்லாம் கனவல்ல, நினைவுதான் என்பதை உணர்ந்து கொண்டான் நடராஜ்.

தண்ணீர் கொட்டும் சப்தம் நின்றது. டக்கென்று பாத்ரூம் கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்தாள் எலைன். அழகான வெளிர் நீலத்தில் குளியல் உடை அவளுடலைத் தழுவிக் கொண்டிருந்தது. கம்மென்று எழுந்த சோப்பின் மணமும், பேதிங் சால்டின் மணமும் நடராஜின் நாசியைத் தாக்கின. புலர்ந்தும் புலராத காலைப் பொழுதில் மலர்ந்தும் மலராமலும் இருக்கும் ரோஜாப்பூவில் பனித்துளிகள் ஒட்டிக் கொண்டிருப்பதைப் போல் முகத்தில் முத்து முத்தாக உருண்டோடும் தண்ணீர்த் துளிகளுடன் பாத்ரூம் வாசலில் நின்று கொண்டு அவனைப் பார்த்து அழகாகப் புன்னகை புரிந்தாள் எலைன்.

''குட் மார்னிங் ராஜ்.''

''ஏஞ்சல் கேர்ல்'' என்று ரிச்சர்ட் அவளை வர்ணித்தது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது என்று நினைத்துக் கொண்ட நடராஜ், அவளையே, கண்ணிமைக்காமல் பார்த்தான். குளியல் உடையுடன் நின்றுகொண்டிருந்த அவளது தோற்றம் அவன் உள்ளத்தைக் கிறங்க வைத்தது. கட்டிலின் அருகே வந்தவளைக் கை நீட்டித் தன் அருகே இழுத்துக் கொண்டான் நடராஜ்.

''மார்னிங்...'' என்று அவள் கன்னத்தில் தன் இதழ்களை பதித்துக் கொண்டான். அவளுடலிலிருந்து கிளம்பிய நறுமணம் அவன் சுவாசத்தில் கலந்தது.



ஆழமாக மூச்சை உள்ளுக்கு இழுத்து அந்த மணத்தை இதயத்திற்குள் நிரப்பிக் கொண்டான். மென்மையான அவளுடல் அவன் மேல் சாய்ந்தது.

''ஐயோ, நான் குளியல் உடையில் இருக்கிறேனே விடுங்கள்! நன்றாக டிரஸ் செய்து கொண்டு விடுகிறேனே!...'' என்று போலியாகச் சிணுங்கினாள் அவள்.

''நீ இப்படியேதான் இருக்கவேண்டும். இந்த உடையில் நீ தேவதை மாதிரி...''

அதைக் கேட்டதும் மெதுவாகக் கண்களை மட்டும் உயர்த்தி அவனைப் பார்த்தாள் அவள். சிரிக்கும் அந்தக் கண்கள் அவனை பரவசப்படுத்தின.

''எ...லை...ன்...'' என்று அவள் முகத்தைத் தன் முகத்திற்கு நேராக இழுத்தான் நடராஜ். அவன் மார்பில் பூங்கொடியாகப் படர்ந்தாள் அவள். ''வெகு நாட்களுக்குப் பின்பு நான் நேற்றிரவுதான் முதல் முறையாகச் சந்தோஷமாக இருந்தேன் ராஜ். அதற்கு நீங்கள் தான் காரணம்'' என்று இரகசியம் பேசுகிற குரலில் பரவசத்தோடு கூறிக் கொண்டே அவன் கன்னத்தோடு தன் கன்னத்தை இழைய விட்டாள் அவள். ஷேவ் செய்யப் படாத அவன் முகத்தில் அவள் முகம் உராய்ந்தபோது அவன் உள்ளத்தைக் குறுகுறுக்க வைத்தது. அவள் தன் விரல்களால் அவனது கேசத்தைக் கலைத்துக் கொண்டே, ''நீங்கள் ஓர் அற்புதமான மனிதர். இல்லையா?'' என்று அவன் காதருகே போய்க் கிசுகிசுத்தாள்.

''அப்படியா'' என்று கேட்டு விட்டுப் புன்னகையோடு அவள் முகத்தை நிமிர்த்தி, அவள் கண்களையே பார்த்தான் நடராஜ். பெரிய கடல் மாதிரி இருந்த அவளது நீலநிற விழிகளில் அவன் பார்வை நீச்சலடித்தது. அவள் பார்த்த குறுகுறுவென்று குறும்புத்தனம் பொங்க அவள்

பார்வையும் ஆண்மை தவழும் கம்பீரமான முகமும் அவளைக் கவர்ந்தன.

"என்ன பார்க்கிறீர்கள் ராஜ்?"

"ஒன்றுமில்லை, எலைன்".

"ரா...ஜ்! நீங்கள் ஒருவர்தான் என் உலகம்! ஒரு நிமிஷம்கூட என்னால் உங்களை விட்டுப் பிரிய முடியாது. எவ்ரி திங் இன் தி வேல்ட். ஐ வாண்ட் டு பி வித் யூ... ஆல்வேஸ் டியர்".

அவள் குரலில் இருந்த ஏதோ ஒன்று அவன் உள்ளத்தை உருக்கியது. அவளை இறுக அணைத்துக் கொண்டு "கவலைப் படாதே, எலைன்! நான் எப்போதும் உன்னோடு இருப்பேன்!" என்றபோது அவன் குரலும் கரகரத்தது. கண்களை மூடிக்கொண்டாள் அவள். அவளது கண்களில் வழிந்த கண்ணீர் அவனது மார்பில் விழுந்தது.

"உண்மையாகத்தானே சொல்கிறீர்கள்? பின் வியானைப்போல் ஏமாற்றிவிட்டுப் போய்விட மாட்டீர்' களே? அந்த ஏமாற்றத்தை என்னால் தாங்கிக்கொள்ளவே முடியாது ராஜ்.

ஏமாற்ற மாட்டேன் எலைன். உன்னை நான் ஏமாற்றவேமாட்டேன் என்னை நம்பு எலைன்! தயவுசெய்து அழாதே எலைன்".

அவன் குரலின் தொனியிலிருந்து அவன் உள்ளத்தி லிருந்து அந்தச் சொற்கள் வெளிவருகின்றன என்பதைப் புரிந்துகொண்டாள் அவள்.

"என்னை கொஞ்சம் அழவிடுங்கள் ராஜ்! என் துன்பக் கண்ணீரையெல்லாம் இந்த நிமிஷத்தோடு நான் அழுது போக்கிவிட வேண்டும்!" என்று அவன் தோளில்



முகத்தைப் புதைத்துக்கொண்டு அழுதாள். குமுறல் அடங்கும்வரை அழுது ஓயட்டும் என்று அவளை அப்படியே அணைத்தபடி பேசாமல் படுத்துக் கொண் டிருந்தான் நடராஜ். நெஞ்சை வெடித்துக்கொண்டு கிளம்பிய கேவல்களைக் கண்டு 'ஓ! எவ்வளவு குமுறலை இத்தனை நாட்களாக உள்ளுக்குள்ளேயே அடக்கி வைத்துக் கொண்டிருக்கிறாள் இவள்' என்று நினைத்துக் கொண்டான் அவன். அழுகையின் நடுவே குரல் கரகரக்கப் பேசிக்கொண்டே போனாள் எலைன்.

"ராஜ்... அன்றொரு நாள் ஜென்னி 'எனக்கு அப்பா கிடைத்துவிட்டார். பீட்டர், ஜார்ஜ், சாண்ட்ரா, ஜீன் இவர்களைப்போல் நானும் டாடி என்று கூப்பிட முடியும் இனிமேல்' என்று என் கழுத்தைக் கட்டிக்கொண்டு உற்சாகம்பொங்கக் கூறியபோது—நான் நினைக்கவே இல்லை ராஜ். நீங்கள்—நீங்கள் நமக்குள் இப்படி ஓர் உறவு மலரும் என்று நான் நினைத்துப் பார்க்கக்கூட இல்லை. குழந்தையின் மனம் நோகக் கூடாதே என்பதற்காக ஆறுதலாக ஏதோ கூறியிருக்கிறீர்கள் என்றுதான் நினைத்தேன். அதற்காக உங்களுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால் அவளுக்கு மட்டுமல்ல, எனக்கும் நீங்கள்தான் ஆதரவாக இருக்கப் போகிறீர்கள் என்று நான் கனவில்கூட நினைக்க வில்லை ராஜ். நினைக்கவே இல்லை..."

நடராஜ் மௌனமாக அவள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"கடவுள் என்னை மிகவும் வஞ்சித்து விட்டார் என்று எண்ணிக் கொண்டிருந்தேன். 'மனதை இருளடையச் செய்து, என் வாழ்க்கையை இப்படிப் பாலைவனமாக்க நான் என்ன தவறு செய்தேன் தெய்வமே' என்று தினமும் அழுதுகொண்டே ஜெபம் செய்வேனே, அதை ஆண்டவன் காதுகொடுத்து கேட்

டிருக்க வேண்டும் ராஜ். அதனால்தான் என் வாழ்க்கையில் திரும்பவும் இப்படிப்பட்ட ஒரு வசந்தத்தை ஏற்படுத்தினானோ என்னவோ! நான் கடவுளுக்கு மட்டுமல்ல; உங்களுக்கும்கூட நன்றிசொல்ல வேண்டும் ராஜ்.''

அவள் பேசப் பேச நடராஜின் உள்ளம் உடைந்து சிதறிவிடும் போலிருந்தது. கீழ் உதட்டைக் கடித்துத் தன்னை அடக்கிக்கொள்ள முயன்றான் அவன். 'இவளையா நான் ஏமாற்றுகிறேன்?...இவளிடமா நான் பொய் சொல்லி இருக்கிறேன்? எலைன், நான் திருமணமானவன், தயவு செய்து உன்னிடம் சொன்ன பொய்க்காக என்னை மன்னித்துவிடு' என்று அவள் கரங்களைப் பிடித்துக் கொண்டு கதறவேண்டும் போலிருந்தது. கண்களை இறுக மூடிக் கொண்டான். அப்படியும் கண்ணீருக்கு அணைபோட முடியவில்லை அவனால். கன்னங்களில் கண்ணீர் மாலையாக வழிய ஆரம்பித்தது. அவன் முகத்தைத் தன் கரத்தால் வருடிக் கொண்டிருந்த போது கன்னங்கள் ஈரமாக இருப்பதை உணர்ந்த எலைன், திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்து பார்த்தாள்: ''ஓ! என்ன ராஜ், இது! ஐயாம் ஸாரி ராஜ்.''

''ஓ. கே. பரவாயில்லை, எலைன்.''

''நான் உங்களை, வேதனைப் படுத்திவிட்டேன் நான் இப்படி அழுவது உங்களுக்கு வேதனையைத் தரும் என்று தெரியாமல் போய்விட்டது. இனி அழமாட்டேன்!'' என்றாள் எலைன். அவள் அவனைப் பார்த்து குழந்தை மாதிரிப் புன்னகை செய்தபோது அழுது வடிந்து கொண்டிருந்த வானத்தில் திடீரென்று சூரியன் உதித்ததைப் போல் மிகவும் அழகாக இருந்தது.

''தட்ஸ் இட் பேபி'' என்றான் நடராஜ், உற்சாகத்தை வரவழைத்துக்கொண்டு, எலைன் அவனருகே வந்து அவன் கரத்தைப் பற்றி இழுத்தாள்.



''எழுந்திருங்கள் ராஜ். நீங்கள் இப்போது ஏதாவது சாப்பிடணும்.''

''ஆமாம்? சூடாகக் காபி குடித்தால் தேவலை!''

''இதோ'' என்று அவள் அறையை விட்டு அகன்றாள்.

நடராஜ் பெருமூச்சோடு சுவரையே வெறிக்கப் பார்த்தபடி கட்டிலில் உட்கார்ந்து கொண்டிருந்தான், எலைனின் அன்பை நினைக்க நினைக்க அவனுக்குப் பிரமிப்பாகவும், அதே சமயம் வேதனையாகவும் இருந்தது. அவளது சின்னஞ்சிறு இதயத்தில் அன்பைத் தவிர வேறு எதற்குமே இடம் கிடையாது என்பதை புரிந்து கொண்டான் நடராஜ். தன் மார்பில் இலேசாக மென்மையாகக் கொடிபோல் படர்ந்திருந்த அவளுடல் இன்னும் தன் மார்பின்மீதே இருப்பதைப்போல் அவனுக்கொரு பிரமை உண்டாயிற்று. அவளது உடலிலிருந்து கிளம்பிய நறுமணம் இன்னும் அந்த அறையினுள் சூழ்ந்து கொண்டிருப்பதை உணர்ந்தான் அவன். அவளது கனவுக் கண்கள், பளிங்கு முகம், கவர்ச்சிகரமான உடல் எதையும் இனிமேல் அவனால் மறக்கவும் முடியாது, அவளை அவனால் இழக்கவும் முடியாது. அவனுக்கு அவள் வேண்டும். அவளது இதயம், அவளது அணைப்பு, அவளது உடல் எல்லாமே வேண்டும்.

'எ...லை...ன்...' என்று தனக்குள் அந்தப் பெயரை உச்சரித்துப் பார்த்துக்கொண்டான். அந்தப் பெயர்கூட இனித்தது நடராஜிற்கு.

எழுந்து சாப்பிடப் போனபோது மேசைமீது எல்லாம் தயாராக வைக்கப்பட்டிருந்தன.

''உட்காருங்கள் ராஜ்'' என்றாள் எலைன் புன்னகையோடு.

ஜென்னி எங்கே என்று கேட்க வாய் எடுத்தான் நடராஜ். அதற்குள், அவளே அங்கு வந்துவிட்டாள். பத்துநாள் காய்ச்சலில் சற்று இளைத்துக் களைத்துக் காணப்பட்டாலும், அன்று குளித்து அலங்கரித்துக் கொண்டிருந்ததால் புத்தம் புதிய மலராக நின்று கொண்டிருந்தாள்.

''குட்மார்னிங் அங்கிள்''—அவனருகில் வந்து அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டு கன்னங்களில் முத்தமிட்டாள் ஜெனிஃபர். நடராஜ் அவளை அள்ளித் தன் மார்போடு அணைத்துக் கொண்டான்.

''ஜென்னி டியர், என்னை 'அங்கிள்' என்று அழைக்காதே. 'டாடி' என்று அழை!''—அவன் அவளைத் தன் அன்பு முத்தங்களால் மூச்சுத்திணற அடித்தான்.

''ஓ, டாடி...டாடி'' என்று உற்சாகத்தினாலும் மகிழ்ச்சியினாலும் குரல் கம்ம அவனை இறுகக் கட்டிக் கொண்டாள்.

''இப்போது உடம்பு எப்படியிருக்கிறது ஜென்?''

''நீங்கள் கூட இருக்கும்போது காய்ச்சலெல்லாம் பறந்து போய் விடாதா? நீங்கள் எப்போதும் எங்களுடனேயே இருப்பீர்களா, டாடி?''

ஏக்கம் நிரம்பி வழியும் அவள் கண்களைப் பார்த்துக் கொண்டே கூறினான் நடராஜ்.

''எஸ், டியர்...எஸ்.''

அவள் கண்கள் அகல விரிந்தன. ''ப்ராமிஸ்?'' என்று நம்ப முடியாமல் கேட்டாள்.

''டபிள் ப்ராமிஸ். போதுமா?''

''ஓ தேங்க்யூ டாடி. யூ ஆர் ஸோ வெரி நைஸ்.''—உணர்ச்சிப் பெருக்கில் அவன் தோளில் தன் முகத்தைப்



புதைத்துக்கொண்டு விட்டாள் அவள். நடராஜ் அவளது பொன்னிறக் கூந்தலைப் பரிவோடு வருடிக் கொடுத்தான்.

கண்கள் பனிக்க அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டு நின்றாள் எலைன்.

# 13

‘‘எலைனின் வீட்டிலிருந்தே தொழிற்சாலைக்குப் போன் செய்து அன்று வர இயலாது என்பதைத் தெரிவித்தான் நடராஜ். ஜெனிஃபரும் பள்ளிக்குப் போகவில்லை. மூவரும் எங்காவது வெளியே போக முடிவு செய்தார்கள். மறுநாள் சனிக்கிழமையாதலால் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு விடுமுறையும் இருக்கவே 'ஜல் ஆஃப் ஒயிட்' என்ற இடத்திற்குப் போவது என்று முடிவு செய்து கிளம்பினர். கோடைகாலத்தை உல்லாசமாகக் கழிக்க எல்லோரும் விடுமுறை நாட்களில் அங்குதான் செல்வார்கள். நடராஜும் ஒருமுறை அங்குபோய் இருக்கிறான். அப்போது அற்புதமாக, அழகாகத் தோன்றாத இடங்கள் இப்போது மிகமிக அழகாகத் தோன்றின நடராஜிற்கு. கடற்கரை மணலில் அரைகுறை ஆடையுடன் ஆண்களும், பெண்களும் கவ்ஸ் (Cowes) என்ற இடத்தில் 'சன் பாத்' எடுத்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கு வந்ததும் எலைன் சின்னக் குழந்தையாகவே மாறிவிட்டாள்; ''ஓ! எத்தனை வருடங்களுக்குப் பிறகு நான் இங்கு வருகிறேன் தெரியுமா ராஜ்!'' என்று எல்லையற்ற பரவசத்துடன் கேட்ட அவள் தோள்மீது கை போட்டு அணைத்தபடி நடந்தான் நடராஜ்.

ஜெனிஃபர் அங்கெல்லாம் வந்ததே கிடையாது. பள்ளி, அதைவிட்டால் ரிச்சர்டின் வீடு—இந்த இரண்டு இடங்கள் தான் அவளுக்குத் தெரியும். ரிச்சர்ட் தன்னுடன் அவளை சில இடங்களுக்கு அழைத்துப் போயிருக்கிறாரே தவிர, எலைனுடன் அவள் எங்கும் போனதில்லை. எலைனுக்கும், நடராஜ்"க்கும் நடுவில் இருவர் கரங்களையும் பற்றிக்கொண்டு நடந்தபோது, இந்த உலகத்தில் என்னைவிட அதிர்ஷ்டசாலி யாருமில்லை என்பதைப் போல் அவள் முகம் பெருமிதத்தால் ஜொலித்தது.

''டாடி! இது என்ன, அது என்ன, அங்கே போகலாம், எனக்குப் பசிக்கிறது டாடி'' என்று எல்லாவற்றையும் நடராஜிடம் தான் கேட்டாள்.

அங்கிருந்து வென்ட்னர் என்ற இடத்திற்குப் போனார்கள். அவர்கள் அங்கிருந்த விண்டர் கார்டனுக்குள் நுழைந்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு ஓடினாள் ஜெனிஃபர்.

''டாடி; என்னைப் பிடியுங்கள்...'' என்று பாறைகளுக்கிடையில் மறைந்து அவள் ஒளிந்து கொண்டே ஓடியபோது எதிர்ப்பக்கமாக அவள் அறியாமல் வந்து அவளை அள்ளி அணைத்துக் கொண்டான் நடராஜ். கலகலவென்று சிரித்தாள் அவள். அவளை ஆட்டுக்குட்டியைத் தூக்குவது போல தூக்கிக்கொண்டு மேலே நடந்தான் நடராஜ்.

''என்னை விடுங்கள் டாடி, நான் குழந்தையா'' என்று சிணுங்கியபடி அவன் அணைப்பிலிருந்து திமிறிக் கீழே குதித்து ஓடினாள். அவளது துள்ளலையும், குதிப்பையும், கும்மாளத்தையும் பார்த்துப் பிரமித்துப் போனான் நடராஜ். இத்தனையையும் இவ்வளவு நாட்கள் எப்படி அடக்கிவைத்துக் கொண்டிருந்தாள்





அவள் என்று தனக்குள் வியந்தான் அவன். அவள் முகம் புதிய ஒளி பெற்று, கண்களில் பழைய கலக்கம் எதுவுமின்றி பிரகாசமாகச் சுடர்விடுவதை உணர்ந்து கொண்டான் நடராஜ்.

விண்டர் கார்டனை விட்டுக் கடற்கரைக்கு வந்தார்கள். கடலில் நீந்திக் கொண்டிருந்தவர்களைப் பார்த்ததும், ''நாமும் நீந்தப்போகலாமா ராஜ்?'' என்று கேட்டாள் எலைன்.

''ஓகே'' என்றான் நடராஜ்.

''நானும் நீந்தப் போகிறேன்'' என்று குதித்தாள் ஜெனிஃபர்.

''நோ டியர். இப்போதுதான் உடம்பு சரியாகியிருக்கிறது. அதற்குள் திரும்பக் காய்ச்சலை வரவழைத்துக் கொண்டு விடாதே. நீ இங்கேயே சன் பாத் எடுத்துக் கொண்டிரு. நாங்கள் அரைமணி நேரத்தில் வந்து விடுகிறோம்'' என்று காண்டி பாக்கெட் ஒன்றைக் கொடுத்துச் சமாதானப்படுத்தினான் நடராஜ்.

கையோடு கொண்டு வந்திருந்த ஸ்விம்மிங் சூட்டை மாற்றிக்கொண்டு இருவரும் நீரில் இறங்கினர். உடல் முழுதும் நீரில் மூழ்கி இருக்க, முகம் மட்டும் வெளியே தெரிய நீந்தும் எலனைப் பார்த்ததும் தாமரை மலர் ஒன்றுதான் நீந்துகிறதோ என்ற ஐயம் தோன்றியது நடராஜிற்கு. அரைமணி நேரம் சிரித்துக்கொண்டும், போட்டிபோட்டுக் கொண்டும் இருவரும் நீந்திக் களித்தார்கள். இதற்கு முன் அனுவோடு இருந்தபோது கூட இப்படிப்பட்ட ஓர் இன்பத்தை அடைந்ததில்லை நடராஜ். அனுவோடு அவன் அனுபவித்ததெல்லாம் அமைதியும் நிதானமும் நிறைந்த ஆழமான அன்பு வெள்ளம். ஆனால் எலைன் அவனுக்குக் கொடுத்ததோ அவனை இந்த உலகத்தையே மறக்க வைக்கும் ஆரவார

மான இன்ப வெள்ளம். மாதவியிடமிருந்த கோவலனின் நிலையில் இருந்தான் நடராஜ். எப்போதுமே மனைவியைத் தவிர மற்றொரு பெண்ணிடம் ஏற்படும் அன்பிற்கு வேகம் அதிகம்; மோகமும் அதிகம், அப்படிப்பட்ட கவர்ச்சிகரமான ஒரு மோகத்திற்குத் தான் அடிமையாகி தன்னையே இழந்து கொண்டிருந்தான் அவன்.

''என்ன அருமை, ராஜ்! இங்கேயே இப்படியே வாழ்நாள் முழுவதையும் கழித்துவிட மாட்டோமா என்றிருக்கிறது'' என்று பெருமூச்சு விட்டாள் எலைன்.

''டாடி... மம்மி, வாருங்கள்'' என்று கரை ஓரத்தில் நின்று கொண்டு ஜெனிஃபர் இரண்டு மூன்று முறை கத்திவிடவே, மனமில்லாமல் இருவரும் தண்ணீரை விட்டு வெளியே வந்தனர். உடலைத் துடைத்து, உடை மாற்றிக்கொண்டு வந்ததும் ''படகில் போகலாம் டாடி'' என்று கெஞ்சினாள் ஜெனிஃபர்.

அங்கிருந்து, 'கேனோலேக்'இற்கு வந்து படகில் போகும்போது நடராஜிற்கு ஊட்டியில் அனுவோடும், ஆர்த்தியுடனும் படகில் போனது ஞாபகத்திற்கு வந்து விட்டது. அதேபோல் இப்போதும் அவனே படகை வலித்தான். ஆனால் அனுவிற்கு பதில் அவனெதிரே எலைன் உட்கார்ந்து கொண்டிருந்தாள். ஆர்த்தியைப் போலவே ஜென்னியும் ஆடும் படகில் நடராஜிடமும் எலைனிடமும் மாறிமாறி ஓடிக்கொண்டிருந்தாள். அனுவின் நினைவு வந்ததும் நடராஜின் இதயம் விண்விண்ணென்று வலித்தது. ஒவ்வொரு வினாடியும் அவன் நெஞ்சில் அவள் நினைவு உறுத்திக்கொண்டேதான் இருந்தது. வேண்டுமென்றே அதைப் பொருட்படுத்தாமல் இருக்கவேண்டுமென்று வேறு நினைவுகளில் மனத்தைச் செலுத்துவான். ஆனாலும் அவனுள் அணையாமல் எதனாலும் அணைக்கப்பட முடியாததாக சின்னஞ்சிறு சுடராக ஒளி விட்டுக் கொண்டிருந்த அனுவின் நினைவு





விஸ்வரூபமெடுத்து அவன் நெஞ்சு முழுவதையும் ஆட்கொண்டுவிட்ட அந்த நேரத்தில் தன்னை மறந்தான் நடராஜ். தான் இருந்த இடத்தை மறந்தான். அவன் நெஞ்சம் பாறையாகக் கனத்தது. கண்கள் குளங்களாக மாறின.

எலைன் இரண்டு முறை அவனை ஏதோ கேட்டாள். அவனிடமிருந்து பதில் வராமற் போகவே அவனை நிமிர்ந்து பார்த்தாள். கண்கள் கலங்க எங்கோ வெறிக்கப் பார்த்துக் கொண்டு முகத்தில் இருள்படர உட்கார்ந்திருந்த அவனைக் கண்டு பதறிப் போனாள் அவள். படகு ஆடுவதையும் பொருட்படுத்தாமல் எழுந்து அவனருகே வந்து தோளில் கை வைத்தாள். சுய உணர்வுபெற்ற நடராஜ், அவள் முகத்தைப் பார்த்தான்.

''ஏன் ராஜ், என்ன விஷயம்?''

''நத்திங்...''—அவன் குரல் அவனுக்கே என்னவோ போலிருந்தது.

''யு ஆர் நாட் வெல்? கண்களும், முகமும் என்னவோ போலிருக்கிறதே! திரும்பிப் போய்விடலாம் ராஜ். படகைக் கரைக்குச் செலுத்துங்கள்.''

நடராஜ் பதில் பேசாமல் படகைக் கரையை நோக்கித் திருப்பினான். எலைன் அவனையே கவலையோடு பார்த்துக் கொண்டிருந்தாள். திடீரென்று உற்சாகமும், மகிழ்ச்சியும், இன்பமும் பொங்கிப் பெருகிக்கொண்டிருந்த அந்தச் சூழ்நிலை மாறி ஓர் இறுக்கம் படிவதை உணர்ந்தாள் ஜென்னி. அது அவளுக்குப் பிடிக்கவில்லை. நடராஜின் அருகேபோய் அவன் முகத்தைத் திருப்பினாள்.

''ஓய் பப்பா, யூ ஆர் நாட் வெல்?''

"நோ பேபி ஐயாம் ஆல் ரைட்..."—நடராஜ் புன்னகை செய்ய முயன்றான். அது அழுகையை விட மோசமாக இருந்தது.

"பொய், நீங்கள் என்னவோ போலிருக்கிறீர்கள்"—ஜென்னி அவனை விடுவதாக இல்லை.

"ஒன்றுமில்லை ஜென். இலேசாகத் தலையை வலிக்கிறது அவ்வளவுதான்."

"அப்படியா? நான் தலையைப் பிடித்து விடட்டுமா?"... அவளது கரங்கள் அவன் தலையை அழுத்தியபோது சிரித்துக் கொண்டே அவளது கையைப் பற்றி அதில் முத்தமிட்டான் நடராஜ்.

"ஹாய். இப்போதுதான் நீங்கள் என் டாடி, சமர்த்து டாடி."

அவன் மடியில் பூச்செண்டாக விழுந்தாள் அவள்.

படகை விட்டு இறங்கியதும் நடராஜின் கரத்தோடு தன் கரத்தைப் பின்னிப் பிணைத்துக் கொண்டாள் எலைன். தோளோடு தோள் சேர, கிட்டத்தட்ட அவனது உயரத்திற்கு அவனோடு நடந்து போய்க்கொண்டே, "திடீரென்று முகமெல்லாம் மாறிப் போய் நீங்கள் அமைதியில் ஆழ்ந்து, வெறித்துப் பார்த்தபடி உட்கார்ந்திருப்பதைக் கண்டதும் நான் பயந்தே போய்விட்டேன் ராஜ்" என்றாள் குரல் கம்ம.

அவள் இடையைத் தன் கரத்தால் வளைத்துக் கொண்ட நடராஜ். அவளைத் திரும்பிப் பார்த்து இலேசாகப் புன்னகை புரிந்தான். வழக்கமாக அவன் முகத்திற்கு ஒளிக் கூட்டும் கவர்ச்சிகரமான புன்னகையாக அது இல்லை என்பதை உணர்ந்தாள் அவள் :

"என்ன ஒரு மாதிரியிருக்கிறீர்கள், ராஜ்?"



"நத்திங் எலைன்."

அதை நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள் அவள்.

"உண்மைதான் எலைன். இலேசாகத் தலையை வலிக்கிறது. கொஞ்சம் ஓய்வெடுத்துக் கொண்டால் சரியாகி விடும்."

அதற்கு மேல் அதைப் பற்றி அவள் ஒன்றும் கேட்கவில்லை. ரெஸ்டாரெண்டிற்குப் போய் உணவருந்தி விட்டு அங்கிருந்து கிளம்பினார்கள் அவர்கள். ஜெனிஃபருக்குத் திரும்பிப் போவதில் இஷ்டமே இல்லை. "இன்னும் இரண்டு நாட்கள் இருக்கலாம் டாடி" என்று கெஞ்சினாள் அவள்.

"நோ டார்லிங். நான் ஃபேக்டரிக்குப் போக வேண்டாமா டியர்...?" என்று மறுத்து விட்டான் நடராஜ்.

காரில் வரும்போது அவனது சொந்தத் தொழிற்சாலை வேலைகளை பற்றி, இந்தியாவில் உள்ள அவனது சொந்த தொழிற்சாலையை பற்றி, அவனது பெற்றோரைப் பற்றியெல்லாம் விசாரித்தாள் எலைன். நடராஜும் பதில் சொல்லிக் கொண்டே வந்தான்.

"எப்போது திரும்பி உங்கள் நாட்டிற்குப் போவீர்கள் ராஜ்?"

அவள் இந்தியாவைப்பற்றிப் பேச்செடுத்ததும் நடராஜின் நெஞ்சு திரும்பவும் வலித்தது. தன் உணர்ச்சிகளை வெளியே காட்டிக் கொள்ளக் கூடாது என்று கவனமாகப் பதிலளித்தான் அவன் :

"இங்கே மெஷினரி வேலைகளெல்லாம் முடிந்ததும் அவற்றைக் கப்பலில் ஏற்றிய பின் கிளம்ப வேண்டியது தான்."

"எப்போது அந்த வேலைகள் முடியும்?"

நடராஜ் திரும்பி எலைனைப் பார்த்தான் : "ஏன், இன்னும் ஆறேழு மாதங்கள் ஆகலாம்." எலைன் பெருமூச்சு விட்டாள்.

"டாடி, எங்களையும் உங்களோடு அழைத்துக் கொண்டு தானே போவீர்கள்?"

"இதென்ன கேள்வி டார்லிங்! அழைத்துக் கொண்டு தான் போவேன்."

வெளியே பார்த்துக் கொண்டுவந்த எலைன், சடாரென்று திரும்பி அவனைக் கூர்மையாக பார்த்தாள்.

"நிச்சயமாகவா ராஜ்?"

"என்ன அப்படிக் கேட்கிறாய் எலைன்! நீங்கள் இல்லாமல் என்னால் எப்படிப் போக முடியும்? எப்படி இருக்க முடியும்?"

"ரா...ஜ்..." என்று அவனை நெருங்கி அவன் தோளில் தலையைச் சரித்துக் கொண்டாள் அவள். கை நீட்டி அவளை இன்னும் அருகே இழுத்துக் கொண்டான் நடராஜ்.

"உங்கள் பெற்றோர் ஒன்றும் சொல்லமாட்டார்களா ராஜ்? என்னைத் திருமணம் செய்து கொள்வதை ஆட்சேபிக்க மாட்டார்களா? அதிலும் என்னைப் பற்றி, ஜெனிஃபரைப் பற்றி எல்லா விவரங்களும் தெரிந்தால்?"

உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து ஆழமான பெருமூச்சு ஒன்று வெடித்துக் கொண்டு கிளம்பியது நடராஜிடமிருந்து. பேச முடியாமல் துக்கம் அவன் தொண்டையை அடைத்தது. பெற்றோரது ஆட்சேபணையைப் பற்றிக் கேட்கிறாளே இவள், அதற்கு மேல் அனு...? அவளுக்கு இந்த விஷயம் தெரிந்தால் அவள்



நெஞ்சம் வெடித்துச் சிதறி விடாதா? அந்த பிரச்னையை எப்படிச் சமாளிக்கப் போகிறான் அவன்? அனுவைப் பற்றி எலைனுக்குத் தெரிந்தால்? எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தபோது நடராஜின் இதயம் நடுங்கியது. பின் விளைவுகளைப் பற்றி யோசித்துப் பார்க்காமல் குழந்தையாக நடந்து கொண்டு விட்டானா அவன்?

"என்ன ராஜ், பதிலே இல்லை. என்ன யோசிக்கிறீர்கள்?"

நடராஜ் தன் சிந்தனையிலிருந்து விடுதலை பெற்றான். "அது அப்போதைய கவலை. அதிலும் என்னுடைய கவலை. அவர்களையெல்லாம் சமாளிக்க வேண்டியது என் பொறுப்பு. நீ ஏன் அனாவசியமாகக் கவலைப்படுகிறாய் எலைன்?"

"உங்களுடைய கவலை என்னுடைய கவலை இல்லையா டியர்?"

இந்தப் பதிலில் உருகிப் போனான் நடராஜ்! "எ...லை...ன் என்று குரல் நடுங்க அவள் தலையைப் பரிவோடு வருடினான். 'என்னுடைய கவலையோ, வருத்தமோ, என்னோடு இருக்கட்டும். அதில் நீ பங்கு கொள்ள வேண்டாம். அதில் நான் உனக்கு பங்கு கொடுக்கவும் மாட்டேன். ஏற்கனவே நீ எவ்வளவோ துன்பப்பட்டு விட்டாய். அதனால் என்னுடைய இன்பத்தில், என்னுடைய சந்தோஷத்தில் மட்டும் பங்கெடுத்துக் கொள். போதும்."

அதற்குப் பின் இருவரும் பேசவே இல்லை. கார் எலைனின் அபார்ட்மெண்ட் வாசலில் வந்து நின்றது பின் சீட்டில் தூங்கிக் கொண்டிருந்த ஜெனிஃபரைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கினான் அவன்.

"நான் என் அறைக்குப் போய் விட்டு நாளைக்கு வருகிறேன், எலைன்" என்று அனுமதி கேட்டான்

நடராஜ். எலைன் அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு ஒரு விநாடி அமைதியாக நின்றாள். பின் "அறை வேறு தனியாக எதற்கு ராஜ்? அதைக் காலி செய்து விட்டு நாளைக்கே இங்கே, எங்களுடனேயே வந்து விடுங்களேன்..." என்றாள். உடனே பதிலளிக்கவில்லை நடராஜ். யோசித்தபடி உட்கார்ந்திருந்தான்.

"என்ன தயக்கம் ராஜ்?"

"ஒன்றுமில்லை எலைன்..."

"அப்படியானால் வருகிறீர்களா?"

நடராஜ் சரி என்று தலையசைத்தான்.

"நாளைக்கே...?"

"நாளைக்கே."

"ஓ! தேங்க்யூ ராஜ்" கார் கதவின் மீதிருந்த அவன் கரத்தைப்பற்றி அழுத்தினாள், அவள். அந்தக் கரத்தில் குனிந்து முத்தமிட்டான் அவன்.

"நாளைக் காலையில் சீக்கிரம் வந்து விடுங்கள் ராஜ். உங்களுக்கு பிரேக்-ஃபாஸ்ட் இங்கேதான். இரவு முழுதும் தூங்காமல் எப்போது விடியும், எப்போது நீங்கள் வருவீர்கள் என்று காத்துக் கொண்டிருப்பேன்."

"ஓகே, டியர். சரியாகக் காலை எட்டு மணிக்கு நான் இங்கே இருப்பேன்."

எலைன் அழகாக, மனநிறைவோடு புன்னகை புரிந்தாள்.

"குட் நைட் ராஜ்..."

"குட் நைட் எலைன்."

அவள் போவதையே பார்த்துக் கொண்டிருந்து விட்டு, அவள் உருவம் பார்வையை விட்டு மறைந்ததும் இயந்திரமாகக் காரைக் கிளப்பினான் நடராஜ்.



அவன் இதயம் இரும்பாகக் கனத்தது.

அறைக்குள் நுழையுமுன் தபால் பெட்டியைத் திறந்து பார்த்தான் நடராஜ். அனுவிடமிருந்து இரண்டு கடிதங்கள் அவனுக்காகக் காத்துக் கிடந்தன. அவற்றை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தான் நடராஜ். எல்லை யற்ற வேதனை அவன் மனத்தை அரித்தெடுத்தது. கோட்டை கழற்றி வெறுப்போடு நாற்காலியில் வீசி எறிந்து விட்டுக் கட்டிலில் சரிந்தான். கவரைக் கிழித்து கடிதங்களைப் பிரித்தபோது அந்த வெளிர் நீல நிற லெட்டர் ஹெட் காகிதங்களிலிருந்து அனுவின் செண்ட் மணம் மெல்லப் பரவுவதைப் போன்ற பிரமை ஏற்பட்டது நடராஜிற்கு. கடிதத்தைப் பிடித்திருந்த கரங்கள் இலேசாக நடுங்கின. இதயம் படபடத்தது. வழக்கம் போலத் தன் இதயத்தையே பிய்த்தெடுத்து அதில் வைத்து அனுப்பியிருந்தாள் அனு. வார்த்தைக்கு, வார்த்தை வரிக்கு வரி தன் அன்பைக் கொட்டி நிரப்பி யிருந்தாள், ஒவ்வோர் எழுத்தும் ஓராயிரம் ஊசிகளாக மாறி, நடராஜின் இதயத்தைக் குத்தி கிழித்தன.

அவளது சத்தியமான, பரிபூரணமான காதலில் மூழ்கி உள்ளம் உருகக் கடிதத்தைப் படித்துக் கொண்டு வந்த நடராஜினால் மேலே தொடர்ந்து படிக்க முடியாதவாறு கண்களைக் கண்ணீர் திரையிட்டு மறைத்தது. கடிதங்களைப் பக்கத்தில் போட்டுவிட்டு அனுவின் புகைப் படத்தைக் கையில் எடுத்துக் கொண்டு இமைக்காமல் அவளையே பார்த்தான்.

பார்வையில் ஆசை வெள்ளம் பெருக அதிலிருந்து கள்ளம் கபடமற்ற குழந்தைச் சிரிப்புடன் அவனையே பார்த்தாள்.

"நான் உங்கள் மீது எவ்வளவு அன்பும், நம்பிக்கையும் வைத்திருக்கிறேன் ராஜ். நீங்கள் எனக்கு இப்படிப் பட்ட ஒரு துரோகத்தைச் செய்யலாமா ராஜ்?" என்று

கேட்பது போலிருக்க அந்தப் பார்வையைச் சந்திக்க இயலாதவனாகப் புகைப்படத்தைத் திருப்ப விடாமல் மூடி வைத்து விட்டான் நடராஜ்.

படத்திலிருந்த அனுவின் பார்வையிலிருந்து தப்பித்துக்கொள்ள முடிந்தது. ஆனால் மனத்திலிருந்த அனு கேட்கும் கேள்விகளிலிருந்து எப்படித் தப்பிக்க முடியும் அவனால்? தலையணையில் முகத்தைப் புதைத்துக்கொண்டு 'என்னை மன்னித்து விடு அனு. தயவு செய்து மன்னித்துவிடு' என்று குமுறினான்.

"நான் எப்படி இவ்வாறு மாறிப் போனேன் என்று எனக்கே தெரியவில்லை அனு. எலைனின் அழகு மட்டும் என்னை மாற்றிவிடவில்லை. கவர்ச்சிகரமான அந்த முகத்தில் நான் மயங்கிப் போய் விடவில்லை. ஆனால் என்ன என்று சொல்ல முடியாத ஒரு சக்தி என்னை அவள்பால் ஈர்த்துக்கொண்டுவிட்டது. 'விட்ட குறை, தொட்ட குறை' என்பார்களே. அதே மாதிரி ஒரு குறைதான் இதுவும் என்று நான் நினைக்கிறேன். நான் மிகவும் பலம் வாய்ந்தவன் என்றுதான் நீ நினைத்துக் கொண்டிருக்கிறாய்! என்னிடம் இவ்வளவு பலவீனமும் உண்டு என்பது இப்போதுதான் எனக்கே தெரிந்தது. தயவு செய்து என்னை என்னிடமுள்ள பலவீனத்தை மன்னித்து விடு, அனு!" என்று வாய்விட்டுப் புலம்பினான் நடராஜ்.

தொழிற்சாலை வேலைகள், அவை முன்னேறும் விதம், அவனது தந்தையின் உடல்நிலை, தாய் அவனை விசாரித்து எழுதச் சொன்னது, ஆர்த்தியின் ஏக்கம் எல்லாவற்றையும் பற்றி எழுதி விட்டு நீங்கள் சீக்கிரம் வந்து விடுங்கள் ராஜ் உங்கள் மகன் பிறக்கும் போது 'நீங்கள் என் அருகில் இருக்கவேண்டும், நீங்கள் பக்கத்திலிருந்தால் எனக்கு எந்தவித பயமும் இருக்காது. 'என்னோடு என்னுடைய இன்ப ,, துன்பங்களில் பங்கு



கொள்ள நீங்கள் என் அருகிலேயே இருக்கிறீர்கள்' என்பதுதான் எனக்குப் பெரிய ஆறுதல். டானிக்குகளாலும், மாத்திரைகளாலும் கொடுக்க முடியாத சக்தியையும், பலத்தையும் நீங்கள் என்னோடு இருக்கிறீர்கள் என்ற எண்ணம் எனக்கு கொடுக்கும் ராஜ். சீக்கிரம் வந்து விடுங்கள்' என்று ஓராயிரம் முறை அவள் எழுதியிருந்தது நடராஜின் நெஞ்சைக் கசக்கிப் பிழிந்தது.

அவன் கூட இருந்தால் போதும் அனுவிற்கு: எப்படிப்பட்ட துன்பத்தையும் தாங்கிக்கொண்டு விடுவாள் அவள். ஆனால், எப்போது தொழிற்சாலை வேலைகள் முடியும், அடுத்த விமானத்திலேயே பறந்து போய் அனுவின் மடியில் குழந்தையாகப் படுத்துக் கொண்டு 'நீ இல்லாமல் இத்தனை நாட்கள் நான் எப்படித் தவித்துப் போய்விட்டேன் தெரியுமா டார்லிங்!' என்று தன் உணர்ச்சிகளைக் கொட்டத் துடித்துக் கொண்டிருந்தானே, அந்த நடராஜாக இல்லை அவன். இப்போது எலைனையும் ஜெனிஃபரையும் விட்டு எப்படி தம்மால் பிரிந்து போக முடியும் என்று தயங்கிக் கொண்டிருக்கும் புதிய நடராஜ் இவன். என்னவானாலும் இவர்களையும் அழைத்துக்கொண்டு தான் விமானமேறவேண்டும் என்று தனக்குள் உறுதியாக முடிவு செய்து கொண்டிருந்தான் அவன்.

ஆனால், அவர்களை அழைத்துப் போய் அனுவிடம் எதைச் சொல்லி எப்படி சமாதானப்படுத்தப் போகிறான் அவன்? எலைனுக்கு 'அனுவைப் பற்றியும், ஆர்த்தியைப் பற்றியும், தெரியவரும்போது அவள்தான் என்ன நினைப்பாள்? அந்தக் கசப்பான உண்மையை எப்படி ஏற்றுக் கொள்ளப் போகிறாள் அவள்? ஜெனியும், ஆர்த்தியும் ஒருவரையொருவர் எப்படிப் பார்த்துக் கொள்வார்கள் : பழகுவார்கள்? என் தந்தையின் அன்பில் பங்குபோட வந்துவிட்டாளே என்று இருவருமே

ஒருவர் மீது மற்றொருவர் பொறாமை படுவார்களா? அல்லது ஒற்றுமையாக இணைந்து போவார்களா?

அனுவைப் பற்றி அவன் நன்றாக அறிவான். முதலில் இதைக் கேட்டு அவள் மனம் உடைந்து போனாலும், பின்னால் அவனுக்காக, அவனது மன நிறைவிற்காக விட்டுக் கொடுத்து அனுசரித்துப் போவாள் அவள். அவனுடைய இன்பத்திற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கும் அனுவின் உள்ளம் அவனுக்கு நன்றாகத் தெரியும். ஆனால் அப்பாவும் அம்மாவும், மற்றவர்களும் இதை எப்படி ஒப்புக்கொள்வார்கள்? சிந்தித்து மனக் குழப்பத்திற்கு விடை கிடைக்காமல் தடுமாறினான் நடராஜ்.

அவள் கடிதத்திலிருந்த சில வரிகள் அவன் நெஞ்சை நிறைத்தன. 'சில நாட்களாக நீங்கள் ஏன் சரியாகக் கடிதமெழுதவில்லை! உடம்பிற்கு ஒன்றுமில்லையே! எனக்கு அதே கவலையாக இருக்கிறது ராஜ். இல்லை, வேலை அதிகமா? இங்கே இருக்கும்போது எப்போது பார்த்தாலும் வேலை, வேலை என்று சாப்பாட்டைக் கூட மறந்து விட்டு அலைவீர்களே, அப்படி அலைந்து உடம்பைக் கெடுத்துக் கொள்ளாதீர்கள். வேளைக்கு உங்களைக் கவனிக்க இங்கே நானிருந்தேன். அங்கே யாருமில்லை ராஜ். நான் எப்படி அனுப்பினேனோ அதேபோல் இளைக்காமல் என்னிடம் வந்து சேர்ந்து விடவேண்டும் தெரியுமா ராஜ்' என்று எழுதியிருந்த அனுவின் பரிவு அவனைக் கலக்கியது.

உடனே எழுந்து மேசை விளக்கைப் போட்டுக் கொண்டு அனுவிற்குக் கடிதம் எழுதத் தொடங்கினான். குற்றம் செய்த நெஞ்சின் குறுகுறுப்போ என்னவோ, வழக்கத்தைவிட அதிக பக்கங்களோடு வரிக்கு வரி, அனு டார்லிங், அனு டியர் என்று வார்த்தைகளின் அன்பைக் கொட்டித் தன் நெஞ்சத்து உறுத்தலை



மறைக்க முயன்றான். 'ராஜாப் பயல் பிறக்கு முன் நான் அங்கே ஓடி வந்துவிட மாட்டேனா அனு? உன் அருகிலேயே உட்கார்ந்து நானே உனக்கு எல்லாம் செய்யமாட்டேனா?' என்றெல்லாம் எழுதிவிட்டுக் கடைசியில் எலனைப் பற்றியும் ஜெனிஃபரைப் பற்றியும் சுருக்கமாகக் குறிப்பிட்டான்.

அவர்கள் வீட்டில் வந்து கெண்டாகத் தங்கச் சொல்லி என்னை மிகவும் வற்புறுத்துகிறார்கள். அதை தட்ட முடியாததால் நான் அறையைக் காலி செய்துவிட்டு நாளைக்கே அங்கு போகிறேன். 'நீ இனிமேல் கடிதங்களை அந்த விலாசத்திற்கோ அல்லது தொழிற்சாலை முகவரிக்கோ எழுது' என்று எலனின் வீட்டு விலாசத்தை அதில் எழுதி கடிதத்தை முடித்தான். அப்போதுதான் அவனது நெஞ்சக் குமுறல் ஓரளவு அடங்கியது.

'அனுவிற்கு ட்ரங்கால் போட்டுப் பேசினால் என்ன? அன்றே அவளை பார்த்த மாதிரி செய்தபோது தொடர்பு கிடைக்கவில்லையே! இன்று பேசினால் என்ன' என்று தோன்றவே ரிஸிவரை எடுத்து ஆபரேட்டரிடம் நெம்பரைக் கொடுத்து 'கால்' புக் பண்ணச் சொல்லிவிட்டுத் துடிக்கும் உள்ளத்தோடு காத்திருந்தான் நடராஜ். அந்த லைன் கிடைத்து அனுவின் குரலையும், ஆர்த்தியின் குரலையும் கேட்கும்வரை தூக்கம் வராது அவனுக்கு.

டெலிவிஷனை ஆன் பண்ணிவிட்டுக் கண்கள் அதில் பதிந்திருக்க, மனம் வேறு எங்கோ சுற்றி அலைய பத்து நிமிடங்களைத் தள்ளினான். பின் ஏதோ ஒரு புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு புரட்டினான். அதைத் தூக்கிப் போட்டுவிட்டு அனுவின் கடிதத்தைத் திரும்பத் திரும்ப படித்தான். கடைசியில் ஒரு பாக்கெட் சிகரெட் துண்டுகள் ஆஷ் ட்ரேயில் நிரம்பியதும் அவனுக்கு லைன் கிடைத்தது. அனுவின் குரலைக்

கேட்டதும் ஒரு விநாடி சிலிர்க்க, நடுங்கும் குரலில் "ஹௌ ஆர் யு டார்லிங்?" என்று கேட்டான் நடராஜ்.

அனுவிடமிருந்தும் உடனே பதில் வரவில்லை. அவளும் நா எழாமல் தடுமாறினாள் : "நீங்கள் எப்படி இருக்கிறீர்கள் ராஜ்!"

"ஐயாம் ஃபைன் டியர். அப்பாவின் உடம்பு எப்படி இருக்கிறது!"

"தேவலை. எழுந்து வீட்டிற்குள் நடமாடும் அளவு தேறியிருக்கிறார். அதைப்பற்றியெல்லாம் கவலைப்பட்டு மனத்தைக் குழப்பிக் கொள்ளாதீர்கள். நான் எல்லாவற்றையும் கவனித்துக் கொள்கிறேன், நீங்கள் எப்போது வருவீர்கள்? அதைச் சொல்லுங்கள்."

"சீக்கிரம் வந்து விடுகிறேன் அனு. வேலைகள் எல்லாம் முடிந்துவிட்டால் அதற்குப் பின் இங்கே ஒரு நிமிடம் கூடத் தங்க மாட்டேன்."

"ஆர்த்தியிடம் ஒரு வார்த்தை பேசிவிடுங்கள். இல்லாவிட்டால் என்னைப் பிய்த்து எடுத்து விடுவாள் அவள்."

ஆர்த்தியின் மழலை மாறாத கொஞ்சும் குரல் அவன் செவிகளின் வழியாக இதயத்தில் பாய்ந்தது.

"ஹாய்... ஆர்த்தி டார்லிங். எப்படி இருக்கேம்மா?"

அதற்குப் பதிலளிக்கவில்லை அவள்.

"சீக்கிரம் வாங்கப்பா. நீங்கள் இல்லாமல் போர் அடிக்கிறது" என்றாள்.

"சீக்கிரம் வந்து விடுகிறேன் கண்ணம்மா. எங்கே, போனிலேயே அப்பாவிற்கு ஒரு கிஸ்!" அவள் முத்தமிட்ட சப்தம் நடராஜிற்கு தெளிவாகக் கேட்கவில்லை.



"ஐ காட் இட் கண்ணம்மா" என்று அவளும் பதிலுக்கு முத்தமிட்டுவிட்டு, "அம்மாவிடம் கொடு டார்லிங்" என்றான்.

"சீக்கிரம் வந்து விடுங்கள்" என்ற வேண்டுதலுடன் அனுவிடம் ரிஸீவரைக் கொடுத்தாள் அவள்.

"அப்பா, அம்மாவிடம் சொல் அனு. இன்னும் பத்து நாட்களில் திரும்ப உனக்குப் போன் செய்கிறேன். பை அனும்மா. ஸ்வீட் கிஸஸ் டு யு" என்று கூறிப் பேச்சை முடித்துக் கொண்டான் அவன்.

ரிஸீவரை வைத்துவிட்டுக் கட்டிலில் சாய்ந்தபொழுது அவன் மனதில் கொஞ்சம் அமைதி ஏற்பட்டது.

## 14

அடித்துப் போட்ட மாதிரி தூங்கிக் கொண்டிருந்த நடராஜ், டெலிபோன் மணி ஒலிக்கும் சப்தம் கேட்டு விழித்துக் கொண்டான். கை நீட்டி ரிஸீவரை எடுக்கக் கூட சோம்பேறித்தனமாக இருந்தது அவனுக்கு. அசையாமல் சில விநாடிகள் அப்படியே படுத்துக் கொண்டிருந்தான். ஆனால் எடுக்கும்வரை ஓயமாட்டேன் என்று டெலிபோனும் விடாப் பிடியாக அலறிக் கொண்டிருக்கவே, வேறு வழியின்றிக் கட்டிலின் ஓரத்திற்குப் புரண்டு வந்து ரிஸீவரை எடுத்தான் அவன்.

"குட் மார்னிங் டார்லிங்! மணி என்ன தெரியுமா, எட்டு. சரியாக எட்டு மணிக்கு இங்கே இருப்பதாகக் கூறினீர்களே?"

இனிமையான இசையாக எலைனின் குரல் அவன் செவியிற் நுழைந்தது. நடராஜ் தன் கைக்கடிகாரத்தில்

மணி பார்த்தால் எட்டு ஐந்து. ஐந்து நிமிடங்கள் வரை அவன் வருகைக்காகப் பொறுமையாகக் காத்திருந்து பார்த்திருக்கிறாளே அவள், அதுவே அதிசயம்தான். நடராஜின் முகத்தில் புன்னகை அரும்பியது.

அவனிடமிருந்து பதில் வராமற் போகவே ''என்ன ராஜ் ஒரு மாதிரியாக இருக்கிறீர்கள்? நீங்கள் சரியாகவே பேச மாட்டேனென்கிறீர்களே—நேற்று நீங்கள் தூங்கவே இல்லையா?'' என்று கவலையோடு கேட்டாள் எலைன்,

''இல்லையே, நன்றாகத் தூங்கினேனே'' என்று பதிலளித்த நடராஜ், ''நீ?'' என்று அவளைத் திருப்பிக் கேட்டான்.

''இல்லை...'' அவள் குரல் மெதுவாக, நளினமாக, நிதானமாக ஒலித்தது.

''ஏன் டார்லிங்?''

நடராஜ் மெதுவாகச் சிரித்தான்.

''ரியலி ராஜ். நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். அதனாலே எனக்குத் தூக்கமே வரவில்லை.''

நடராஜ் அதற்கும் சன்னமான சிரிப்பைத்தான் பதிலாக வழங்கினான்.

''என்ன ராஜ். எல்லாவற்றிற்கும் சிரிக்கிறீர்களே?... நேற்றிரவு உண்மையாக உங்களுக்குத் தூக்கம் வந்ததா?''— அவள் குழந்தையாக சிணுங்கினாள்.

''நோ பேபி. என்னாலும் நேற்றிரவு தூங்க முடியவில்லை.''

''ஏன் ராஜ்?'' இரகசியம் பேசுகின்ற குரலில் கேட்டாள் எலைன்.

''உனக்குத் தெரிந்ததுதானே!''



எலைன் சிரித்தாள். ''சரி, அறையைக் காலி செய்து விட்டீர்கள் இல்லையா? சீக்கிரம் கிளம்பி வாருங்கள்.''

''இன்னும் எதையுமே நான் எடுத்து வைத்துக் கொள்ளவில்லை. சாயந்திரமாகத்தான் பேக் பண்ண நேரம் கிடைக்கும் போலிருக்கிறது. ஃபேக்டரிக்குப் போய்விட்டு, மாலை, அறைக்கு வந்ததும் எல்லாவற்றை யும் எடுத்துக் கொண்டு நேராக அங்கு வருகிறேனே எலைன்.''

''நோ, நோ, யூ ஆர் கமிங் நௌ, நீங்கள் இப்போதே வந்துவிட வேண்டும். நான் கிளம்பி அங்கே வந்து உங்களுக்கு உதவி செய்யட்டுமா?''

''வேண்டாம் உனக்கு ஏன் வீண் சிரமம், நானே வருகிறேன்,''

''இதில் சிரமமென்ன இருக்கிறது? இட் ஈஸ் எ பிளஷர்! சீக்கிரம் வருகிறீர்களா ராஜ்?''

''ஓகே டியர்.''

நடராஜ் ரிஸிவரை வைத்துவிட்டு சுறுசுறுப்பை வரவழைத்துக் கொண்டு எழுந்தான். வார்ட்ரோப்பி லிருந்த உடைகளை எடுத்து மடித்து சூட்கேஸில் அடுக்கினான். மற்ற எல்லாவற்றையும் எடுத்து சூட்கேஸில் போட்டான். கடைசியில் மேஜை மீதிருந்த போட்டோ ஃபிரேமும், டிராயருக்குள் இருக்கும் கடிதங் களும் தான் பாக்கி. டிராயரில் இருந்த அத்தனைக் கடிதங்களையும் வெளியே எடுத்தான். முதன் முதலாக அவன் லண்டனுக்கு வந்த புதிதில் அனுவும், ஆர்த்தியும் ஆங்கிலத்தில் எழுதிய கடிதங்களை மட்டும் தனியே எடுத்து விட்டுத் தமிழில் வந்திருந்த கடிதங்களை உடைகளுக்கு அடியில் சூட்கேஸிலேயே போட்டான்.

அப்போதே தமிழில் கடிதங்களை எழுதும்படி அனுவிடம் கேட்டுக் கொண்டது எவ்வளவு நல்லதாகப் போயிற்று என்ற எண்ணம் தோன்றியது அவன் மனத்தில். 'இந்த கடிதங்களை என்ன செய்வது!' கிழித்துப் ஆக்கிவைக் கடிதங்களை என்ன செய்வது!' கிழித்துப் போட மனம் வரவில்லை அவனுக்கு. சரி, தொழிற் சாலைக்குப் போனதும் மேஜை டிராயரில் வைத்துப் பூட்டி விடலாம் என்று அந்தக் கடிதங்களையும் இந்தப் போட்டோக்களைப் பார்த்தால் எலைன் யார் என்று கேட்பாள்; அதற்கு வேறு பொய் சொல்ல வேண்டும். இப்போது சொல்லிக்கொண்டிருக்கும் பொய்கள் போதாதா? என்ற எண்ணத்தில் எழுந்த வேதனைப் பெருமூச்சோடு அந்தப் போட்டோ பிரேமையும் கடிதங்களோடு சேர்த்துத் தொழிற்சாலைக் குக் கொண்டு போகும் பிரீஃப் கேஸில் வைத்துக் கொண்டான்.

தொழிற்சாலைக்கு போன் செய்து, தான் வர நேரமாகும் என்பதைத் தெரியப்படுத்திவிட்டு ஓட்டல் ரிசப்ஷனை அழைத்து அறையைக் காலி செய்யப்போகும் செய்தியைக் கூறினான்.

கடைசியாக ஒரு முறை அறையைச் சுற்றிப் பார்த்து விட்டு சாவியை அவர்களிடம் கொடுத்துவிட்டுத் தன் சூட்கேசுடன் காரை நோக்கி நடந்த அந்த விநாடியில் தன் மனத்தைச் சூழ்ந்து கொண்டிருக்கும் உணர்ச்சி, இன்பமா, அல்லது துன்பமா, என்பதை நிர்ணயிக்க முடியவில்லை நடராஜினால்.

எலைனின் வீட்டை அடைந்தபோது அவன் வரவை எதிர்பார்த்துக் காலை உணவைக் கூட உட்கொள்ளாமல் காத்திருந்தார்கள், எலைனும் ஜெனிஃபரும்.

"வாங்க, டாடி," என்று கண்கள் பளபளக்க, முகத்தில் மகிழ்ச்சி வெள்ளம் பொங்க ஓடிவந்து அவனைக்



கட்டிக் கொண்டாள் ஜெனிஃபர். அதைப் பார்த்ததும் நடராஜின் நெஞ்சிலும் உற்சாகம் பிறந்தது.

அழகான சின்ன நாய்க் குட்டியைத் தூக்கி மார்போடு அணைத்துக் கொள்வதைப் போல் அவளை அள்ளி அணைத்துக் கொண்ட நடராஜ், அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான். "இன்றைக்கு நீ ஸ்கூலுக்குப் போகிறாய் இல்லையா ஜென்னி?" என்று கேட்டுக் கொண்டே அவளைக் கீழே இறக்கி விட்டான்.

'ஆமாம்' என்று முகத்தைச் சுருக்கிக்கொண்டே தலை யாட்டினாள் அவள்.

சாப்பாட்டு மேஜையருகில் நின்றுகொண்டு விழுங்கி விடுவதைப் போல் அவனையே பார்த்துக்கொண்டிருந்த எலைனின் அருகே போனான் நடராஜ். மிகவும் அழகாகத் தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

"ஓ! இன்று நீ எவ்வளவு அழகாக இருக்கிறாய் எலைன்?" என்று கூறியபோது, பரவசத்தோடு கைகளை மாலையாக அவன் கழுத்தில் போட்டுக்கொண்ட எலைன், அவன் தோளில் முகத்தைச் சரித்துக்கொண்டாள்.

"இந்த சந்தோஷத்தில் இப்படியே என் வாழ்க்கை முடிந்து போய்விடக் கூடாதா என்றிருக்கிறது ராஜ்."

நடராஜ் சடாரென்று அவன் முகத்தைத் திருப்பி அவளை கோபத்தோடு முறைத்துப் பார்த்தான்.

"உண்மையாகத்தான் சொல்கிறேன் ராஜ். நீங்கள் அணைத்துக் கொண்டிருக்கும்போது, உங்கள் தோளில் சாய்ந்து கொண்டே என் உயிர் பிரியுமானால் என்னை விடப் பாக்கியசாலியாக யாருமே இருக்க..."

நடராஜ் சட்டென்று அவள் இதழ்களைப் பொத்தி னான்.

''பைத்தியம் மாதிரி இது என்ன பேச்சு எலைன்? வாழ்க்கையின் ஆரம்ப நாளன்றே சாவைப் பற்றிய எண்ணம் எதற்கு?''

அவன் கண்கள் கலங்கின. அதைப் பார்த்த அவள் விழிகளும் நீரால் நிரம்பின. இருவரும் அப்படியே ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு சில விநாடிகள் மௌனமாக நின்றனர். தன் உணர்வு பெற்ற எலைன், ''வாருங்கள் ராஜ் சாப்பிடலாம்!'' என்று அவன் கையைப் பிடித்து இழுத்து நாற்காலியில் உட்கார வைத்தாள். அவனுக்கெதிரில் ஜென்னியும், அவனருகில் அவனை ஒட்டினாற்போல் எலைனும் உட்கார்ந்து கொண்டார்கள். இன்பத்தின் எல்லையை எட்டும்போது சொற்களுக்கு இடமே இல்லாமற் போய்விடுகிறதல்லவா? ஆகவே அப்போது அவர்களிடையே மௌனம்தான் ஆட்சி செலுத்திக் கொண்டிருந்தது.

அமைதியாக சாப்பிட்டு முடிந்ததும் நாற்காலியைப் பின்னால் தள்ளிவிட்டு எழுந்தான் நடராஜ்.

''ஜென், நீயும் என்னுடனேயே வாம்மா. உன்னைப் பள்ளியில் விட்டுவிட்டு நான் தொழிற்சாலைக்குப் போகிறேன்'' என்று ஜென்னியை அழைத்தான். ஜெனிஃபர், ''இதோ டாடி, ஒரு நிமிடம்'' என்று குதித்துக் கொண்டு தன் அறைக்குள் ஓடினாள்.

எலைன் தன் இடத்தைவிட்டு எழுந்து அவனருகே வந்தாள். ''ரா...ஜ்'' என்று குரல் தழுதழுக்க அவனை அணைத்துக் கொண்டவள், ''இப்படிப்பட்ட ஒரு குடும்ப வாழ்க்கைக்கு என் மனம் எப்படித் தவித்தது தெரியுமா ராஜ்? பொறுப்பு மிகுந்த ஒரு தாயாக, அன்புமிக்க ஒரு மனைவியாக நாமும் இருக்க மாட்டோமா, அப்படிப்பட்ட ஓர் இன்பமயமான வாழ்க்கை கிட்டாதா என்று எப்படி ஏங்கிக் கொண்டிருந்தேன் தெரியுமா? ஓ! ராஜ்,



நீங்கள் என்னை சுவர்க்கத்திற்கே அழைத்துச் சென்றுவிட்டீர்கள்''—அவள் இதழ்கள் துடித்தன. நடராஜால் ஒன்றும் பேச முடியவில்லை. உணர்ச்சி வெள்ளத்தில் சிக்கித் தவித்த அவன், அவளை இறுகத் தழுவிக் கொண்டான்.

''கமான் டாடி...'' என்றபடி தன் புத்தகங்களுடன் அறையை விட்டு வெளியே வந்தாள் ஜெனிஃபர். எலைன் அவளருகே போய்க் குனிந்து அவள் கன்னங்களில் முத்தமிட்டாள்.

''பை மம்மி'' என்று பதிலுக்கு எலனை முத்தமிட்ட ஜென்னி, ஓடிப்போய் நடராஜின் கரத்தைப் பற்றிக் கொண்டாள்.

''சீக்கிரம் வீட்டிற்குத் திரும்பி விடுங்கள் ராஜ்'' என்று எலைன் வேண்டிக் கொண்டதும், நடராஜ் புன்னகையுடன் 'சரி', என்று தலையாட்டினான்.

காரில் போகும்போது நடராஜின் இதயம் இன்பத்தால் நிரம்பி வழிந்தது.

''டாடி'' என்று மெதுவாக அவனை அழைத்தாள் ஜெனிஃபர்.

''எஸ் டியர்'' என்று அவளைத் திரும்பிப் பார்த்தான் நடராஜ்.

''தினமும், என்னை இதே மாதிரி ஸ்கூலுக்குக் கொண்டு போய் விடுவீர்களா?''

''ஓ...ஷ்யூர் பேபி.''

''டாடி, நான் சதா உங்களோடு இருக்கணும்னு துடிக்கிறேன். உங்களை நான் எவ்வளவு நேசிக்கிறேன் தெரியுமா?''

அதைக் கூறியபோது அவளது குரலில் குழந்தைத்தனமில்லை. கண்களில் குறும்புத்தனமில்லை. ஆழமான ஒரு பார்வையோடு நடராஜின் முகத்தையே பார்த்துக் கொண்டு அழுத்தமான குரலில் அவள் கூறியபோது இதயத்தின் அடித்தளத்திலிருந்து அந்தச் சொற்கள் வெளிவருகின்றன என்பதைப் புரிந்து கொண்டான் நடராஜ். அந்த அன்பில் அவளது பாசத்தில் குளிர்ந்த நீரை வாரி முகத்தில் அடித்தாற்போல் நடராஜின் உள்ளமும், உடலும் ஒருமுறை சிலிர்த்து அடங்கியது. அவளை திரும்பிப் பார்த்த அந்தப் பார்வையாலேயே அவளை அள்ளி அணைத்துக் கொண்டான் அவன்.

அதன்பின் வாழ்க்கையின் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு விநாடியும் இனித்தது நடராஜிற்கு. நாட்கள் போவதே தெரியாமல் காலம் மெள்ள நழுவி ஓடிக் கொண்டிருந்தது.

## 15

சில நாட்களாகவே அனுவின் மனம் சரியாக இல்லை. எதிலும் உற்சாகமின்றி, காரணம் கூறத் தெரியாத ஒரு துன்பத்தில் ஆழ்ந்து போயிருந்தது. அதற்கேற்ப உடல் நிலையும் பலவீனமாகிக் கொண்டே வந்தது. அடிக்கடி மெடிகல் செக்-அப்பிற்குப் போய் டாக்டர் கொடுக்கும் டானிக்குகளையும், மாத்திரைகளையும் தவறாமல் சாப்பிட்டுக் கொண்டே வந்தாலும், போன தடவையைப் போல் இந்த முறை டெலிவரி சுலபமாக ஆகப்போவதில்லை என்று அவள் உள் மனம் அவளைப் பயமுறுத்திக் கொண்டே இருந்தது. அந்தச் சமயத்தில்தான் நடராஜ் வருவானோ மாட்டானோ என்ற கவலை வேறு அவள் மனத்தை அரித்தெடுத்தது.



இளையும் ஆர்த்தி, 'அப்பா எப்போது வருவார்?'' என்று கேட்டு, அவள் மறந்திருக்கும் சமயங்களில் நடராஜின் நினைவைத் தூண்டிவிட்டு விடுவான். மனக் குழப்பமும் உடல் பலவீனமும் எல்லாமாகச் சேர்ந்து நாளுக்கு நாள் அவளை மேலும் இளைக்க வைத்துக் கொண்டிருந்தது. அதைப் பார்த்த நடராஜின் தாய் மிகவும் கவலைப்பட்டாள்.

''அனு, இந்த சமயத்தில் உடம்பைக் கொஞ்சம் கவனித்துக்கொள் அம்மா. இந்த முறை என்னவோ இவ்வளவு பலவீனமாக இருக்கிறாயே, எனக்கு கவலையாக இருக்கிறதம்மா. நடராஜ் திரும்பி வரும் வரை உன்னைக் காப்பாற்றி பத்திரமாக அவனிடம் ஒப்படைக்க வேண்டுமே என்று நான் பயந்துகொண்டிருக்கிறேன்'' என்றாள்.

அதைக் கேட்டுப் புன்னகை செய்தாள் அனு. ''எனக்கு ஒன்றுமில்லை அம்மா. கொஞ்சம் பலவீனம், அவ்வளவுதான். அதற்குத்தான் டாக்டர் இன்ஜெக்ஷன் போடுகிறாரே... டானிக் எழுதித் தந்திருக்கிறாரே'' என்று கலங்கிய அந்த அன்னையின் மனத்தைச் சமாதானப்படுத்தினாள் அனு.

வெராமன் ஒருவாறாகத் தொழிற்சாலைக்கு வர ஆரம்பித்திருந்தார். அவர் வர ஆரம்பித்த உடனேயே அனுவை அழைத்து, ''நீ இனிமேல் தொழிற்சாலைக்கு வர வேண்டாம் அம்மா. வீட்டில் நன்றாக ஓய்வு எடுத்துக்கொள். இனிமேல் இப்படி அலைந்தால் உடம்பிற்கு ஆகாதம்மா'' என்ற போது, ''இல்லை மாமா, தொழிற்சாலைக்கு வந்தாலாவது எனக்கு மனம் நிம்மதியாக இருக்கும். தயவு செய்து என்னைத் தடுக்காதீர்கள்...'' என்று பதிலளித்துவிட்டு அவருடனேயே போய் அவருடனேயே திரும்பி வந்து கொண்டிருந்தாள்.

சிவராமன் வர ஆரம்பித்த வேளையோ என்னவோ, அவர் வரத் தொடங்கின நான்கு நாட்களுக்கெல்லாம் தொழிற்சாலை ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்ய ஆரம்பித்தனர். ஸ்ட்ரைக் மும்முரமாகிவிட்டது. தொழிற் கோர்ட்டிற்கு யார் யாரையோ அனுப்பி வைத்தார் சிவராமன். ஆனால், எந்த ஒப்பந்தத்திற்கும் வரவில்லை. கடைசியில் அவரே நேரில் தொழிற் கோர்ட்டிற்குப் போய் யூனியன் தலைவரைப் பார்த்து பேசவேண்டியதாயிற்று. தொழிலாளர்களின் எல்லா கோரிக்கைகளுக்கும் உடனடியாக ஒப்புக் கொண்டுவிட முடியாத நிலையில் திரும்பி வந்து அனுவையும், அவளுக்கு உதவியாகத் தொழிற்சாலை வேலைகளைக் கவனித்துக்கொண்ட சேதுராமனையும் கலந்து ஆலோசனைக் கேட்டார். சேதுராமனுக்குச் சுமார் அறுபத்தைந்து வயதிற்குமேல் இருக்கும். இந்த விஷயங்களில் சிவராமனைவிட நல்ல அனுபவமுள்ளவராதலால் நிதானமாக யோசித்துச் சில கோரிக்கைகளுக்கு மட்டும் சம்மதிக்கச் சொன்னார்.

கடைசியில் இரு பக்கங்களிலும் ஓர் உடன்பாட்டிற்கு ஒப்புக்கொண்டு, ஒருவாறாகத் தொழிலாளர்கள் திரும்ப உற்பத்தியை ஆரம்பிக்க பதினைந்து நாட்களாகி விட்டன. இந்தப் பதினைந்து நாள் வேலை நிறுத்தத்தினால் தடைபட்ட வேலைகளை முடிக்கவும் உற்பத்தியை அதிகரிக்கவும் தொழிற்சாலை இரவு ஷிப்ட்கூட வேலை செய்ய வேண்டி நேரிடவே அனுவிற்கும் சிவராமனுக்கும் மூச்சு விடக்கூட நேரமில்லை.

"நீங்கள் கொஞ்சம் ரெஸ்ட் எடுத்துக்கொள்ளுங்கள்" என்று சிவராமனை வற்புறுத்தி அவரை ஓய்வெடுக்கச் செய்வாள். அவரோ தன் அறையில் ஐந்து நிமிடங்கள் சோபாவில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டிருந்துவிட்டுத் திரும்ப வந்து, "போம்மா, நீ போய் சற்று ஓய்வு எடு" என்று அவளை அனுப்பி விடுவார்.





"மனத்திலும் நிம்மதியில்லாமல் இந்தப் பெண் உடம்பையும் இப்படிப் போட்டு வருத்திக்கொள்கிறதே!" என்று அவருக்குப் பரிதாபமாக இருக்கும் அவளைப் பார்க்கும்போது. இதற்கிடையில் அடிக்கடி சேலத்திற்குப் போய் அந்த நிலத்தை வேறு பார்வையிட்டுவிட்டு வரவேண்டி இருந்தது. சிவராமன் படுக்கையில் கிடந்துவிட்டு அப்போதுதான் சற்றுத் தேறி எழுந்திருந்தார். டாக்டர் வேறு அவரை உடலையும் மனத்தையும் அலட்டிக் கொள்ளக் கூடாது என்று கடுமையாக எச்சரிக்கை செய்திருந்தார். அனுவோ எட்டு மாதக் கர்ப்பிணி. இருவருமே அலைந்து திரியக்கூடாதவர்கள் தான். ஆனால், இருவரும் தங்கள் உடல்நிலையைப் பற்றிய நினைவேயின்றி அலைந்து கொண்டிருந்தனர்.

அன்று காலையிலிருந்தே அனு ஏதோ மாதிரி இருப்பதை கவனித்த சிவராமன், "இன்று நீ தொழிற்சாலைக்கு வர வேண்டாம்" என்றார்.

"இல்லை மாமா... வந்து...

"சொன்னால் கேள் அனு" என்று அவளை மேலே பேச விடாமற் செய்துவிட்டு அவர் மட்டும் கிளம்பிப் போய் விட்டார். அன்று சனிக்கிழமையாக இருக்கவே ஆர்த்திக்கும் பள்ளிக்கூடம் இல்லை.

"எங்கேயாவது வெளியே போகலாம்மா, சினிமாவிற்காவது போகலாம்" என்று அனுவை நச்சரித்துக் கொண்டிருந்தாள் அவள்.

ஆர்த்தியைப் பார்க்க அனுவிற்குப் பரிதாபமாக இருந்தது. அவளோடு அமர்ந்து ஒன்றாகச் சாப்பிட்டு, கலகலப்பாக பேசிப் பொழுதைப் போக்கி, அவளை அழைத்துக்கொண்டு போய் எத்தனையோ நாட்களாகி விட்டன என்பதை உணர்ந்தாள் அனு. அன்று சற்று ஓய்வு கிடைத்ததால் ஆர்த்தியின் வேண்டுகோளைப் புறக்கணிக்க மனமில்லை அவளுக்கு.

''சரி, புறப்படு ஆர்த்தி'' என்று அவளைத் தானே அலங்கரித்து அழைத்துக்கொண்டு கிளம்பினாள் அனு.

ஜிம்கானா வாசலில் காரை நிறுத்திவிட்டு உள்ளே போகும்போது, ''அப்பாடி, கிளப்பிற்கு வந்து எத்தனை நாட்களாகி விட்டன. இல்லையா, மம்மி? கடைசியாக அப்பாவோடு வந்ததுதான்'' என்றாள் ஆர்த்தி.

அந்தப் பகல் நேரத்தில் நீச்சல் குளத்தில் நீந்திக் கொண்டிருந்த ஒரு வெளி நாட்டுக் குடும்பத்தைத் தவிர, வேறு யாருமில்லாமல் கிளப் வெறிச்சென்றிருந்தது.

உள்ளே நீச்சல் குளத்துக்கு எதிரில் காலியாகக் கிடந்த ஒரு மேஜையின் முன் நாற்காலியில் அமர்ந்தார்கள் இருவரும்.

''ஐஸ்கிரீம் மம்மி...''

அனு 'பேரரை' அழைத்து ஒரு கப் ஐஸ்கிரீம் கொண்டுவரச் சொன்னாள்.

''உனக்கு மம்மி!''

''எனக்கு வேண்டாம் ஆர்த்தி''.

''அப்படியானால் எனக்கும் வேண்டாம்...'' என்று பிடிவாதம் பிடித்தாள் ஆர்த்தி. அனு புன்னகையுடன் இரண்டு கப் ஆர்டர் செய்தாள். ஆர்த்தி, நீச்சல் குளத்தில் நீந்திக் கொண்டிருநத அந்தக் குடும்பத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள். குளத்திலிருந்து சிறுமி ஒருத்தி தண்ணீரிலிருந்து எழுந்து உடலில் நீர் சொட்ட ஓடிவந்து, நாற்காலியில் அமர்ந்து கொண்டிருந்த தன் தந்தையின் கால்களைக் கட்டிக்கொண்டு கலகலவென்று சிரித்தாள். அவர் அவளை, அப்படியே அணைத்துக் கொண்டு, அவளோடு சேர்ந்து ஏதோ சொல்லிச் சிரித்தார். அவர்கள் சிரிப்பு கிளப் முழுவதும் எதிரொலித்தது.



ஐஸ்கிரீம் வந்ததைக்கூட கவனிக்காமல் அவர்களையே பார்த்துக்கொண்டிருந்த ஆர்த்தியின் கவனத்தைக் கலைத்தாள் அனு.

''ஆர்த்திம்மா... ஐஸ்கிரீம் வந்துவிட்டது பார்...'' திரும்பிப் பார்த்த ஆர்த்தி, ஐஸ்கிரீமைத் தொடவில்லை.

''அப்பா எப்போது வருவார் மம்மி...'' என்று கேட்டாள். அதைக் கேட்கும்போதே அவள் கண்கள் குளங்களாகி விட்டன. அனுவின் மனம் நெகிழ்ந்தது. அவள் முகத்தை அருகே, இழுத்து கண்களைத் துடைத்துக்கொண்டே, ''சீ, அசடு! அதற்கு யாராவது அழுவார்களா, என்ன? அப்பா வந்துவிடுவாரம்மா, சீக்கிரமே வந்துவிடுவார்'' என்று சமாதானப்படுத்த முயன்றும் ஆர்த்தியின் கண்ணீர் நிற்கவில்லை.

''போம்மா... நீ இதையேதான் எப்போதிலிருந்தோ சொல்லிக் கொண்டிருக்கிறாய்!'' என்றாள்!

அதன்பின் ஐஸ்க்ரீம் கூடக் கசந்தது இருவருக்கும்.

''வீட்டிற்குப் போகலாம் அம்மா...'' என்று தொந்தரவு செய்தாள்.

''போய் விளையாடேன் ஆர்த்தி, கிளப்பிற்குப் போகலாம் என்று குதித்துவிட்டு, வந்த உடனேயே வீட்டிற்குப் போகலாமென்கிறாயேம்மா?'' என்று சொல்லிப் பார்த்தாள் அனு. ஆர்த்தி கேட்கவில்லை.

''வேண்டாம், வீட்டிற்கே போய் விளையாடிக் கொள்கிறேன்.''

விளையாடும் மூடில் அவள் இல்லை என்பதைப் புரிந்து கொண்ட அனு, இடத்தைவிட்டு எழுந்தாள். இருவரும் காரில் ஏறி அமர்ந்தனர். கார் கடற்கரை வழியாக வீட்டை அடைந்தது. வழி முழுதும் ஆர்த்தி

வாயைத் திறக்கக்கூட இல்லை. அவனது உணர்ச்சி களைப் புரிந்துகொண்ட அனுவின் மனமும் வேதனைப் பட்டது.

"இவனுக்காகவாவது சீக்கிரம் வாருங்கள், ராஜு" என்று தன் மனதிற்குள் கூறிக்கொண்டாள்.

அன்று இரவு முழுவதும் அனு தூங்கவில்லை. காரணம் தெரியாமல் துக்கம் அவள் தொண்டையை அடைத்தது. நீண்ட நேரம் எதற்காக அழுகிறோம் என்பதே தெரியாமல் அழுது கொண்டிருந்துவிட்டு, உறக்கம் வராமல் தவித்தபின் விடிந்ததும் கீழே இறங்கிவந்த அனுவின் கால்கள் படியிறங்க முடியாமல் துவண்டன. கண்கள் இருண்டு வீடே சுற்றுகிற மாதிரி இருந்தது. கீழே விழுந்துவிடப் போகிறோமே என்று மிகவும் சிரமப்பட்டுக் கைப்பிடியைப் பிடித்துக் கொண்டே அதன்மீதே சாய்ந்துவிட்டாள். ஏதோ வேலையாக அந்தப் பக்கம் வந்த வேலைக்காரி, அவளை அந்த நிலையில் பார்த்ததும் ஓடிவந்து தாங்கிப் பிடித்துக் கொண்டு, "அம்மா அம்மா! ஓடியாங்க சின்னம்மா மயக்கம் போட்டு விழுந்துட்டாங்க..." என்று குரல் கொடுத்தாள்.

தங்கம்மாளும், சிவராமனும் நெஞ்சம் பதற ஓடி வந்தனர். மாடியிலிருந்து வந்த ஆர்த்தி, அனுவை உணர்வற்ற அந்த நிலையில் பார்த்ததும் ஓவென்று அழ ஆரம்பித்து விட்டாள். வேலைக்காரியிடமிருந்து அனு வைத் தாங்கிப் பிடித்துக் கீழே படுக்கவைத்த தங்கம்மாள், "ஒரு தம்ளர் தண்ணீர்கொண்டு வா" என்று வேலைக்காரியை விரட்டிவிட்டு; ஆர்த்தியைப் பார்த்து, "பயப்படாதேம்மா, அம்மாவிற்கு ஒன்றுமில்லை. இதோ, எழுந்துவிடுவாள் பார்" என்றாள்.

அதற்குள் வேலைக்காரி தண்ணீருடன் வரவே தம்ளரை வாங்கி அனுவின் முகத்தில் தெளித்தாள்.



டாக்டருக்கு போன் செய்துவிட்டு அங்கு வந்த சிவராமன், "எப்படியிருக்கிறாள், தங்கம்?" என்று கவலை தோய்ந்த குரலில் கேட்டார்.

அதைக் கேட்டதும் கோபம் பற்றிக்கொண்டு வந்தது தங்கம்மாளுக்கு. "ஆமாம், பிள்ளைதாய்ச்சிப் பெண்ணைத் தொழிற்சாலைக்கு அழைத்துப்போய் வேலை வாங்கவேண்டாமென்று எத்தனை தரம் சொன்னேன். கேட்டீர்களா?" அவரைக் குற்றம் சாட்டி னாள் அந்த அம்மாள்.

"ஐயோ, நானா அவளை வரச்சொன்னேன்? வேண்டாமென்றால்கூடக் கேட்காமல் அவளாகத்தானே வந்தாள்..." அதற்குள் அனு கண் விழிப்பதைக் கவனித் துப் பேச்சைப் பாதியில் நிறுத்திவிட்டார் அவர்.

"அனும்மா... எப்படிம்மா இருக்கிறது? இந்தா இந்த ஹார்லிக்ஸைக் குடிம்மா..." என்று அவள் தலையைத் தூக்கித் தன் மடி மீது இருத்திக்கொண்டு சமையற்காரர் கொண்டுவந்து கொடுத்த ஹார்லிக்ஸைக் கொஞ்சம் கொஞ்சமாக அவள் வாயில் ஊற்றினாள் அந்த அம்மாள். அனு மிடறு மிடறாக விழுங்கினாள். அதன் பின் மெதுவாக அவளை எழுப்பித் தன் தோளில் சாத்திக் கொண்டு போய் படுக்கையில் படுக்கவைக்கும் வரை தங்கம்மாளின் நெஞ்சம் துடித்துக்கொண்டே தானிருந்தது. அந்த பத்து நிமிடங்களில் அந்த பங்களா முழுவதுமே பதறிப்போய் விட்டது.

லேடி டாக்டர் வந்து பரிசோதித்துவிட்டு, "நீ மனதில் எந்தக் கவலையும் வைத்துக் கொள்ளக் கூடாது அனு. அதிகம் அலையக் கூடாது. கூடியவரை ஓய்வு எடுத்துக்கொள் என்று எத்தனை முறை உன்னிடம் கூறிவிட்டேன். இனிமேல் டெலிவரி ஆகும்வரை வீட்டை

விட்டு எங்கும் அசையக் கூடாது'' என்று அவளைக் கடிந்துகொண்டான்.

''கொஞ்ச நாட்கள் படுக்கையை விட்டு நகரக் கூடாது. நான் எழுதிக் கொடுக்கும் மருந்துகளோடு வேளா வேளைக்கு நன்றாக, ஒழுங்காகச் சாப்பிடு'' என்று கூறிவிட்டு வெளியே வந்ததும் சிவராமனைத் தனியாக அழைத்துப் போய், ''நன்றாகப் பார்த்துக் கொள்ளுங்கள். அவள் உடம்பு மிகவும் பலவீனமாக இருக்கிறது. இந்த டெலிவரியைத் தாங்க வேண்டுமே என்று எனக்கே பயமாக இருக்கிறது. அவள் மனத்திலும் ஏதோ கவலையும், ஏக்கமும் இருக்கிறது என்று நினைக்கிறேன். முடிந்தால் அவள் கணவரை வரவழையுங்களேன். அந்த ஏக்கமாகத்தான் இருக்க வேண்டும்'' என்று சொல்லிவிட்டுப் போனதும் சிவராமன் யோசித்துக் கொண்டே அனுவின் அறைக்குள் நுழைந்தார். கட்டிலின் அருகே இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு, ''இப்போது எப்படி இருக்கிறது அனு? நடராஜிற்கு டிரங்கால் போட்டு வரவழைக்கட்டுமா அம்மா?'' என்று பரிவும் பாசமும் ததும்பும் குரலில் கேட்டார் அவர்.

''வேண்டாம் மாமா, என்க்கு ஒன்றுமில்லை. அதிகக் களைப்பினால் கண் தெரியாமல் மயக்கமாக வந்துவிட்டது. அவ்வளவுதான். இதற்குப்போய் அவரைப் பதற அடித்து ஓடிவரச் செய்வானேன்? அவரே இன்னும் ஒரு மாதத்திற்குள் அநேகமாக வந்து விடுவார். அதற்குள் போன வேலையை முழுவதும் முடிக்காமல் பாதியில் ஏன் வரச் செய்யவேண்டும்?'' என்று கூறிவிட்டாள் அனு.

சிவராமனுக்கும் அவள் கூறியது 'சரி' என்று படவே, பேசாமல் இருந்து விட்டார்.

# 16

**ஏள**மையின் துயரமாக வெளியே சொல்லிக்கொள்ள முடியாத வேதனையில் மூழ்கி உள்ளுக்குள்ளேயே குமுறிக் கொண்டிருந்தான் நடராஜ். தொழிற்சாலை வேலையெல்லாம் அநேகமாக முடிந்துவிட்டன. மெஷினரிகளைக் கப்பலில் ஏற்றியாகி விட்டது. இன்னும் ஒரு சில சிறிய வேலைகளே பாக்கி இருந்தன. அவற்றையும் முடித்துக்கொண்டு விட்டால் மறுநாளே லண்டனை விட்டு அவன் கிளம்பிவிட வேண்டியதுதான். ஆனால் அந்தச் சில்லறை வேலைகளுக்குத்தான் காரணம் எதுவுமின்றிக் காலதாமதமாகிக் கொண்டே வந்தது. அதையும் முயன்றிருந்தால் எப்போதோ முடித்துக் கொண்டிருக்கலாம் நடராஜ். ஆனால் அவன் தீவிர முயற்சி எதுவும் செய்யாமல், முடியும் போது முடியட்டுமே என்று அலட்சியமாக விட்டுவிட்டான். லண்டனை விட்டுக் கிளம்பப் போகும் சமயம் நெருங்க நெருங்க அவன் நெஞ்சத்து வேதனை அதிகமாகிக்கொண்டே போயிற்று. ஒவ்வொரு நாளும் மடிய மடிய அவனது மனக் குழப்பம் இரண்டு மடங்காக வளர்ந்துகொண்டே வந்தது.

இதற்கிடையில் கிறிஸ்துமஸ் நெருங்கிவிடவே லண்டன் மட்டுமின்றி எல்லா இடங்களுமே திருவிழாக் கோலம்பூண்டு ஜகஜ்ஜோதியாக ஜொலித்துக் கொண்டிருந்தன. வண்ண விளக்குகளால் எங்கு பார்த்தாலும் தோரணங்கள்; மத்தாப்புச் சுடரொளிகள். அந்த ஒளியையெல்லாம் மஞ்சும் மகிழ்ச்சி வெள்ளம் பொங்கும் மனித முகங்கள். தீபாவளி தினத்தன்று தொன்னைகளில் விளக்கேற்றி கங்கையில் மிதக்க விடுவார்களாமே, அந்தக் காட்சியை நேரில் பார்த்ததில்லை நடராஜ். ஆனால், சுற்றி நின்ற கட்டடங்களில் ஒளிவிட்ட விளக்குகளின் பிரதிபலிப்பால் கோடானு கோடி அகல் விளக்குகளை

ஏற்றி மிதக்கவிட்ட மாதிரி தோற்றமளித்த தேம்ஸ் நதியைப் பார்த்தபோது அந்த ஞாபகம்தான் வந்தது நடராஜிற்கு. குழப்பமான மனநிலையிலும், அந்தக் காட்சியைப் பார்த்துப் பார்த்துப் பரவசப்பட்டான் நடராஜ்.

கிறிஸ்துமஸை முன்னிட்டு ஜென்னிக்குப் பள்ளிக்கூடம் மூடியாகிவிட்டது. நடராஜிற்கும் தொழிற்சாலை இல்லை. ஆகவே, மூவரும் ஒன்றாக வெளியே போய்க் கொண்டே இருந்தார்கள். தினமும் ஒரு பார்ட்டி இருக்கும். விருந்தில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்ப இரவு ஒரு மணியோ, இரண்டு மணியோகூட ஆகிவிடும். சில நாட்கள் ஜென்னி விருந்திற்கு வரமாட்டாள். நடராஜூம், எலைனும் மட்டும் போய் வருவார்கள். அன்று ஜென்னி வராததால் நடராஜூம் எலைனும் மட்டும் கிளப்பிற்குப் போயிருந்தனர். அவர்கள் திரும்பி வந்து உடை மாற்றிக் கொண்டு கட்டிலில் விழுந்த போது மணி இரண்டாகி விட்டிருந்தது. கட்டிலில் படுத்துக் கொண்ட எலைன் உடனே தூங்கிவிடவில்லை. அவளுக்குத் தூக்கமும் வரவில்லை. நடராஜையும் தூங்க விடவில்லை அவள்.

"ரா...ஜ்..." என்று தலையை மட்டும் திருப்பி அவனைப் பார்த்துக் கூப்பிட்டாள் அவள்.

"என்ன, எலைன்?" என்றபடி நேராகப் படுத்துக் கொண்டிருந்த நடராஜ் திரும்பி அவளைப் பார்த்தான். சுற்றிச் சூழ்ந்திருந்த இருளின் நடுவே இரண்டு அழகான தீபங்களாகச் சுடர் விட்டன அவள் கண்கள்.

"எனக்குக் கிறிஸ்துமஸ் பரிசாக நான் கேட்பதை வாங்கித் தருவீர்களா ராஜ்?"

உணர்ச்சிவசப்பட்ட ராஜ் அவள் முகத்தைத் தன் அருகே இழுத்துக்கொண்டு காதருகில் போய்,



"என்னையே உனக்குக் கொடுத்திருக்கிறேனே எலைன் வேறு பரிசு வேறு வேண்டுமா?" என்று கொஞ்சலாகக் கிசுகிசுத்தான்.

"ரா...ஜ்..." என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டவள், "இது எனக்குக் கிடைத்த விலை மதிப்பற்ற ஒப்பற்ற பரிசு ராஜ். நான் கேட்கப்போவது சாதாரணப் பரிசு" என்றாள்.

"சாதாரணப் பரிசா! அது என்ன பரிசு டார்லிங்?"

"எனக்கு ஒரு புடவை வரவழைத்துத் தர வேண்டும் ராஜ். பட்டுப் புடவை..."

"ப்பூ— இவ்வளவுதானா?" அலட்சியமாகத் தன் உதடுகளைக் குவித்தான் நடராஜ்.

"கிறிஸ்துமஸ் அன்று அதைக் கட்டிக்கொண்டு வந்து உங்கள் முன் நிற்கவேண்டும் என்று எனக்கு ஆசையாக இருக்கிறது ராஜ்."

புடவையில் அவளைக் கற்பனை செய்து பார்த்தான் நடராஜ். ஓ? அந்தத் தோற்றத்தில் அவள்தான் எவ்வளவு அழகாக இருந்தாள்! நெற்றியில் குங்குமப் பொட்டு வைத்து தலையைத் தளரப் பின்னி, மல்லிகைச் சரத்தைத் தொங்க விட்டு. கை, கழுத்து எல்லாம் நிறைய நகைகளும் போட்டால் எப்படி இருப்பாள்? அவளை அப்படி அலங்கரித்துப் பார்க்க வேண்டும்போல் இருந்தது நடராஜிற்கு. இனிமேல் அனுவிற்குக் கடிதம் எழுதிப் போட்டுப் புடவையை வரவழைப்பதென்றால் எவ்வளவோ நாட்களாகி விடுமே! எலைன் கிறிஸ்துமஸ் பரிசாக அல்லவா புடவையைக் கேட்டிருக்கிறாள். என்ன செய்வதென்று யோசித்தான் நடராஜ். உடனே மீனா சாமிநாதனின் ஞாபகம் வந்தது அவனுக்கு. எவ்வளவோ மாதங்களாகிவிட்டன. மறுநாள் காலை அங்கு போக வேண்டுமென்று முடிவு செய்து கொண்டான் நடராஜ்.

மறுநாள் சீலை, சாமிநாதனின் பிளாட்டினுள் நுழையும் போதே அவர் மனைவி, 'என்ன' உங்களைக் காணவே இல்லை? ஒரு வேளை இந்தியாவிற்குத் திரும்பிப் போய்விட்டீர்களோ என்று கூட நினைத்தோம்" என்று மலர்ந்த முகத்தோடு வரவேற்றாள்.

சொல்லாமற் போய்விடுவேனா? எதற்காக இல்லாவிட்டாலும் சூடாக நீங்கள் அன்போடு சமைத்துப் போட்ட ரசம், சாம்பார் சாப்பாட்டிற்காகவாவது நன்றி சொல்லி விட்டுப் போக மாட்டேனா?" என்றான் நடராஜ் புன்னகையுடன்.

"இப்போதெல்லாம் அதற்காககூட நீங்கள் வருவதில்லையே. ஒரு வேளை என் சமையல் சலித்துப் போய்விட்டதோ என்னவோ?" என்று குறைப்பட்டுக் கொண்டு அவனுக்குக் காபி கலந்துகொண்டு வந்தாள்.

காபியைப் பருகிக் கொண்டே "எங்கே மிஸ்டர் சாமிநாதனைக் காணோம்?" என்று விசாரித்தான் அவன்.

"அவர் பாரீசுக்குப் போயிருக்கிறார். வர இரண்டு நாட்களாகும்" என்று தெரிவித்தாள் அவர் மனைவி.

தயங்கிக் கொண்டே தான் வந்த விஷயத்தைத் தெரிவித்தான் நடராஜ். தன் நண்பரின் மனைவி பட்டுப் புடவைக்காக ஆசைப்படுவதாகக் கூறினான். அதை கேட்டதும் "நல்ல வேளையாக புதிதாக ஒரு பட்டுப் புடவையைப் பிரிக்காமல் அப்படியே வைத்திருக்கிறேன் நான். யாரையோ வாங்கி அனுப்பச் சொன்னால் அவர்கள் டார்க் மஜந்தா கலரில் வாங்கி அனுப்பி விட்டார்கள். என் கறுப்பு நிறத்திற்கு அதைக் கட்டிக் கொண்டால் எப்படி இருக்கும்? ஆகவே, அப்படியே வைத்திருக்கிறேன். அதை எடுத்துக் கொண்டு போங்களேன்" என்று புடவையைக் கொண்டு வந்து நடராஜிடம் கொடுத்தாள்.



மேலும் தயங்கிய நடராஜ், "இன்னும் ஒரு உதவிகூட செய்ய வேண்டும் நீங்கள்..." என்று இழுத்தான்.

"என்ன வேண்டும்? தயங்காமல் கேளுங்கள்..."

"இல்லை, அந்த நண்பரின் மனைவிக்கு நம் நாட்டு முறைப்படி அலங்காரம் செய்து கொண்டு பார்க்க வேண்டும் போலிருக்கிறதாம், அதனால் உங்கள் இந்தியப் பெண்கள் போட்டுக்கொள்ளும் நகைகளெல்லாம் கிடைத்தால் ஒரே ஒரு நாளைக்கு வாங்கிக் கொடுங்கள் நடராஜ் என்றான்"...நடராஜ் முடிக்கவில்லை; அதற்குள் "அவ்வளவுதானே. இதற்கா இவ்வளவு தயக்கம்?" என்று சிரித்துக்கொண்டே நகைகளை ஒரு சின்னப் பெட்டியில் போட்டுக் கொடுத்தாள்.

நன்றி கூறிவிட்டு அவற்றை எடுத்துக்கொண்டு எழுந்தான் நடராஜ்.

"இருங்கள், சாப்பிட்டுவிட்டுப் போகலாம். உங்களுக்குப் பிடித்தமான சாம்பார், ரசம்..."

"இல்லை, இன்னொரு நாள் வருகிறேன். நகைகளைத் திருப்பிக் கொடுக்க நாளைக்கே வரப்போகிறேனே, அப்போது சாப்பிட்டால் போயிற்று" என்று விடைபெற்றுக் கொண்டான் அவன்.

நடராஜ் சொல்லிக் கொடுத்தபடி அந்தப் பட்டுப் புடவையை உடுத்துக்கொண்டு, நெற்றியில் அந்த நிறத்தில் குங்குமப் பொட்டுடனும், கை நிறைய வளையல்கள் கலகலக்க, கழுத்தில் நெக்லஸ், சங்கிலிகளும் மின்ன அவள் எதிரில் வந்து அழகுத் தேவதையாக நின்ற அவளைக் கண்டு பிரமித்துப் போய்விட்டான் நடராஜ். அவளது தந்தம் போன்ற நிறத்திற்கும், செழுமையான உடற்கட்டிற்கும், உயரத்திற்கும் எடுப்பாக இருந்தது அந்த மஜந்தா கலர் புடவை.

ஹௌ லவ்லி... நீ எப்படி இருக்கிறாய் தெரியுமா எலைன்? எங்கள் நாட்டில் திருமண தினத்தன்று மணப் பெண் இப்படித்தான் இருப்பாள்'' என்றபடி எழுந்து அவளருகே வந்து அவளை அப்படியே கட்டிக்கொண்டு விட்டான்.

''புடவை ராஜ்... ஓ... எல்லாம் அவிழ்ந்துவிடும் ராஜ்'' என்று அவனது அணைப்பினுள் சிக்கிக் கொண்ட எலைன் தடுமாறினாள்.

''அவிழ்ந்தால் நானே திரும்பக் கட்டி விடுகிறேன். போதுமா?'' என்று சிரித்தான் அவன்!

''போங்கள் ராஜ்!'' என்று தலை கவிழ்ந்தாள் அவள்!

''எப்படி இருக்கிறது ராஜ்?''

''எப்படி இருக்கிறது தெரியுமா? உன்னைத் தூக்கிக் கொண்டு அப்படியே வானத்தில் பறக்கலாம் போலிருக்கிறது...'' என்ற நடராஜ், திடீரென்று ஏதோ நினைவிற்கு வந்தவனாக உள்ளே ஓடிப்போய்த் தன் காமிராவைக் கொண்டு வந்தான். அவளை நிற்க வைத்துப் படம் பிடித்து உடனே வெளியே வந்துவிட்ட அந்தப் புகைப் படத்தைக் கிழித்து அவளிடம் நீட்டிய போது, அதைப் பார்த்து அவளே ஆச்சரியப்பட்டாள்.

நிஜமாகவே எனக்கு இந்தப் புடவையும், நகைகளும் அழகாக இருக்கின்றன... ராஜ். இந்தியாவிற்கு வந்ததும் தினமும் நான் இதே மாதிரிதான் டிரஸ் பண்ணிக் கொள்ளப் போகிறேன், என்ன ராஜ்?''

''ஓகே. டார்லிங்! நீ எப்படி டிரஸ் பண்ணிக் கொண்டாலும் அழகாகத்தான் இருப்பாய்.''

வெளியே விளையாடப் போயிருந்த ஜென்னி, உள்ளே நுழைந்ததும் எலைனைக் கண்கொட்டாமல் பார்த்து ஒரு விநாடி திகைத்துப் போய் நின்றாள்.



''ஓ! ஹௌ நைஸ் மம்மி! நீ ரொம்ப அழகாயிருக்கே!'' என்று ஓடிவந்து எலைனின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''டாடி, எனக்கும் இதே மாதிரி டிரஸ் பண்ணி ஒரு போட்டோ எடுங்கள்'' என்று நடராஜைக் கெஞ்சவே, எலைனிடமிருந்து எல்லாவற்றையும் கழற்றி வாங்கி அவளுக்கு அணிவித்து பார்த்தபோது வேடிக்கையாக இருந்தது நடராஜிற்கு. அவன் சிரிப்பதைப் பார்த்த ஜெனிஃபர், ''என் டாடி, எனக்கு அழகாக இல்லையா?'' என்று தலையைச் சாய்த்துக் கேட்ட விதம் அவனை மிகவும் கவர்ந்தது.

''உனக்கு அழகாக இல்லையென்றால் வேறு யாருக்குமே அழகாக இருக்காது ஜென்'' என்றான்.

''ம்... போட்டோ எடுங்கள்''... சற்றுத் தள்ளி நின்று கம்பீரமாக அவனைப் பார்த்தாள் அவள். அவனது போட்டோவையும் கிழித்தெடுத்துக் கையில் கொடுத்தான் நடராஜ். அந்தப் புகைப்படத்தைப் பார்த்துச் சிரித்து விட்டு, ''ஸ்கூல் திறந்ததும், இதைக் கொண்டு போய் எல்லோரிடமும் காட்டப்போகிறேன்'' என்று பெருமை பொங்கி வழியத் தன் அறைக்கு ஓடினாள் ஜெனிஃபர்.

சிரித்துக்கொண்டே நடராஜ், சோபாவில் சாய்வதற்கும், டெலிபோன் மணி ஒலிப்பதற்கும் சரியாக இருந்தது. எழுந்து போய் ரிசீவரை எடுத்தான். இந்தியாவிலிருந்து டிரங்கால் என்றதும் நிற்கமுடியாமல் துவண்டன அவன் கால்கள். திடீரென்று டிரங்கால் ஏன் வரவேண்டும்? அந்த விநாடியில் அவனுக்குள் ஓராயிரம் எண்ணங்கள் முட்டி மோதிவிட்டன. சில விநாடிகளில் செராமனின் குரல் கேட்டதும், ''என்னப்பா?'' என்று துடிக்கும் உள்ளத்தோடு கேட்டான் அவன்.

''நடராஜ், நீ உடனே கிளம்பி வரவேண்டும். அனுவிற்கு உடம்பு சரியில்லை.''

அதைக் கேட்ட நடராஜ் உடல் முழுவதும் நடுங்கிப் பதற, ''என்னப்பா அனுவிற்கு?'' என்று கேட்பதற்குள் சொற்கள் தடுமாறின.

''பயப்படும்படி ஒன்றுமில்லை நடராஜ். நீ உடனே எதையாவது நினைத்துக்கொண்டு பதறாதே. வலி எடுத்து அவளை நர்ஸிங் ஹோமில் அட்மிட் பண்ணியிருக்கிறோம். டாக்டர்கள் எல்லாம் சாதாரணப் பிரசவமாக இருக்காது என்கிறார்கள். அனு பயந்து போய் உன்னை வரவழைக்கச் சொன்னாள். நீ வந்தால் அவளுக்கு அதுவே பாதி...''

நடராஜ் அவரைப் பேசவிடாமல் இடையில் குறுக்கிட்டான்; ''உண்மையாகப் பயம் ஏதும் இல்லையே? என்னிடம் மறைக்காதீர்கள் அப்பா உயிரோடு... அவளை... அவளை என்னால் பார்க்க முடியுமா அப்பா?''... அவன் குரல் பதறியது.

''அப்படியெல்லாம் அபசகுணமாகப் பேசாதே நடராஜா எல்லாம் நல்லபடி நடக்கும். நீ உடனே. கிளம்பி வா...''

''சரியப்பா, நான் எப்படியாவது நாளைக்கே கிளம்பி வருகிறேன்.''

கை நடுங்க ரிசீவரை வைத்தான் நடராஜ்.

## 17

ஒரு பொய்யைச் சொல்லி விட்டால் பின் அதை மறைக்க ஒன்பது பொய்கள் சொல்ல வேண்டி வரும் என்பார்கள். 'நான் திருமணமாகாதவன்' என்ற ஒரு பொய்யைச் சொன்ன பிறகு இதுவரை எத்தனையோ பொய்களைச் சொல்லி விட்டான் நடராஜ். அப்படிச் சொல்லும் ஒவ்வொரு சமயத்திலும் அவன் நெஞ்சம் எவ்வளவோ வேதனைப்படும், அதேமாதிரி வேதனையில்தான் அப்போதும் தவித்துக்கொண்டிருந்தான் அவன்.



அனுவைப் பற்றிய போன் செய்தியைக் கேட்டுக் கலங்கி நின்ற அவனது முகத்தை நிமிர்த்திக் கண்ணீரைத் துடைத்துக்கொண்டே, ''என்ன ராஜ்?'' என்று பதட்டம் நிறைந்த குரலில் எலைன் கேட்டபோது அவனிடம் எப்படி விஷயத்தைச் சொல்லுவது என்று தெரியாமல் தடுமாறினான். 'இப்போதாவது உண்மையைச் சொல் நடராஜ்' என்று அவன் மனச்சாட்சி அவனை வற்புறுத்தியது. அவள் முகத்தை நிமிர்ந்து பார்த்தவுடன் உண்மையைக் கூறும் தைரியம் வரவில்லை அவனுக்கு.

''இந்தியாவிலிருந்து என்னை உடனே கிளம்பி வரச் சொல்லி டிரங்கால் வந்தது.''

அதைக் கேட்டதும் அவள் முகம் இருண்டு போய் விட்டது.

''என்ன ராஜ், விஷயம்?'' என்று கேட்டபோது, அவள் இதழ்களைப் போலவே குரலும் நடுங்கியது.

''என்... என்... அம்மாவிற்கு உடம்பு சரியில்லையாம். மிகவும் ஸீரியஸாக இருப்பதால் உடனே கிளம்பி வா என்று போன் பண்ணினார்.''—சொல்லும்போது நடராஜ் தலையைக் குனிந்து கொண்டுவிட்டான். அவளது கண்களைச் சந்திக்கும் தைரியம் அவனிடமில்லை. எப்படிப்பட்ட பொய்யை வாய் கூசாமல் சொல்கிறோம் என்று எண்ணிய போது அவன்மீதே அவனுக்கு எல்லையற்ற வெறுப்பு ஏற்பட்டது.

அதைக் கேட்ட எலைன் ஒன்றும் பேசவில்லை. சிலவிநாடிகள் மௌனமாக அவன் முகத்தையே பார்த்துக் கொண்டு நின்றாள். பின் மெதுவாக ''ஸாரி ராஜ்''... என்ற போது அவள் குரல் உடைந்து சிதறி விட்டது. கண்கள் மளமளவென்று நீரைப் பொழிந்தன. நடராஜ் எழுந்து போய் அவளைத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவனது தோளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு, ''போகப் போகிறீர்களா ராஜ்!''

என்று விசும்பலுக்கிடையே கேட்டாள். அந்த கேள்வியிலிருந்த தாபம் அவன் நெஞ்சைச் சுட்டது.

"போக வேண்டாமா எலைன்? போய்ப் பார்த்து விட்டு சீக்கிரம் வந்து விடுகிறேன்..."

"வருவீர்களா, ராஜ்? நிஜமாகவே திரும்ப இங்கு வருவீர்களா..."

"என்ன எலைன் அப்படிக் கேட்கிறாய்? வருவேன் டார்லிங். நிச்சயமாக வருவேன். என் மீது நம்பிக்கை இல்லையா உனக்கு!"

அதற்கு அவள் பதிலளிக்கவில்லை.

"நீங்கள்... நீங்கள் வராவிட்டால் நானே கிளம்பி அங்கு வந்து விடுவேன். உங்களுக்காக உங்கள் நினைவோடு நான் இங்கே இயந்திரமாக நாட்களைக் கடத்திக் கொண்டிருப்பேன் என்பதை மறந்து விடாதீர்கள்.

அவளை இறுகத் தழுவிக் கொண்ட நடராஜ், "மறக்க மாட்டேன் எலைன். மறக்கவே. மாட்டேன்" என்றான் குரல் தழுதழுக்க.

அப்போதே ஏர்போர்ட்டிற்கு டிக்கெட்டிற்காகப் போன் செய்தான் நடராஜ். அதிர்ஷ்டவசமாக மறுநாள் பகல் விமானத்திலேயே அவனுக்கு இடம் கிடைத்தது. உடனே ஹோம்ஸின் வீட்டிற்குப் போன் செய்தான். நல்ல வேளையாக அவரும் வீட்டிலிருந்தார். அவரிடமும் விஷயத்தைக் கூறிவிட்டு மறுநாள் விமானத்தில் புறப்படப் போவதாகச் சொன்னான்.

"எனக்கு ரொம்பச் சங்கடமாக இருக்கிறது நடராஜ். நீங்கள் கிறிஸ்துமஸுக்கு எங்களோடு இருப்பீர்கள் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டிருந்தேன். ம்... ம்! என்ன செய்வது? எப்படியோ, உங்கள் அம்மா சீக்கிரம் குணமடைவார்கள் என்று நினைக்கிறேன். உங்கள் ஏர் டிக்கெட்டிற்கு நான் ஏற்பாடு செய்கிறேன், இன்று நான் ஜெனிவாவிற்குப் போவதால் என்னால் உங்களை



20212
363033

வழி அனுப்ப வர முடியாது. ஸாரி. பதில் மோனிகா உங்களை வழியனுப்ப வருவாள்" என்றார்.

"அதைப் பற்றிக் கவலைப்படாதீர்கள்" என்று கூறி அவன் போனை வைத்த ஒரு மணி நேரத்திற்குள் மோனிகா அவனுக்குப் போன் செய்தாள்.

"உங்கள் ஏர் டிக்கெட் என்னிடம் இருக்கிறது. நாளை ஏர்போர்ட்டில் உங்களைச் சந்திக்கும்போது கொடுக்கிறேன்" என்றாள் அவள்.

"நீங்கள் ஏர்போர்ட்டிற்கு வர வேண்டுமென்ற அவசியமில்லை மிஸ் மோனிகா. விடுமுறை நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடத் திட்டம் போட்டிருப்பீர்கள். அதற்கிடையே அனாவசியமாக உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க விரும்பவில்லை. முடிந்தால் இப்போதே இந்த விலாசத்திற்கு டிக்கெட்டை மட்டும் அனுப்பி வையுங்கள் போதும்" என்று பதிலளித்தான் நடராஜ். ஆனால், மோனிகா தானே டிக்கெட்டைக் கொண்டு வந்து கொடுத்துவிட்டு, "உங்கள் தாய் சீக்கிரம் நலம் பெற என் வாழ்த்துக்கள்" என்று சொல்லி விட்டுப் போனாள். ஒவ்வொருவரும் 'தாய்' தாய் என்று கூறியபோது, நடராஜின் இதயம் விண்விண் என்று வலித்தது.

நடராஜ் தாய் நாடு திரும்பப் போகும் விஷயம் ஜெனிஃபருக்குத் தெரிந்ததும், "நோ டாடி. யூ ஆர் நாட் கோயிங். நான் உங்களைப் போக விடமாட்டேன்" என்று அவன் கழுத்தைக் கட்டிக் கொண்டாள். அவளைச் சமாதானப் படுத்துவதற்குள் போதும் என்றாகிவிட்டது நடராஜிற்கு.

"நாங்களும் வருகிறோம் டாடி. எங்களையும் அழைத்துப் போங்கள். நீங்கள் இல்லாமல் எங்களால் இருக்கவே முடியாது" என்று கண்ணீர் வடித்த அவளைப் பார்த்ததும் அவன் இதயம் விம்மியது.

"சீக்கிரம் திரும்பிவந்து விடுவேன் ஜென்னி. வந்து உங்களை அழைத்துப் போகிறேன். அதுவரை சமர்த்தாக இருக்க வேண்டும். எங்கே, அழாமல் என்னைப்பார்த்துச் சிரி பார்க்கலாம்?"—நடராஜ் அவள் முகவாயைப் பிடித்துக் கொண்டு கெஞ்சினான், புன்னகை செய்ய முயற்சி செய்தாள் அவள். ஆனால் அந்த முயற்சியை மீறிக் கொண்டு கண்களில் கண்ணீர்தான் பீறிட்டது.

"டா...டி..." என்று அவன் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள்.

அன்றிரவு முழுதும் எலைன் தூங்கவில்லை. சின்னக் குழந்தையாகக் கண்ணீர் வடித்தபடி நடராஜை ஏதேதோ கேட்டுக் கொண்டே இருந்தாள்.

அனுவை உடனே போய்ப் பார்க்கவேண்டும் என்ற துடிப்பிலும், எலைனை விட்டுப் பிரிய வேண்டுமே என்ற வேதனையிலும் இருதலைக் கொள்ளி எறும்பாகத் தவித்தான் அவன். அனு இப்போது எப்படி இருக்கிறாளோ, அவளுக்கு என்ன ஆயிற்றோ? என்று அதே எண்ணத்தில் அவன் மிதந்து கொண்டிருந்த போதிலும், எலைனின் கேள்விகளுக்கும் பதிலளித்துக் கொண்டே வந்தான் அவன்.

இந்தியாவை விட்டு அவன் கிளம்பிய போது அனுவும் இதே மாதிரித் தான் கண்ணீரால் குளிப்பாட்டி அன்பால் திணற அடித்தாள். 'அந்த இரவைப் போலவே தான் இந்த இரவும் இருக்கிறது' என்று வேதனையோடு நினைத்துக் கொண்டான் அவன். 'உலகெங்கும் பெண்கள் ஒரே மாதிரிதானா? உருவத்தில் பெண்ணுக்குப் பெண் எத்தனை வித்தியாசங்கள் இருந்தாலும் உள்ளத்தில் எல்லாப் பெண்களும் ஒன்றுதான் போலிருக்கிறது. அன்பு செலுத்துவதில், அன்பு செலுத்துபவனிடம் அடங்கிப் போவதில், அவனைப் பிரியும்போது தவிப்பதில் பெண்ணுக்குப் பெண் வித்தியாசமே கிடையாதா? ஆண்டவன் பெண்களின் உடலை மட்டுமல்ல, உள்ளத்தை



யும் மென்மையான பூவாகத்தான் படைத்திருக்கிறான்.'—நடராஜ் ஆழமாகப் பெருமூச்சு விட்டான்.

மறுநாள் கார் ஏர்போர்ட்டை அடையும்வரை வழி முழுவதும் ஒருவரும் பேசவில்லை. கனத்த இதயங்களும், கலங்கும் கண்களுமாக மூவருமே துயரத்தில் ஆழ்ந்து போயிருந்ததால் வார்த்தைகள் வெளிவராமல் தொண்டைக்குள்ளேயே சிக்கிக் கொண்டன. விமானத்தில் ஏறு முன், முதன் முதலாக அவன் பார்த்தபோது எப்படியிருந்தாளோ, அதே மாதிரி சோகச் சித்திரமாக நின்று கொண்டிருந்த எலைனைத் தழுவி முத்தமிட்டான் நடராஜ். கண்ணீர் பெருகும் கண்களைத் துடைத்துக் கொண்டே, "நோ டார்லிங்..." என்று அவளை அழக்கூடாதென்று கெஞ்சினான். அவன் மார்பில் சாய்ந்தாள் அவள்.

"ராஜ்...ராஜ்...என் மனசு சரியாக இல்லை பயங்கரமாக ஏதோ ஒன்று எனக்கு நடக்கப் போகிறது என்று தோன்றுகிறது."

"நோ டியர். ஒன்றும் நடக்காது. இன்னும் பதினைந்தே நாட்களில் நான் திரும்ப உன்னுடன் இருக்க மாட்டேனா?"

"உண்மையாகத்தான்!" என்று வாக்குக் கொடுத்தான் அவன். எலைனை சமாதானப்படுத்தியதுபோல் அவ்வளவு சுலபமாக ஜெனிஃபரைச் சமாதானப்படுத்த முடியவில்லை அவனால்

"நீங்கள் இல்லாமல் என்னால் இருக்கவே முடியாது" என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிய அவளைத் தூக்கி நெஞ்சோடு அணைத்துக் கொண்டு முகத்தில் விழுந்த பொன்னிறக் கூந்தலை ஒதுக்கிவிட்டு அவள் கன்னங்களில் மாறி மாறி முத்தமிட்டான் நடராஜ்.

மூச்சுவிடத் திணறிக் கொண்டே "எப்போது திரும்பி வருவீர்கள்? நான் நாட்களை எண்ணிக் கொண்டிருப்

பேன்'' என்று அவன் கேட்டதும், ''இன்னும் பதினைந்து நாட்களில் பேபி'' என்று பதிலளித்தபோது அவன் குரல் கரகரத்தது.

விமானத்தின் கடைசிப் படியில் நின்று கையாட்டினான் நடராஜ். தொலை தூரத்தில் தெரியும் விளக்கொளியாக, ஜெனிஃபரைத் தூக்கி வைத்துக் கொண்டு மறு கையால் கர்ச்சீப்பை ஆட்டும் எலைனின் உருவம் இலேசாகத் தெரிந்தது. சோகச் சித்திரமாய் நின்று கொண்டிருந்த அவளது அந்த மங்கிய உருவத்தைக் காண முடியாமல் அவன் கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது. நீண்ட நெடும் விம்மல் ஒன்று அவன் உள்ளத்தில் தெறித்து விழுந்தது.

விமானம் மீனம்பாக்கத்தை அடையும்வரை தன் உணர்விலேயே இல்லை நடராஜ். தண்ணீரிலிருந்து எடுத்துத் தரையில் போட்ட மீனாகத் துடித்துக் கொண்டிருந்தான் அவன்.

# 18

மீனம்பாக்கத்தில் அவனுக்காக சிவராமனும், ஆர்த்தியும் காத்துக் கொண்டிருந்தனர். கஸ்டம்ஸ் செக்கிங்கை பம்பாயிலேயே முடித்துக் கொண்டுவிட்டதால் நடராஜ் சீக்கிரமே தன் சூட்கேசுடன் வெளியே வந்துவிட்டான்.

''டா...டி...'' என்று ஓடிவந்து கால்களைக் கட்டிக் கொண்ட ஆர்த்தியைக் குனிந்து தூக்கிக் கொள்ளும் போது அவன் கண்கள் குளங்களாக மாறியிருந்தன.

''ஹௌ ஆர் யூ டார்லிங்?'' என்று கேட்டு அவள் கன்னங்களில் முத்தமிட்டு விட்டு அவசரமாக சிவராமனை நெருங்கி ''அனு, எப்படி இருக்கிறாள் அப்பா?'' என்று துடிப்போடு கேட்டான் அவன்.



''அனுவிற்கு ஒன்றுமில்லை நடராஜா, பயப்படாதே. ஆண்டவன் புண்ணியத்தில் அவள் நன்றாகத்தானிருக்கிறாள். ஆனால்...'' என்று தயங்கினார் அவர்.

''ஆனால், என்னப்பா?''

நடராஜின் இதயம் வேகமாக அடித்துக் கொண்டது.

''மனத்தைத் தேற்றிக் கொள் ராஜா. இந்தக் குழந்தை இல்லை என்றால் இன்னொன்று...''

நடராஜிற்குப் புரிந்து விட்டது. ராஜாப் பயல் என்று அவன் வெகு நாட்களாக கனவு கண்டானே, அது கனவாகவே போய்விட்டது என்பதை உணர்ந்து கொண்டான். ''குழந்தை வயிற்றிலேயே இறந்துவிட்டது நடராஜ். ஆபரேஷன் செய்து தான் வெளியே எடுத்தார்கள். யார் செய்த புண்ணியமோ, அனு உயிர் தப்பினாள்.

''அப்...பா...குழந்தை ஆணா...பெண்ணா...?'' என்று தினறிக் கொண்டே கேட்டான் நடராஜ். அவனைத் திரும்பிப் பார்த்தார் அவர். அவனது உள்ளத்து வேதனையை அவரால் நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. மெதுவாக அவன் முதுகில் தட்டிக் கொடுத்தார். ''டேக் இட் வித் ஈஸ், பெரிய உயிர் பிழைத்ததே, அதுவே நீ செய்த அதிர்ஷ்டம்தான். அடுத்த வருடத்திற்குள் ஜம்மென்று இன்னொரு பேரன் எனக்குப் பிறக்காமலா போய்விடப் போகிறான்?''

காரில் ஏறியதும் டிரைவரைப் பார்த்து, ''நேராக நர்ஸிங் ஹோமிற்குப் போப்பா'' என்றான் நடராஜ்.

கசக்கிப் போட்ட மலராகக் கட்டிலில் துவண்டு கிடந்த அனுவைப் பார்த்ததும் நடராஜின் நெஞ்சம் விம்மித் தணிந்தது. கண்களில் கண்ணீர் முட்டிக் கொண்டு நின்றது. அந்த உடலின் நிலையிலிருந்து அவள் எவ்வளவு கஷ்டப்பட்டிருக்கிறாள் என்பதை உணர்ந்து

கொண்டான் நடராஜ். "குழந்தை இறந்ததற்காக நாம் வருத்தப்பட்டுக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவே கூடாது. பாவம்! அவளே உடலாலும் மனத்தாலும் நொந்து போயிருக்கிறாள்' என்று முடிவு செய்து கொண்டான் அவன். அவன் வந்து அருகில் நின்று கொண்டிருப்பதைக்கூட உணர முடியாத நிலையில், கண் மூடிப் படுத்திருந்த அவள் முகத்தைப் பார்க்கப் பார்க்க வேதனை அவன் மனத்தைப் பிழிந்தெடுத்தது. நெஞ்சம் உருகிக் கரைய அவள் பக்கத்தில் உட்கார்ந்து நெற்றியில் விழுந்து விளையாடிக் கொண்டிருந்த கூந்தலை ஒதுக்கி விட்டான். அந்த ஸ்பரிசத்தில் கண் விழித்தாள் அவள். அவனை எதிரே பார்த்ததும் அவள் கண்கள் விரிந்தன. வாடிச் சோர்ந்து போயிருந்த அந்த முகத்தில் பளீரென்று ஓர் ஒளி பரவியது.

"ரா...ஜ்..." அவள் இதழ்கள் துடியாய்த் துடித்தன. கண்கள் கெண்டை மீனாக நீரில் மிதந்தன.

"அனு... எப்படியிருக்கிறாய் டார்லிங்?"

அவன் குரல் நடுங்கியது.

அவள் மெதுவாக அவன் கரத்தைப் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டாள். கண்ணீரில் நனைந்திருந்த இமைகள் அவன் விரல்களிற் பட்டதும் அவனுடல் சிலிர்த்தது.

"நான் கனவு காணவில்லையே ராஜ்... உண்மையாகவே நீங்கள்தானே...?"

அவள் என்ன பேசுகிறாள் என்று கேட்க அவள் முகத்தருகே குனிந்த நடராஜ், அவள் நெற்றியில் லேசாக முத்தமிட்டான்.

"இது கூடக் கனவா, பார் அனு."

அனு கண்களை மூடிக் கொண்டாள். விழிகளின் ஓரங்களில் கண்ணீர் கோடாக வழிந்தது.



என்று அதட்டிவிட்டுப் போனாள். நர்ஸ் அறையில் இருந்தவரை அமைதியாக இருந்த அனு, அவள் தலை மறைந்ததும் திரும்ப நடராஜிடம் பேச்சுக் கொடுத்தாள.

"அப்புறம் பேசிக் கொள்ளலாம் அனு. தயவு செய்து பேசாமல் படுத்துத் தூங்கம்மா" என்று கெஞ்சினான் நடராஜ்

"ஏன் ராஜ், உங்களுக்குத் தூக்கம் வருகிறதா? பிரயாண அலுப்பில் களைப்பாக இருக்கிறதா?"

ஆமாம் என்று கூறினால் தவிர அவள் பேசாமல் இருக்க மாட்டாள் என்று உணர்ந்த நடராஜ், 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

"சரி, ராஜ் நீங்கள் தூங்குங்கள். இனிமேல் உங்களைத் தொந்தரவு செய்ய மாட்டேன்" என்று கூறிவிட்டு, அதன் பின்னர்தான் கண்களை மூடினாள் அனு.

மறுநாள் ஜுர வேகம் அதிகமாகித் தன் நினைவின்றி ஏதேதோ பிதற்றத் தொடங்கி விட்டாள் அனு. அந்தப் பிதற்றலிலும் 'ராஜ், ராஜ்' என்று அவன் பெயரைத்தான் அழைத்தாள்.

அதைக் கேட்டுக் கொண்டிருந்த நடராஜின் நெஞ்சம் விம்மியது. டாக்டரிடம் போய் "எப்படியாவது என் அனுவைக் காப்பாற்றிவிடுங்கள்" என்று அவர் கரங்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினான்.

நடராஜ் அவளை விட்டு அசையாமல் அவள் பக்கத்திலேயே உட்கார்ந்து ஊண், உறக்கத்தை மறந்து, 'முருகா என் அனுவைக் காப்பாற்று. தயவுசெய்து என்னை ஏமாற்றி விடாதே' என்று மனமுருக உடல் உருக ஆண்டவனின் நெஞ்சமே உருகிக் கரையும்படி வேண்டினான்.

ஆனால், அவனது வேண்டுகோளுக்கு அந்த ஆண்டவன் செவி சாய்க்கவில்லை. அவனது கெஞ்சலின்

அவர் மனம் உருகவில்லை. மறுநாள் அனுவின் கண்களை நிரந்தரமாக மூடவைத்து அவளை மீளாத உறக்கத்தில் ஆழ்த்தி விட்டார்.

'நடராஜ், நீ அவளுக்குத் துரோகம் செய்தாய். அவள் உன்னை ஏமாற்றிவிட்டுப் போய் விட்டாள் போ' என்று அலட்சியமாகக் கூறி அவளைத் தண்டித்து விட்டார். நடராஜ் கனவு கண்டானே ஒரு ராஜாப் பயல் வேண்டுமென்று, அந்த ராஜாப்பயல் தன்னோடு மட்டுமில்லாமல் தன்னைச் சுமந்த ஜீவனையும் உடனழைத்துக்கொண்டு போய்விட்டான்.

'அப்பா, உனக்குத் துணை ஆர்த்தி, எனக்குத் துணை 'அம்மா' என்று சொல்லாமற் சொல்லித் தன்னிடம் அவளை அழைத்துக்கொண்டு விட்டான்.

''அனு...'' என்று அவளுடலின்மீது விழுந்து அவன் கதறிய கதறலில் எல்லா நெஞ்சங்களுமே வெடித்துச் சிதறின.

## 19

அனு போய் ஒரு வாரத்திற்கு மேல் ஆகிவிட்டது. நடராஜின் மனத்தைப் போல அந்த பங்களாவும் இருண்டு வெறிச்சென்று ஆகிவிட்டது. மூலைக்கு ஒருவராக, சொல்லில் அடங்காத ஒரு துயரத்தில் மூழ்கிக் கிடந்தனர். அனுவின் அறையை விட்டு நகரவே இல்லை நடராஜ். அவளது பீரோ, அவளது புடவைகள், அவள் அலங்கரித்துக் கொள்ளும் டிரஸ்ஸிங் டேபிள், அவர்கள் படுத்துக்கொண்டு இன்பக் கதைகள் பேசுவார்களே, அந்தக் கட்டில் எல்லாம் அவனைப் பார்த்துச் சிரிப்பதைப் போலிருந்தது. ஒவ்வொன்றின் அருகிலும் போய் நின்று தொட்டுப் பார்த்தான் நடராஜ். அனுவையே தொடுகிற மாதிரி உள்ளத்தில் ஒரு சிலிர்ப்பு.

இனிமேல் தொடுவதற்கு அவளுடல் இல்லை. 'ராஜ்' என்று குழையும் அந்தக் குரலைக் கேட்க முடியாது.



அவளோடு அவன் வாழ்ந்த அந்த எட்டு வருட வாழ்க்கையும் இனிமேல் இன்பமயமான ஒரு கனவுதான் என்று நினைத்துக் கொண்டவுடன் அவனால் அவன் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. 'உனக்கு நான் துரோகம் செய்துவிட்ட பின், இவனோடு ஏன் வாழ வேண்டுமென்று போய்விட்டாயாம்மா? களங்கப்பட்ட இவன் உடல், மனம் இரண்டுமே வேண்டாமென்று வெறுத்து ஒதுக்கித் தள்ளிவிட்டுப் போய்விட்டாயா? என்னை விட்டுப் பிரிய உனக்கு எப்படி அனு மனம் வந்தது?' என்று தனக்குத்தானே குமுறிக்கொண்டு சின்னக் குழந்தையாக வாய்விட்டுக் கதறி அழுவான் அவன். அப்போதெல்லாம் சிவராமனும், தங்கம்மாளும் தங்கள் துக்கத்தை மறந்து அவனைத் தேற்றுவார்கள்.

''நீயே இப்படி அழுதால் எப்படி ராஜா? குழந்தையும் உன்னைப் பார்த்து அழுகிறாள் பார். நீ இப்படி மனம் உடைந்து போனால் அவளை யார் ராஜா தேற்றுவார்கள்?'' என்று சிவராமன் அவனைத் தன் தோளோடு சேர்த்து அணைத்துக்கொண்டு ஆறுதலளிக்க முயற்சிப்பார்.

''அடுத்த வருடத்திற்குள் எனக்கு இதே மாதிரி ஒரு பேரன் பிறக்காமலா போகப் போகிறான் என்றீர்களே அப்பா... இப்போது அனுவே போய்விட்டாளே...?'' என்று அவர் தோளில் முகம் புதைத்துக்கொண்டு அவன் கதற ஆரம்பித்ததும், அவனைத் தேற்ற வந்த அவர்களும் சேர்ந்து கண்ணீர் வடிப்பார்கள்.

அன்று காலை அறையில் அமர்ந்து எங்கோ வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந்தான் நடராஜ். மெதுவாக அறையினுள் நுழைந்தாள் ஆர்த்தி. அவனருகே போய் தயங்கித் தயங்கி ''டாடி''...என்று அழைத்தாள். நடராஜின் செவிகளில் அவள் அழைத்தது கேட்கவே இல்லை. அப்படி ஆழமான சிந்தனையில் மூழ்கிப் போய் இருந்தான் அவன். ஆர்த்தி அவன் தோளை மெதுவாகத் தொட்டாள்.

திரும்பிப் பார்த்த நடராஜ், ''ஆர்த்திம்மா...'' என்று அவளை இழுத்துத் தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான். அவன் கண்கள் திரும்பவும் கலங்கின. அவனது அணைப்பிற்குள் தன்னை ஒடுக்கிக்கொண்ட ஆர்த்தி, ''அப்பா...'' என்று அழைத்தாள்.

''என்னம்மா?''

''உங்களுக்கு ஒரு லெட்டர் வந்திருக்கு அப்பா...'' ஆர்த்தி தன்கையிலிருந்த கடிதத்தை அவனிடம் நீட்டினாள்.

வேண்டா வெறுப்பாக அதை வாங்கிக் கொண்டான் நடராஜ். அந்த ஏர்மெயில் கவரையும், அதன் மேலிருந்த கையெழுத்தையும் பார்த்த உடனேயே அது யாரிடமிருந்து வந்திருக்கிறது என்பதைப் புரிந்துகொண்டான் அவன்.

ஏ...னை,...ன்!

அவளாவது அருகே இருந்திருக்கக்கூடாதா? இருந்திருந்தால் உண்மையைக்கூறி எல்லாவற்றையும் எடுத்துச் சொல்லி அவளைக் கட்டிக்கொண்டு கதறி இருப்பான். தன் உள்ளக் குமுறலையெல்லாம் கொட்டி இருப்பான். ஓராயிரம் முறைகள் தன்னை மன்னிக்கும்படிக் கெஞ்சியிருப்பான். ஆனால் அவளோ, பல ஆயிரம் மைல்களுக்கப்பால் எங்கோ இருக்கிறாளே.. இப்போது இந்தக் கடிதத்தில் என்ன எழுதியிருப்பாள்?—நடராஜன் துடிப்போடு கவரைக் கிழித்தான்.

கடிதத்தை வெளியே எடுத்தபோது அதிலிருந்து ஒரு துண்டுக் கடிதம் தனியாக அவன் மடிமீது விழுந்தது. முதலில் மடியில் விழுந்த அந்தச் சின்னக் காகிதத்தைப் பிரித்துப் படித்தான். அதில் இரண்டே வரிகள் குண்டு குண்டாக மல்லிகைப் பூக்களைச் சரமாகக் கட்டியதைப் போல் ஜென்னியின் அழகான கையெழுத்து :

குட்பை பப்பா.

லவ்

ஜெனிஃபர்



கடிதத்தின் அந்த வாசகத்திலிருந்து நடராஜனால் ஒன்றும் புரிந்துகொள்ள முடியவில்லை. அதன் அர்த்தம் என்ன? குட்பை என்று மட்டும் அவள் ஏன் எழுத வேண்டும்? இதயம் படபடக்க பரபரப்புடன் எலைனின் கடிதத்தைப் பிரித்தான்.

மைலவ் என்று கடிதத்தை ஆரம்பித்திருந்தாள் எலைன் :

''நீங்கள் போனதும் ஏர்போர்ட்டிலிருந்து நேராக நம் அபார்ட்மெண்டிற்குத் திரும்பினேன். மெயில் பாக்சில் கடிதம் ஒன்று போடப்பட்டிருப்பதை எதேச்சையாகப் பார்த்து வெளியே எடுத்தபோது அது உங்களுக்கு வந்த கடிதம் என்று தெரிந்தது. அதன் பின்னால் எழுதப்பட்டிருந்த முகவரியிலிருந்து அது இந்தியாவிலிருந்து, உங்கள் வீட்டிலிருந்து வந்த கடிதம்தான் என்று புரிந்துகொண்டவுடன் ஏதாவது முக்கியமான விஷயம் இருந்தால் உடனே உங்களுக்குத் தந்தி மூலமோ டிரங்கால் மூலமோ தெரியப்படுத்தலாமே என்று பிரித்துப் பார்த்தால் கடிதம் தமிழில் எழுதப்பட்டிருந்தது.

மிஸ்டர் சாமிநாதனின் வீட்டிற்குப் போய் நகைகளைத் திருப்பிக் கொடுத்துவிடும்படி நீங்கள் கேட்டுக்கொண்டு அவர்கள் விலாசமும் கொடுத்துவிட்டுப் போனீர்களல்லவா? நகைகளையும் எடுத்துக்கொண்டு அப்படியே அந்தக் கடிதத்தையும் எடுத்துக்கொண்டு அங்கு போனேன். சாமிநாதனிடம் கடிதத்தைக் கொடுத்து அதை அப்படியே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்துச் சொல்லும்படி கேட்டேன்.

ராஜ், அது உங்கள் மனைவி உங்களுக்கு எழுதிய கடிதம். அவர் படிக்க ஆரம்பித்த அந்த விநாடியில் என் இதயத்தில் எப்படிப்பட்ட அதிர்ச்சி ஏற்பட்டது தெரியுமா? அதை வார்த்தைகளில் அடக்கிவிட முடியாது ராஜ். அடிக்கடி நீங்கள் கூறுவீர்களே, நீ மெழுகு

சிலைமாதிரி இருக்கிறாய் எலைன்' என்று, அதே மாதிரி
உட்கார்ந்து கடிதம் முழுவதையும் படிக்கச் சொல்லிக்
கேட்டுவிட்டு எழுந்தபோது என் நெஞ்சம் என்ன
பாடுபட்டிருக்கும் என்று உங்களால் புரிந்து கொள்ள
முடியுமா?

காரில் திரும்பி வந்தபோது, 'நான் என்ன பாவம்
செய்தேன் ஆண்டவனே! எதற்காக என்னை இப்படித்
தண்டிக்கிறாய்? என்னை ஏமாற்றுபவர்களிடமே என்
இதயத்தைப் பறிகொடுத்து விட்டுத் தவிக்கும்படி
செய்கிறாய்?' என்று கண்ணீர்விட்டு அழுதுகொண்டே
வந்தேன். ஆனால் நன்றாக யோசித்தபோது என்
மனத்தில் எல்லையில்லாத ஓர் இன்பமும் பெருகியது
ராஜ். என்மீதுள்ள அன்பினால் தானே நீங்கள் உங்கள்
மனைவியைப் பற்றிய விஷயத்தை என்னிடமிருந்து
மறைத்துவிட்டீர்கள்! என்னிடம் நீங்கள் கொண்ட
அளவு கடந்த காதலால்தானே திருமணமாகாதவன்
என்று பொய்சொல்லி விட்டீர்கள் என்று நினைத்த
போது என் உள்ளம் சிலிர்த்துவிட்டது ராஜ். அப்படிப்
பட்ட உங்கள் அன்பைப் பெற்ற நான், எவ்வளவோ
பாக்கியசாலி ராஜ்.

ஆனால் டியர், உங்கள் மனைவியின் கடிதத்தி
லிருந்து, அதிலிருந்த ஒவ்வோர் எழுத்திலிருந்தும் அவள்
உங்கள்மீது வைத்திருக்கும் உண்மையான அன்பை
என்னால் புரிந்து கொள்ள முடிந்தது. நீங்கள் இல்லை
யென்றால் அவளுக்கு வாழ்க்கையே இல்லை என்பதை
வரிக்குவரி அவள் உணர்த்தியிருந்தாள். அப்படி ஒருவர்
மீது அன்புவைத்து விட்டுப் பின் ஏமாறுவதானால்
அது எப்படி இருக்கும் என்பதை என்னைவிட வேறு
யாரும் அவ்வளவு நன்றாக உணர மாட்டார்கள் ராஜ்.
எனக்கு ஏற்பட்ட அந்த நிலைமை, வேறு எந்தப்
பெண்ணிற்குமே ஏற்படக்கூடாது ராஜ். அதிலும்
அப்படிப்பட்ட ஒரு நிலைமை நான் உயிருக்கு உயிராக
நேசிக்கும் உங்கள் மனைவிக்கு வரவே கூடாது.



ஒருத்தியை மணந்து அவளை உயிராக நேசிக்கும்
உங்கள் மனைவிக்கு வரவே கூடாது.

ஒருத்தியை மணந்து அவளை உயிராக நேசித்து
அவளோடு குடும்பம் நடத்திவிட்டுப் பின்வேறொருத்தியை
நாடிப் போகும் அந்த குணம் இருக்கிறதே, அதை நான்
மனதார வெறுக்கிறேன். அப்படிப்பட்ட ஒரு
குணம் எல்லா ஆண்களிடமும் இருக்கிறது போலிருக்
கிறது. உங்களை பார்த்ததும் நீங்கள் தனிப்பட்டவராக
இருப்பீர்கள் என்று நினைத்தேன், ஆனால் நானும் அதே
வர்க்கத்தைச் சேர்ந்தவன்தான் என்று நிரூபித்து
விட்டீர்கள்.

உங்களை கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவு
செய்து உங்களிடமுள்ள அந்த பலவீனத்தை விட்டு
விடுங்கள். உங்கள் மனைவியோடு நிம்மதியாக, சந்தோஷ
மாக வாழ முயலுங்கள். உங்களையே நம்பியிருக்கும்
பேதைப்பெண் அவள். அவளை ஏமாற்றாதீர்கள் ராஜ்.
ஒருபோதும் ஏமாற்றாதீர்கள். அவளுடைய வாழ்க்கை
யில் புகுந்து நான் நாசமாக்க விரும்பவில்லை. இந்தக்
கடிதம் உங்கள் கையில் கிடைக்கும் போது நான்
லண்டனை விட்டுக் கிளம்பியிருப்பேன். உலகத்தின்
எந்த மூலையிலோ வாழ்ந்துக் கொண்டுதான் இருப்பேன்—
உங்கள் நினைவுடன்.

உங்கள் மனைவிக்கும், ஆர்த்திக்கும் என் அன்பு.
உங்கள் நல்வாழ்க்கையை வேண்டும்—

என்றும் உங்கள்,

**எலைன்.**

கடிதம் நடராஜின் கரத்திலிருந்து நழுவிக் கீழே விழுந்
தது. அவன் கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர்
பெருகியது. ''எலைன், நீயும் என்னை விட்டுப் போகி
றாயா? நீ யாருக்காக ஊரை விட்டே போகிறாயோ,
அவள் இந்த உலகத்திலேயே இல்லை எலைன். ப்ளீஸ்,
என்னை விட்டுப்போய் விடாதே எலைன். தயவு செய்து

போய்விடாதே" என்று அரற்றினான் நடராஜ். ஆவேசம் வந்த மாதிரி டெலிபோன் ரிஸீவரை எடுத்து லண்டனுக்கு லைனின் நம்பருக்கு ஒரு டிரங்கால் புக் பண்ணினான். "அர்ஜண்ட் கால் ப்ளீஸ் வெரி அர்ஜண்ட்" என்று எப்படியாவது அந்த லைனைக் கொடுக்கும்படி கெஞ்சினான்.

அந்த இரண்டு மணி நேரத்திற்குள் குறிப்பிட்ட நபர் அந்த நெம்பரில் இல்லை என்ற பதில்தான் கிடைத்தது நடராஜிற்கு. இயந்திரமாக ரிஸீவரை வைத்துவிட்டு, கட்டிலில் உட்கார்ந்து கொண்டான் அவன். முகத்தை கரங்களால் மூடிக்கொண்டு கதறினான்.

"ஆண்டவா, என்னதான் நான் தவறு செய்திருந்தாலும் அதற்கு இப்படிப்பட்ட தண்டனையா கொடுப்பது? இரக்கமே இல்லையா உனக்கு? இரண்டு பேரையும் ஒரே சமயத்தில் பறிகொடுத்து விட்டு நான் எதற்காக இன்னும் உயிரோடு இருக்க வேண்டும்? யாருக்காக வாழ வேண்டும்?" வாய்விட்டு அழுது கொண்டிருந்த அவனருகே வந்து அவன் கைகளை விலக்கி முகத்தை நிமிர்த்திக் கண்களைத் துடைத்தாள் ஆர்த்தி.

"அழாதீங்க அப்பா. நான் இருக்கேன் அப்பா உங்களுக்கு. எனக்காக நீங்களும் இருக்க வேண்டும் அப்பா" என்று குரல் வெடிக்கக் கூறிய அவளை இழுத்து அணைத்துக் கொண்ட நடராஜின் உடல் உள்ளம் எல்லாம் சிலிர்த்து அடங்கின.

"ஓ! குழந்தையா இவள்? எல்லாம் அறிந்த ஞானியைப் போல நின்று கொண்டு எப்படிப் பேசுகிறாள்? சிறு பெண்ணின் மனத்திலிருக்கும் பலம் கூட என்னிடம் இல்லாமல் போய[illegible]"

அவ[illegible] மட்டுமே அவன் வாழ்ந்தாக [illegible]. வாழத்தான் போகிறான் அவன்.

[illegible]ளின் கடிதம் பா[illegible]யாய் மூலையில் விழுந்தது-